தமிழ் நாவல் உலகின் தந்தை

9

மாயூரம்

# வேதநாயகம் பிள்ளை



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

தமிழ் நாவல் உலகின் தந்தை

மாயூரம்

# வேதநாயகம் பிள்ளை

புலவர் என்.வி. கலைமணி எம்.ஏ.,

சிவகாமி புக் பப்ளிகேஷன்ஸ்

புதிய எண் : 160, பெரிய தெரு,

திருவல்லிக்கேணி சென்னை-600 005.

விலை ரூ. 30.00

❑ TAMIZHAGA MUNNODIGALIN NAMMAI MEMBADUTHTHUM ENNANGAL ❑ By : N.V. KALAIMANI ❑ First Edition : December 2001 ❑ Price : Rs.30.00 ❑ © Sivakhame Publications ❑ Published By : Sivakhame Publications, 126/108, Usman Road, T.Nagar, Chennai - 17. ❑ Printed at : Sivakami Printo Graphics, 160/117, Big Street, Triplicane, Chennai-600 005. ❑ ✆ 8445051 ❑

தமிழ் நாவல் உலகின் தந்தை

மாயூரம்

# வேதநாயகம் பிள்ளை

தமிழ் நாவல் உலகின் தந்தை

# மாயூரம் வேதநாயகம் பிள்ளை

---

# ''இந்து'' நாளிதழின் தலையங்கம்

**மா**யூரம், மாயவரம், மயிலாடுதுறை என்ற பெயர்கள் மாயவரம் நகருக்கு வழங்கி வரும் திருப்பெயர்களாகும்.

'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயருடைய நம் தமிழகத்திற்கு, பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டில் முதலமைச்சர் ஆனபின்பு, 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டியதைப் போல, மாயவரம் தொகுதியிலே இருந்து தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டிருந்த கிட்டப்பா, மாயவரம் மாநகருக்கு மயிலாடுதுறை என்று பெயரிடப் போராடி வெற்றி பெற்றார்!

கர்நாடக மாநிலத்திலே உள்ள குடகு மலையில் ஆடுதாண்டா காவிரி என்று பெயர் பெற்ற பொன்னியாறு, கர்நாடக மண்ணையும் தமிழகப் பூமியையும் வளமாக்கி வலம் வந்து, இறுதியிலே மாயவரம் நகரருகே வங்கக் கடலில் கலக்கின்ற மாயூரம்! இந்த எழிலார்ந்த நகரிலே வேதநாயகம் பிள்ளை மாவட்ட முன்சிஃப்பாகப் பணியாற்றியதால் - அவர், அந்நகர் பெயராலேயே மாயூரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை என்று அழைக்கப்பட்டார்.

மாயவரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை ஒரு பல்கலை வித்தகர். வரலாற்றுப் புதினம் புனைவதில் வல்லுநர்கள் என்று புகழ் பெற்ற பேராசிரியர்கள் கல்கி, சாண்டில்யன் ஆகியோருக்கு வழிகாட்டியாக விளங்கியவர்!

சட்டத் துறையைத் தமிழ்ப் படுத்துவதில், சட்டத் துறைப் பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியத்திற்கும், அனந்த நாராயணனுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

பெண்ணின் பெருமையைப் போற்றியதில், தமிழ்த் தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனாருக்கும், இந்திய சுதந்திர விடுதலை வித்தகரான அண்ணல் காந்தியடிகளுக்கும் முன்னுதாரணமாக வழிகாட்டியவர் வேதநாயகம் பிள்ளை.

'தமிழ்த் தாயின் தாள்மீது கால் வைப்போன் தலைமீது, என் கால் வைப்பேன்' என்று வீர முழக்கமிட்ட தமிழ் மொழிச் சுதந்திரப் போர் வீரர் நாவலர் எஸ்.எஸ். சோம சுந்தரப் பாரதியாருக்கும், 'தமிழைப் பழிப்பவனை என்தாய் தடுத்தாலும் விடேன்' என்று மொழிப் போர் வீரராய் விளங்கிய பாவேந்தர் பாரதிதாசனாருக்கும் முன் மாதிரியாகத் திகழ்ந்தவர் வேதநாயகம் பிள்ளை.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழிக்கு ஒரு புதிய பாணி மறுமலர்ச்சியை உருவாக்கி, அதை நாடெங்கும் பரப்பிய பேரறிஞர் அண்ணாவுக்கும், தமிழ் இசை வளர்ச்சியில் தன்னேரிலா பற்றாளராக விளங்கி அரும்பாடுபட்ட ராஜா சர் அண்ணாமலை செட்டியார் உணர்ச்சிக்கும் வித்தாக விளங்கியவர் வேதநாகயம் பிள்ளை.

ஆன்மிக சமய வளர்ச்சியில், சைவ சித்தாந்த சண்ட மாருதம் என்ற விருது பெற்ற ஆன்மிக வித்தகர் சோம சுந்தர நாயக்கருக்கும், சித்திரை மாதத்துச் செல்வம் போலக் கோடை இடி முழக்கமிட்டு ஆன்மிக வாதமிடும் ஞானியார் அடிகளுக்கும் ஆன்மீக

ஆணிவேராக ஆழப் பதிந்து நின்றவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

நகைச் சுவை நாயகமாய் மக்களைச் சிரிக்க வைத்து சிந்திக்கச் செய்த திருக்குறளார் முனிசாமிக்கும், திரை உலகில் பகுத்தறிவைச் சிரிப்போடு சிரிப்பாகப் பேசி நடித்து சிந்திக்க வைத்த கலைவாணர் என். எஸ்.கிருஷ்ணனுக்கும் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர் வேதநாயகம் பிள்ளை.

கவிதைகளை அல்லது பாடல்களை எளிய தமிழில் எழுதி மக்கள் மனதிலே பதிய வைக்க முடியும் என்பதற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து புகழ்பெற்றவர்களான மக்கள் கவி சுப்பிரமணிய பாரதியாருக்கும், கவியரசர் கண்ணதாசனுக்கும் ஆதாரச் சான்றாக நின்று வழிகாட்டியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

தனது நீதிமன்றத்துக்கு வரும் சிக்கலான வழக்குகளில், நேர்மையான - நியாயமான - எவர் மனதும் புணபடாத, மனச் சாட்சி மதிக்கின்ற தீர்ப்புக்களை வழங்கிய சென்னை உயர்நீதிமன்ற ஜஸ்டிஸ் சோமசுந்தரம், ஜஸ்டிஸ் மகராஜன் ஆகியோருக்குக் கலங்கரை விளக்கமாய் ஒளிவீசிச் சுழன்றவர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

கர்நாடக இசைத் துறையின் சாகித்தியக் கர்த்தாக்களாக விளங்கிய தியாகய்யர், சியாமா சாஸ்திரி, முத்துசாமி தீட்சிதர் போன்றோரின் மொழி ஆதிக்க வெறியை மறுத்து, தனது தாய்மொழியான தமிழ் மொழியில் சாகித்திய உருப்படிகளை உருவாக்கிய முதல் வாக்கேய காரர் அதாவது தமிழ் மொழியின் முதல் இசைப்புலவர் என்ற இசை வித்தகராக வாழ்ந்து பணியாற்றிய சான்றாளர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை

மெய்யைப் பொய்யாக்கி, பொய்யை மெய்யாக்கி வாதாடி வயிறு வளர்க்கும் வழக்குரைஞர்களுளின் சட்ட மோசடி வாதாட்டத்தை மறுத்து, பொய் வழக்கை ஏற்று வாதாடாமல், உண்மைக்குத் தோள் கொடுத்து, உயிர் கொடுத்து, சட்ட வடிவச் சத்தியத்திற்கு எடுத்துக் காட்டாக திருவாவடுதுறை ஆதின வழக்குக்கு உயிரூட்டி நின்ற வழக்குரைஞர் திலகமாக நடமாடியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

'மேலவர் கீழும், கீழவர் மேலுமாய் சுழல்வது போல, உலகத்தில் இன்று உயர்ந்தோர் நாளை வறியோர் ஆவர் என்ற சமத்துவ மனித நேயத்துக்கு ஊன்று கோலாக நின்று வழுக்கி விழாத ஒழுக்க சீலர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

நீதிபதி பதவியிலே இருந்து ஓய்வு பெற்ற பின்னர், சூரியன் தனது ஒளியால் எல்லாப் பொருட்களையும் பிரகாசிக்கச் செய்வது போல, வேதநாயகம் தன்னுடைய ஒழுக்கமான நடத்தையால், மனித நேய மாண்பால், மாயூரம் மக்கள் குணங்களைத் திருந்தச் செய்து, தனக்கென தனி மாளிகை வேண்டாம் என்று எண்ணி மக்களது மனங்களையே உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்து, மற்ற நகர்மன்றத் தலைவர்களுக்கு எல்லாம் மகுடபதியாக வாழ்ந்து காட்டியவர் மாயூரம் வேத நாயகம் பிள்ளை.

இவை போன்ற எண்ணற்ற குணச்சிறப்புக்களை, செயற்கரிய செயல்களை, மக்கள் மெச்சிய மனிதநேய எண்ணங்களை அவரிடம் எடுத்துக்காட்டாலாம்! மாயூரம் வேதநாயகம் பிள்ளை காலத்தோடு காலமாய் கலந்து விட்டபோது, அந்த பல்கலை மேதை இயற்கையெய்திய நேரத்தில் 'இந்து' நாளேடு ஒரு தலையங்கமே எழுதிப் பிள்ளையை விரிவாகப் பாராட்டியது. ஒரு கிறித்துவ ஞானியின் அறம் சார்ந்த பண்புச் செயல்களை அந்த நாளேடு எவ்வாறு போற்றி மதித்திருக்கிறது என்பதை இன்று எண்ணிப்

பார்க்கும்போதுதான், வேதநாயகம் பிள்ளை மக்கள் மனதுக்குரிய வேத பாடாமாக எவ்வாறு நிலைத்திருந்தார் என்ற அருமையும். பெருமையும் நமக்குப் புரிகிறது.

The "Hindu" -24th July. 1889.

THE LATE **Mr. S. VEDANAYAGAM PILLAI**

We regret to record the death of Mr. Vedanayagam pillai, Pensioned District MUNSIFF, a resident of MAYAVARAM, on the night of the 21st from dropsy.

As District MUNSIFF, he was very popular and discharged his duties with great credit and ability, at a time when Munsiffs of the present type were rere.

He was distinguished also for his independance: he once declined to put up with the treatment accorded to him by a judge, who was then well - known for his idiosyncrasies, and who is now Practicising in the Ma. as Bar. But in Mr. Vedanayagam pillai's case, it was not . .s official life that contribruted to raise him in the estimation o. his country men

He was an erudite scholar of tamil and devoted his life time to the embellishment of tamil literature.. He was a tamil Novelist and tamil poet. His Prose and Poetical works are read with great avidity by the tamil knowing Population.

The great merit of his works was the purity of expression and the moral precepts of which they are so full his ambition was to create a good tamil literature so as to suit the modern taste of his country men, in which he attained eminent administration of the local municipality, over the council of which he presided for several years.

The following are some of his well known productions; 'Penmathimalai', 'Neethinool thiratu', 'Prathaba Mudaliar

charitram', and 'Suguna Sundari' in his death the native Community have lost a worthy citizen, a talented tamil writer, in short, one whose literary attainments and whose earnest longing to improve the social and intellectual condition of his fellow country men have won for him their everlasting gratitude.

The present generation of young men would find in his life much to admire and imitate. The news - will cause great sorrow to all those that are acquainted with him or his writings.

மேலே, 'HINDU' ஏடு எழுதியுள்ள தலையங்கத்தில், வேதநாயகம் பிள்ளையின் சாதனையைப் போற்றி அவரது மறைவுக்கு, தனது ஆற்றாமை வேதனையைக் கண்ணீர்த் துளிகளாக வெளிப்படுத்தியிருக்கிறது.

ஒரு தமிழனுக்கு, ஒரு கிறித்துவ அன்பருக்கு, மதம், இனம், பேதம் ஏதும் காட்டாமல், எல்லா ஆச்சாரப் பண்புகளையும், மறந்து, மனித நேயத்துக்குரிய மாண்பை, மரியாதையை, 'இந்து' நாளேடு தலையங்கம் மூலம் பாராட்டியுள்ளதென்றால், பல்கலை மேதை வேதநாயம் பிள்ளையின் பல்கலை தொண்டுகளும் எப்படிப்பட்ட பண்பாடுடையவைகளாக இருந்திருக்க வேண்டும். ஒரு கணம் எண்ணிப் பார்த்து, அவருடைய பிற வரலாற்றைப் படிப்போம் வருக!

# 2. வேதநாயகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு. (336-குறள்)

'நேற்று இருந்தான் ஒருவன், இன்றில்லை அவன், என்ற பெருமையை உடையது இந்த உலகம்' என்று திருவள்ளுவர் பெருமான் நிலையாமையைப் பற்றிக் கூறினார். அதாவது; செல்வம், இளமை, யாக்கை, உயிர் வாழ்க்கை, இன்பம், துன்பம், அழகு போன்றவை என்றுமே நிலையுடையன அல்ல என்பதை வள்ளுவர் விளக்கியுள்ளதற்கு ஏற்ப, மாயூரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளையும் நிலையாமை ஆழியிலே அழுந்தி மறைந்து போனார்.

ஆனால், அதே வாழ்வியல் விஞ்ஞானி, வாழ்க்கைக்கு வரம்பு கட்டிய இலக்கணத்தை வரையறுத்த போது, "தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்றார்.

பிறக்கும் போதே ஒருவன் புகழோடு பிறக்க முடியாது; அப்படிப் பிறந்தவன் யாரும் இல்லை. இதிகாசத்திலும் சரி, புராணத்திலும் சரி. புகழொடு பிறந்ததற்கு எவனும் ஆதாரமாக இல்லை; அவ்வாறு பிறக்கவும் முடியாது.

அதுமட்டுமல்ல, அழுதுகொண்டே பிறக்கின்ற எல்லாக் குழந்தைகளுமே புகழ்பெறுவது எளிதான ஒரு செயலுமன்று; என்னதான் புகழை நாடி, தேடி ஓடினாலும் அந்தப் புகழுக்கு

எத்தனையோ இடையூறு மலைகள் குறுக்கே நிற்கும். அவை யனைத்தையும் கடந்து சிலர் எய்தலாம் புகழ்; அவர்களிலே அரியர் நமது மாயூரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை.

தமிழகத்தின் மண்ணில், 'திருச்சியிலே இருந்து மதுரை செல்லும் ரயில் பாதையில், திருச்சிக்கு அடுத்த சிற்றூர் வேளாண் குளத்தூர் என்ற சிறு கிராமம். இந்த கிராமம், சோழ மன்னர்கள் காலத்திலும், பாண்டிய வேந்தர்கள் காலத்திலும் 'கோனாடு' என்று அழைக்கப்பட்டது.

சென்னை, குன்றத்தூரில் சேக்கிழார் பெருமான் பிறந்த மண்ணுக்கு அடுத்த ஊர் கோவூர். கோனாடு என்பது போல இது கோவூர். இங்கே தான் கோவூர் கிழார் என்ற சங்க காலப் பெரும் புலவன் பிறந்தார். அதுபோலவே, கோனாடு என்ற இந்தக் குளத்தூர் பகுதி மண்ணிலே தான், எறிச்சலூர் மாடலன் என்ற சங்கப் புலவர் பிறந்தார். எனவே, சான்றோர்கள் பிறந்து வளர்ந்து, ஆடிப்பாடி ஓடிய மண்ணிலே அடுத்து :5லை முறைகள் பிறக்கும் போது விட்டுப் போகுமா? மண்ணின் அறிவு வாசனை?

அந்த மண்வாசனைக்கு ஏற்றவாறு, சவரிமுத்துப் பிள்ளை, ஆரோக்கிய மரியம்மாள் என்ற ரோமன் கத்தோதிக்கக் கிறித்துவப் பெற்றோர்களுக்கு, அருமை மகனாக வேதநாயகம் பிள்ளை 11.10.1828 ஆம் ஆண்டில் பிறந்தார்.

சவரிமுத்துப் பிள்ளை கார்காத்த வேளாளர் சாதியிலே பிறந்தவர். செல்வச் சீமான், குளத்தூர் பகுதிமக்கள் மதிக்கும் அளவுக்கு எல்லா வசதிகளும் பெற்று வாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்.

சவரிமுத்துப் பிள்ளை மனைவியான ஆரோக்கிய மாரியம்மாள் திருச்சி மரிய சவரியா பிள்ளை என்ற டாக்டரின் மகள் ஆவார்.

வேத நாயகம் பிள்ளையின் முப்பாட்டனார் மதுர நாயகம் பிள்ளை. ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். அக் காலத்தில் திருச்சியிலும், மதுரைப் பகுதிகளிலும் ஆற்காட்டு நவாபுகள் சந்ததியினரும், நாயக்க மன்னர்களின் பரம்பரை யினரும், போதாக்குறைக்கு வியாபாரிகளாக வந்த ஐரோப்பிய நாட்டினரும் நாடுபிடிப் போட்டி களிலே ஈடுபட்டிருந்தார்கள் என்பது வரலாறு.

மண்ணாதிக்க வெறி என்றாலே கொள்ளையும் குழப்பமும், உயிர் உடமைகளுக்கு அபாயமும் ஆபத்தும், ஏற்படுவது சகஜமாக இருந்தது. ஓதிய நெறியிலே நில்லாமல் ஒழுக்கம் மறந்துபோன சாதிகள் ஒன்றோடு ஒன்று மோதி அழிவதும் இயற்கை. இவற்றையெலாம் கண்ட மதுரநாயகம் பிள்ளை என்ற மிராசுதாரர் குடும்பம் கிறித்துவ மதத்தைப் பின்பற்றிடச் சேர்ந்துகொண்டது. நாளுக்கு நாள் இயேசு பெருமான் இலட்சியங்கள் மீது அளவிடற்கரிய பற்றும் பக்தியும், பாசமும் அவர்களிடம் வளர்ந்து வந்தது. ஆனால் உறவு முறைகள் சும்மா இருக்குமா?

சைவ விரோதி, கார்காத்த குல எதிரி, கொங்கு ராய கோத்திரத்தின் பழமைக்கும், பண்புக்கும் பகைவன் என்று அன்று ஏளனமாகப் பேசப்பட்டார் மிராசுதார் மதுரநாயகம் பிள்ளை. அவரைச் சாதிக்கட்டுப்பாடு செய்து ஊரிலே ஒதுக்கிவைத்தார்கள். எதற்கும் அஞ்சாமல், சாதுரியமாகவும், சாமர்த்தியமாகவும், பெரிய வணிகப் பிரபு ஆகவும், ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் பரோபகாரியாகவும் ஊர்மெச்ச அக்கம் பக்கம் கிராமத்து மக்கள் மதிக்கும் வகையில் செல்வாக்குடன் வாழ்ந்தார். இத்தகைய ஒரு பணம் படைத்த குடும்பத்திலே மதுர நாயகத்தின் மகள் வயிற்றுப் பேரனாகப் பிறந்தார் நமது வேதநாயகம் பிள்ளை.

கி.பி. 1606-ஆம் ஆண்டில் ராபர்ட்டி நொபிலி என்பவர். தத்துவப் போதகர் என்ற தமிழ்ப் பெயரோடு ராமநாதபுரம் சேதுபதி

மண்ணிலே இயேசு சங்கத்தை ஆரம்பித்தார். அப்போது தஞ்சையிலே மராட்டிய ஆட்சி நடந்து கொண்டிருந்தது. ஷாஜி என்ற அந்த மராட்டிய மன்னன் கிறித்தவர்களுக்கு கொடுமைகள் பல செய்தான். அவனது கொடுமைகளை அனுபவிக்க முடியாமல் Father Joseph, Carvalto, Father Michael பெர்ட்டோல்டி என்பவர்களில், முன்னவர் சிறையிலேயே மாண்டார். பின்னவர், கடுமையான சித்ரவதைகளுக்கும் ஆளானார்.

இதே நேரத்தில் சேதுநாடு பகுதிகளை அரசு புரிந்த கிழவன் சேதுபதி என்ற குறுநில மன்னனது ஆட்சியிலே ஜான்.டி.பிரிட்டோ (John D Britto) என்பவர் பதைபதைக்கப் படுகொலை செய்யப் பட்டார். இந்தச் செய்தி மறவன் சீமை முழுவதும் பரவி ஒருவித பரபரப்பை உருவாக்கியது. இதுபோன்ற பரபரப்பூட்டும் சம்பவங்களால், இயேசு சங்கம் நூறே ஆண்டில் ஒன்றரை லட்சம் தமிழ்மக்களைக் கிறித்தவர்களாக்கியது.

இவ்வாறு, தமிழ்க் கிறித்தவர்களானவர்கள், ராமைய நாயக்கண்பட்டி, மலையாண்டிப்பட்டி, ஆவூர், வடுகர்பட்டி, ஏலாக்குறிச்சி, ஐயம்பேட்டை போன்ற கிராமங்களிலே இயேசு சங்கத்தை உருவாக்கினார்கள்.

கிறித்துவ சமயத்தைப் பரப்பவந்த பாதிரிமார்கள், தமிழ்நாட்டுப் பண்புப்படி மது, மாமிசங்களை மறந்தார்கள். ஐரோப்பியப் பெயர்களை மாற்றி தமிழ்ப் பெயர்களை வைத்துக் கொண்டார்கள். பெங்கி, வீரமாமுனிவர் ஆனதுபோல.

தமிழத் துறவிகளைப்போல, கமண்டலம், ஏந்தி, குண்டலம் பூண்டு, காவியுடுத்தி பிரச்சாரம் செய்தார்கள். இப்படிப்பட்ட ஆவூர் இயேசு சபையிலேதான் வேதநாயகம் பிள்ளையின் முப்பாட்ட னாரான மதுரை நாயகம் பிள்ளையும் ஞானஸ்நானம் பெற்றுக் கிறித்தவரானார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை நாயகம் பிள்ளையின் வழிவழிமுன்னோர்கள் வேளாண் குளத்தூரில் செந்தமிழ் வேந்தர்களுக்கு முடிசூட்டும் விழாக்களிலே முதன்மை அதிகாரம் பெற்றவர்கள். அதனால் அவர்கள் வாழ்ந்த நாடு கோனார் என்ற பெயரைப் பெற்றது என்பதை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தனது குளத்தூர் கோவை என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார். அந்த மரபிலே வழிவழியாக வந்தவர் நமது மாயூரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை ஆவார்.

## வேதநாயகம் கல்வி அவர் நூல் பேசுகிறது!

''முகக் கண்கள் இருந்தும், சூரிய ஒளி இல்லாவிட்டால் பயன் உண்டா? அதுபோலவே அகக் கண்ணுக்கு எண்ணும் எழுத்தும் ஒளியூட்டுவனவாகும். கல்வி தான் அகக்கண்களுக்குரிய ஒளி.

வயல் நிலங்களை உழுது, வெட்டித் திருத்தி, விதைத்து, நீர்ப்பாய்ச்சி, களையகற்றி சாகுபடி செய்கிற நிலம் மட்டுமே பலன் கொடுக்குமே அல்லாது; சீர்திருத்தம் செய்யப்படாத வயல் பயன்தருமா? திருத்தாத நிலம், கல்லும் முள்ளும், புல்லும் புதருமாகப் பெருகிக் கெட்டுப் போவது போல, கல்விப் பயிற்சி இல்லாத மனம், தீயக் குணங்கள் நிறைந்து கெட்டுப் போகாதா? என்று வேதநாயகம் பிள்ளை தான் எழுதிய தமிழ்மொழியின் முதல் நாவலான ''பிரதாப முதலியார் சரித்திரம்'' என்ற நூலில் தான் கற்ற கல்வி எப்படி அமைந்தது என்பதை அவரே, முதலியாரை விட்டு நம்மிடையே பேசவைத்து விளக்குகிறார். இதோ முதலியார் பேசுகிறார்.

''எட்டாம் வகுப்பு எட்டிப் பார்க்கிறவரை, நான் படிப்பருமை தெரியாதவனாக இருந்தேன். என் தாயாருடைய நச்சரிப்புப் பொறுக்க முடியாமல், எனது தகப்பனார் என்னை ஒருநாள் அழைத்து, ''உனது அம்மா உன்னைப் பள்ளியிலே படிக்க அனுப்பிவைக்க வேண்டும் என்கிறாள், நீ என்ன கூறுகிறாய்?'' என்று கேட்டார்.

''ஐயா, நான் படிக்க வேண்டுமா? எனக்கு இருக்கிற சொந்தப் புத்தி போதாதா? ஏழைகள் குடும்ப சீவனம் நடத்திட கல்வி அவசியம் தான். அதற்காக நானும் படிக்க வேண்டுமா?'' ''ஏதாவது படிக்க, எழுத அவசியம் நேரிட்டால்'' அதற்குத்தான் கணக்குப் பிள்ளைகள் இருக்கிறார்களே, போதாதா?'' என்றேன்.

நான் இதை எனது சொந்தப் புத்தியால் கூறவில்லை. எனது பாட்டி அடிக்கடி இந்த வார்த்தைகளைச் சொல்லியிருப்பதைக் கேட்டவன் நான். அதனால் இப்படிக் கூறிவிட்டேன். இதைக் கேட்ட எனது தந்தை ஒரே மகிழ்ச்சியடைந்தார். என்னமோ நான் எனது சொந்த புத்தியால், கம்பீரமாக, தைரியமாக, சாதுரியமாக, சாமர்த்தியமாகப் பேசிவிட்டதாக எனது தந்தை, உற்றார், உறவினர், தாயார், பாட்டி உட்பட அனைவருமே ஆச்சரியப்பட்டு என்னை முத்தமிட்டு ஆரவாரம் செய்து அவர்கள் மகிழ்ச்சி பெற்றார்கள்.''

என்னுடைய பாட்டியாரும் என்னைக் கட்டித் தூக்கிக் கொண்டு, என் கண்ணே, பொன்னே! இவ்வளவு சாமர்த்தியாகப் பேச யாருக்காவது வருமா?'' என்று நான் மூச்சுக்கூட விடமுடியாதபடி இடமில்லாமல், வாயாலும், பல்லாலும் பல முத்தங்கள் கொடுத்தாள்'' எப்படிப்பட்ட நகைச்சுவையோடு பேசுகிறார் முதலியார்? பார்த்தீர்களா?

வேதநாயகம் பணக்காரர் வீட்டிலே தான் பிறந்தார்! ஆனால், அவரது வளர்ப்பு அப்படியில்லை. பெற்ற தாயான ஆரோக்கிய மரியம்மாள் தனது மகனின் கல்வி வளர்ச்சியிலே மிக அக்கறை யுடன் கவனம் செலுத்தினார். தகப்பனாரும் தனது மகனை மிகவும் அருமையாக வளர்த்து, அக்கறை காட்டினார்.

பெற்றோர் இருவரும் இவ்வாறு அன்பு பாராட்டி அருமையாக வேதநாயகத்தை வளர்த்ததால், அவரும் நலமான உடலுடன், கனிவான உள்ளத்துடன், மதிநுட்பத்துடன், குணமாண்புடன் வளர்ந்தார்.

எந்தவிதக் கட்டுப்பாடும், கௌரவக்குறைவும் இல்லாமல் வளர்ந்த வேதநாயகம் சிறு பருவத்திலேயே கூர்மையான அறிவும், சமயத்திற்கேற்றவாறு நடக்கும் தந்திரோபாயமும், விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கு ஏற்றவாறு, அவரது ஒழுங்கும் ஒழுக்கமும், உண்மையும் உணர்ச்சியும் கண்டவர்கள் பிற்காலத்திலே மக்கள் போற்றுமாறு புகழ்பெறுவான் என்று நம்பினார்கள்.

மக்கள் நம்பிய நம்பிக்கைக்கு ஏற்றவாறு வேதநாயகம், நாளடைவில் நற்குண நற்செயல்கள் உள்ளவராயும் விவேகமும் வித்தகமும், எல்லா மத, இண மக்களும் போற்றுமாறு சமயச் சார்புடைய சன்மார்க்கராயும் வளர்ந்தார்; மேன்மை பெற்றார்; அதற்குக் காரணம் அவரது பெற்றோர் வளர்த்த, காட்டிய ஆரம்பகால இளமைக்காலப் பயிற்சியே ஆகும்.

இளமைப் பருவக் காலத்திலே அவர் தனது பெற்றோர் களிடத்தும், மற்றவர்களிடத்தும், தமிழ் கல்வி கற்றார். ஓரளவு பெற்ற தமிழ்க் கல்வியைக் கொண்டே ஆங்கில மொழியையும் கற்றார். அப்போது வயது பதினொன்று! அக்காலத்தில் ஆண் பாடசாலையோ பெண் பாடசாலையோ கிடையாது. இங்கிலீஷ் மொழி கற்றவர்களும் மிகச் சிலரே!

திருச்சிராப்பள்ளி என்ற மாநகரிலே தியாகப் பிள்ளை என்று ஒருவர் இருந்தார். அவர், இங்கிலீஷ், தமிழ் இரு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றக் கல்வியாளர். தென் மாநில நீதிமன்றத்திலே அவர் ஆங்கிலம்-தமிழ் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றி னார். அவர், வேதநாயகம் தந்தையான சவரிமுத்துப் பிள்ளைக்கு மிகவும் நெருங்கிய நண்பராவார்.

சவரிமுத்துப் பிள்ளை பரிந்துரை காரணமாக வேதநாயகம் தியாகப் பிள்ளையிடம் ஆங்கிலம் கற்று வந்தார். விரும்பியபடி

எழுதிட, பேசிட அந்த இரண்டு மொழிகளிலும் நல்ல வல்லவராய் விளங்கினார். ஆங்கிலம் கற்றுக்கொண்டிருக்கும்போதே அவர் தமிழில் பாக்கள் எழுதவும், செய்யுள் புனையவும் ஆர்வம் காட்டி நாள்தோறும் எழுதிவந்தார். அதனால், அவரை இளம்கவிராயர் என்று கிறித்துவ மக்களும், வேதநாயகர் நண்பர்களும் அழைத்து உற்சாகமூட்டி வந்தார்கள்.

அவர்களது உசுப்பலுக்கு ஏற்றவாறு வேதநாயகம் இலக்கண, இலக்கிய, சமுதாய உணர்வுகளைப் பிழையின்றியும், வேடிக்கையாகவும் கிண்டலாகவும், நகைச்சுவையாகவும், குத்தலாகவும், கண்டனமாகவும், அறிவுரையாகவும், நலுங்குப் பாடலாகவும், நாடகப்பாடலாகவும், இசையாகவும், வசையாகவும் பலவாறு பாடிப்பாடி, அதுவும் சம்பவ உணர்ச்சிகளுக்கு ஏற்றாற் போல 'பா' இயலின் இயல்பறிந்து இலக்கியப் பண்புடன் பாடிக்கொண்டே இருந்தார். இதோ பாருங்கள் வேதநாயகம் பிள்ளை பாடும் திருமண நலுங்குப் பாடலை; அதாவது கலியாண நிகழ்ச்சியின் போது மைத்துனரைப் பரிகாசிக்கிறார்; மாப்பிள்ளையை விடப் பரிகாசத்துக்குரியவர் வேறு யார்?

மைத்துனரே
இன்று முதல்
மகராசர் நீரே.

கொத்தார் குழலி
எங்கள் குயிலைக்.
கொண்டீரே - மைத்துனரே....

உழவுத் தொழில் செய்துமக்(கு)
உடம்பெல்லாஞ் சேறு
ஊத்தை கழுவப் பற்றுமோ ஒன்பதாறு.

பழங்கூழ் உண்ட உமக்குப் பாலுடன் சோறு
பயப்படார் திரும்உமக்(கு)
ஆயுசு நூறு - மைத்துனரே...

எருமையும் நுழையும் உம (து)
இரு காதின் தொள்ளை
இனி, உமக்கு வச்சிரக்
கடுக்கண்கள் கொள்ளை

ஒருவகையும் இல்லாமல்
உற்றீரே சள்ளை
ஊர்அதிபதிக் கிப்போது
உகந்தமாப் பிள்ளை-மைத்துனரே...

## *பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்!*

வேதநாயகம் இளமையில் கல் என்ற அவ்வைப் பெருமாட்டியின் அமுதமொழிக்கேற்றவாறு, காலத்தோடு கற்கும் கல்வியைக் கைவிடாமல், கவனத்தோடு, கருத்தூன்றிப் படித்தார். கற்க வேண்டிய நூல்களைக் கற்று, அதன்படி நின்று சிந்தித்து, சிந்தனையின் சீரிய தெளிவால் அறிவு ஒளிகளைப் புதிதுபுதிதாகப் பெற்றார். 'பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்' என்பது பழமொழியாகையால் அதற்கேற்ப பெரும் பேரறிவாளராய் புகழ்பெற்று, யாதானும், நாடாமல், ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு என்ற, குறட்பாவிற்கேற்றவாறு அவர் சாகும்வரை படித்துக் கொண்டே இருந்தார்.

இதோ, வேதநாயகம் பிள்ளை தான் எழுதிய தினத்தின் வாயிலாக, பிரதாப முதலியாரை நம்மிடையே பேசவிடுகிறார் கேளுங்கள்:-

''ஒரு நாள் ஆசிரியர் என்னை நோக்கி, ஆசான் மாணவனுக்கு எவ்வளவு போதிக்கலாமோ அவ்வளவு நான் உனக்குக் கற்பித்து விட்டேன். நீயே இனி படிக்க வேண்டும். கல்வியில் நிரம்ப வேண்டும். ஆசானுடைய போதகம் முடிந்தபின்பு, கல்வியும் முடிந்து போனதாகச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி எண்ணுவது தப்பு.

உண்மையை உரைக்க வேண்டுமானால், பாட சாலையை விட்ட பிற்பாடுதான் படிப்பு ஆரம்பிக்கின்றது. ''பள்ளிக்கணக்குப் புள்ளிக்கு உதவா'' என்பதுபோல, பள்ளிக்கூடத்திலே கற்கிற கல்வியை வளர்க்காமல் போனால், அக் கல்வி ஒன்றுக்கும் பயன்படாது.

பாடசாலையிலே கற்கின்ற கல்வி அஸ்திவாரமாகவும், பள்ளிவிட்ட பிறகு தானே படிக்கிற படிப்பு, மேற்கட்டிடத்துக்குச் சமானமாயும் இருக்கின்றது. ஓரூருக்குப் போகிற வழியைக் காட்டுவதுபோல, கல்வி கற்க வேண்டிய வழியை மட்டும் ஆசிரியர் போதிப்பதோ அல்லது கல்வியை முழுமையாய்க் கற்பிப்பதோ சாத்தியமல்ல.

பூட்டி வைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு திறவுகோல் கொடுப்பது போல, எந்தப் புத்தகத்தை வாசித்தாலும், பொருள் தெரிந்து கொள்ளும்படியான ஞானத்தை உனக்குப் போதித்து, வித்தியா பொக்கிசத்தின் திறவுகோலை உன் கையிலே கொடுத்துவிட்டேன்.

இனிமேல், நீ உன்னுடைய முய சியால் அதைத் திறந்து, அனுபவிக்க வேண்டுமே அல்லாது, நா செய்யத்தக்கது ஒன்றுமே இல்லை. அரும்பதங்களுக்கு அருத்தம் தெரிய வேண்டுமானால், அகராதி, நிகண்டுகள் இருக்கின்றன

திருவள்ளுவர்,. கம்பர் முதலிய மகாவித்துவான்கள் தங்களுடைய சுயமுயற்சியால் கவிசிரேட்டர்கள் ஆனார்களே தவிர, ஆசிரியர்களிடத்து அவர்கள் கற்றுக் கொண்டது அற்பமாகவே இருக்கும். அந்த வித்துவான்கள் எல்லோரும் மானிடப் பிறப்பே. அல்லாமல் தெய்வீகம் அல்லவே? அவர்களைப் போல நீயும் முயன்று கல்விகற்றால் அவர்களுக்குச் சமானம் ஆவதற்கு ஆதங்கம் என்ன?

பள்ளிக் கூடங்களிலே பயிற்சியை முடித்து வெளியேறு கிறவர்களுக்கு எத்தகைய அறிவுரை இது! நம்மவர் பெரும்பாலும் பத்திரிகைகளைப் புரட்டுவதே அன்றிப் புத்தங்களைத் தொடவும், தற்போது கூசுகின்றார்கள். பத்துவருடம், பதினைந்து வருடம் கல்லூ ரிகளிலே பயின்றும் பரீட்சைகள் பலவற்றுக்குப் படித்தும், படிப்பது ஒரு பழக்கமாக நம்மவர்க்குப் பிடிபடவில்லை.

படித்தளவும் உடலிலே ஒட்டவில்லை; உள்ளத்தில் ஊறவில்லை; கலாசாலைகளுடன் கல்வியும் முடிந்ததாகவே அவர்கள் கருதுகிறார்கள், கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு; என்பதை அவர்கள் எண்ணுவதில்லை. இருபதாவது வயதளவிலே எய்திய பி.ஏ.அளவிலேயே அவர்கள் அமைந்து விடுகிறார்கள். கல்வியிலே இவர்கள் வளர்ச்சி எய்துவதும் இல்லை. இது வருந்தத் தக்கதே.

## *கல்வியின் பயன் கடவுளை அறிவதே!*

கடந்த நூற்றடிலே வாழ்ந்த ஐரோப்பிய நாடுகளில் தோன்றிய அறிஞர்சிலர், பழுத்த நாத்திகத்தைம் பகுத்தறிவு என்று பரப்பி வந்தனர். இவர்களிலே முக்கியமானவர்கள் யார்? யார்? தெரியுமா? டார்வின் - Darwin, அக்சிலி - Huxley, ஸ்பென்சர் - Spancer, டிண்டால் - Tindal ஆங்கிலம் கற்ற தமிழர் சிலரும் இந்த அறிஞர்கள் எழுதிய நூல்களையே விரும்பிப் படித்தார்கள்.

அதனால் கடவுள் இல்லை; உலக சுகமே சுகம் என்ற உலகாயுத எண்ணங்கள், பக்திக்கு வளர்ப்புப் பண்ணையான தமிழ் நிலத்திலும் தலை எடுத்து, மேற்கண்ட பகுத்தறிவு வாதிகள் உலகுக்கு ஒரு மதம் அவசியந்தான்; சமய உணர்வு இல்லாவிடின் ஒழுக்கம் கெடும் என்று ஒப்புக் கொண்டார்கள்.

காலின் (Collin) என்பவர் ஒரு நாத்திகர்; அவர் தம்முடைய வேலைக் காரர் தம்மைக் கொலை செய்யாமல் இருக்கவேண்டுமே என்பதற்காக அவர்களைக் கோயிலுக்குப் போகும்படி வற்புறுத்தினார்.

அக்சிலி - Huxley என்பவர் மற்றொரு நாத்திகர். பைபிளைப் பள்ளிக் கூடங்களிலே பயிற்றுவிக்க இவர் முன்வந்தார். சமய விரோதி என்று தம்மைச் சொன்னால் டிண்டால் - Tindal சண்டைக்கு வருவார். இவ்வாறு இவர்களது சொல்வேறு, செயல் வேறாக இருந்தது. ஆனால், இவர்களைப் பரமகுருவாகக் கொண்ட நம்மவர் நாகரிகம் என்று இங்கிலீஷ்காரர் நடையுடை பாவனைகளைக் கடைப்பிடித்து வந்தனர். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கொள்கையில் முனைந்து நின்றார்கள். இவர்களுக்கு மாறாக, வேத நாயகம், ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு என்று கடவுள் பக்தியோடு சமய உணர்வும் உடையராய் ஓதிய நெறியிலே நின்று ஒழுக்கத்திலும் உயர்ந்தார்.

கல்வியின் பயன் என்ன? வேதநாயகம் பிள்ளையைக் கேட்டதற்கு அவர்கூறிய பதில் என்ன தெரியுமா? கடவுளை அறிவதுதான் கல்வியின் பயன் என்றார்.

மறைகள், வேதங்கள் , இதிகாச நூல்கள், புராணங்கள் எல்லாமும், சமயவாதிகள் அனைவரும் கூறுவதும் கடவுள் என்ற பொருளைத் தவிர வேறு எதுவுமல்ல. சிறந்த கல்வி மானுக்குத் தெய்வ பக்தியே சிறந்த லட்சணமாகும்.

‘ஒவ்வொரு நிமிடமும் கடவுளிடத்திலே நாம் பெற்றுக் கொள்கிற உபகாரங்களுக்குக் கணக்கு உண்டா? நாம் உண்பது அவருடைய அன்னம்; அணிவது அவருடைய வஸ்திரம், குடிப்பது அவருடைய சலம், நாம் வசிப்பது அவருடைய வீடு; சஞ்சரிப்பது அவருடைய பூமி; நாம் சுவாசிப்பது அவருடைய சுவாசம், நாம் காண்பது அவருடைய பிரசாசம், நாம் அனுபவிப்பது அவருடைய சுகம்; இந்த சகல சுகங்களை அனுபவிக்கிற நமது தேகமும்; பஞ்சேந்திரியங்களும் ஆத்மாவும் அவருடைய கொடை; அவருடைய கிருபை இல்லாவிட்டால் ஒரு நிமிடம் நாம் சீவிக்கக் கூடுமா?

கடவுள் நம்மை நடப்பிக்கா விட்டால். நாம் நடக்கக் கூடுமா? பூமியைப் பார்த்தாலும், ஆகாசத்தைப் பார்த்தாலும், எங்கே பார்த்தாலும், எங்கே பார்த்தாலும், அவருடைய உபகார மயமே அன்றி வேறுண்டா? ஆகாயம் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன; சமுத்திரத்திலே பிறந்து; மீன்கள் போலக் கடவுளது கிருபா சமுத்திரத்துக் குள்ளாகவே நாம் ஜனித்து வளர்ந்து வாழ்கின்றோம் என்றார்.

# 3. ஐகோர்ட் தீர்ப்புக்களை தமிழில் நூலாக்கினார்!

இப்போது நமது பிள்ளைக்கு என்ன வயது தெரியுமா? இருபத்திரண்டு! ஆங்கிலத்திலும், தமிழிலும் பெரும் புலமை பெற்றிருந்ததாலும், புத்திக் கூர்மையுள்ளவராகத் தெரிந்ததாலும், மேஸ்தர் கார்டன் என்பவர், முதன்மை நீதிபதியாக திருச்சி மாநகரில் 1838 ஆம் ஆண்டில் பணியாற்றியவர், அவர் வேதநாயகத்தைப் பற்றிக் கேள்விப் பட்டு திருச்சி நீதிமன்றத்தின் பணி மனையிலே பத்திரப் பாதுகாவலராக அவரை நியமித்தார்.

அதே நேத்தில் கி.பி. 1850 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்ட நீதிமன்றத்திலே மொழிபெயர்ப்புப் பணி காலியாக இருந்தது. பத்திரப் பாதுகாவலராகப் பணியாற்றி வந்த வேதநாயகம், அக் காலியிடத்துக்கு விண்ணப்பம் செய்தார். வேறுசிலரும் அதே பணிக்கு மனுப்போட்டிருந்தார்கள். மேஸ்தர்பாய்லோ மாவட்ட நீதிபதி. அவர் நேர்மையானவர், திறமையானவர், மேஸ்தர் பாய்லோ மனுப்போட்வர்களை எல்லாம் அழைத்து நேர்முக விசாரணை நடத்தினார். மொழி பெயர்ப்பாளராக வேதநாயகம் பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டு, அதிலே முதன்மைத் தகுதியோடு நியமனமானார்! இதனால் வேதநாயகத்துக்கு, பல நீதிபதிகளின் அன்பும் ஆதரவும் கிடைத்தது.

திருச்சி மாவட்ட நீதிமன்றத்திலே தமிழிலே உள்ளதை ஆங்கிலத்திலும், இங்கிலீஷில் உள்ளதைத் தமிழ்படுத்து

வதிலுமான மொழி பெயர்ப்புப்பணி அதிகமாக இருந்தது. மொழி பெயர்ப்பு வேலை செய்யும் போது, அதனதனில் பொருள் முரண் ஏற்பட்டு விடக் கூடாது. ஏனென்றால், அவையனைத்தும் நீதிமன்றத் தீர்ப்புகள். எனவே, பொறுப்பாக மொழிபெயர்க்கும் ப்ணி என்பதனால், அந்த வேலைக்கு வேதநாயகம் தான் தகுதியானவர் என்பதறிந்து நீதிமன்றம் அவரையே நியமித்தது.

இவ்வாறு அமர்த்தப்பட்டதானது, பிற்காலத்தில் தமிழ் நாவல் எழுதும் பணிக்கு, இந்த மொழி பெயர்ப்புப் பணி அவருக்கு வசதியாகவும், சுலபமாகவும் அமைந்தது. அதனால் தான், தமிழில் அவர் வசனநடை எழுதுவதிலே மிக நல்ல தேர்ச்சிப் பெற்றவராக விளங்கினார்.

சிவில், கிரிமினல் சட்டங்கள் அப்போர்து தமிழ்நாட்டுக்குப் புதிய பணிகளாகப் புகுந்தன. அதற்கு முன்பு இந்த சட்ட நுணுக்கப் பணிகளுக்கான விதிமுறைகள் இயற்றப்படவில்லை. அதனால், மனுநீதி போன்ற பழைய நூல்களிலிருந்து சிவில், கிரிமினல் விவகாரம் பற்றிய விதிமுறைகள் சென்ற ,லை முறையிலே தொகுக்கப்பட்டு வரையறை செய்யப்பட்டன.

இவ்வாறு தொகுக்கப்பட்டவற்றை நிர்வாகம் செய்ய, நீதி மன்றங்கள். சிறைக்கோட்டங்கள் உருவாகின. அவற்றை வாதிப்பதற்கு வழக்குரைஞர்கள் தோன்றினார்கள். சட்டங்களின் நுணுக்கங்களையும், சிக்கலான தீர்ப்புகளையும் பொதுமக்கள் அறிய வேண்டியது அவசியமாயிற்று. அதனால், மொழி பெயர்ப்பாளர் பணியிலே அமர்த்தப்பட்ட வேதநாயகம் அவற்றை எல்லாம் முதன் முதலாகத் தமிழிலே மொழி பெயர்த்து நூல்களாக வெளியிட்டார்.

இவ்வாறு கி.பி. 1805 ஆம் ஆண்டு முதல 1861 ஆம ஆண்டு வரை அதாவது 56 ஆண்டுக்காலம் வரை இலைமறை காய்போல

இங்கிலீஷ் மொழியிலே இருந்த சதர்ன் கோர்ட் தீர்ப்புக்களைத் திரட்டினார்; தமிழில் மொழி பெயர்த்தார். 'சித்தாந்த சங்கிரகம்' என்ற பெயரிலே 1862 ஆம் ஆண்டில் அவற்றை நூலாக வெளியிட்டார் வேதநாயகம். சித்தாந்தம் என்றால் சட்டம், சங்கிரகம் என்றால் தொகுப்பு. அதனால் அப்பெயரிலே அவற்றை வெளியிட்டார்.

அவர் அந்த நூல்களை வெளியிடுவதற்கு முன்பு, அது போன்ற தமிழ் சட்ட நூல்கள் இருந்ததில்லை. எனவே, வழக்குகளிலே வாதமிடும் வழக்குரைஞர்களுக்கு அந்த நூல்கள் ஒரு புதையல் போலப் பயன்பட்டன. சட்டத்துறையில்,அன்றுவரை, அப்படிப் பட்ட சட்ட நுணுக்க நூல்களே கிடையாது. வேதநாயகம் தான் முதன் முதலில், தமிழ் மொழியில் அவை போன்ற நூல்களை அரும்பாடுபட்டு தயாரித்து வெளியிட்ட முதல் தமிழறிஞர் ஆவார்.

கி.பி. 1862, 63 ஆம் ஆண்டுகளின் தீர்ப்புக்களையும் திரட்டி, தமிழ்ப் படுத்தி, 1864 ஆம் ஆண்டிலும் அதே சட்ட நூல்களை வெளியிட்டார். இவைதான் சட்ட நுணுக்கங்களைப் பற்றித் தமிழிலே வெளிவந்த ஆதி நூல்கள். இப்படிப்பட்ட சட்ட நூல்கள் அதற்கு முன்பு வெளிவந்தது இல்லை; அதற்குப் பிறகும் வெளிவரவில்லை; வெளிவந்த அந்த நூல்களும் இன்று கிடைக்கவுமில்லை.

திரட்டிய அந்த நீதிமன்றத் தீர்ப்புகளை எல்லாம் அவர் ஒருவரால் எழுத முடியவில்லை. அவ்வளவு தீர்ப்பு முடிவுகள் மலைபோலக் குவிந்து கிடந்தன. இருந்தாலும், வேதநாயகம் அவற்றை ஆராய்ந்து அல்லும் பகலும் படித்துக் கொண்டே இருப்பார். தனது சொந்தப் பணத்தில் சம்பளத்துக்கு ஓராளை நியமித்து, வேதநாயகம் அவற்றை மொழி பெயர்த்துத் தமிழில்

சொல்லச் சொல்ல, சம்பளப் பணியாளர் அதை எழுதிக் கொண்டே வருவார். அந்த நூல்கள் தமிழில் வெளிவர அவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டு வேதநாயகர் பணியாற்றினார்.

மாவட்ட நீதி மன்றத்திலே குற்ற வழக்குகள் விசாரணை நடக்கும் போது, வேதநாயகர் நீதிபதி அருகே அமர்ந்து, காசியார் பத்து வாக்குக் Kasiyar Pathuwak கொடுப்பது வழக்கமாகும். முஸ்லிம் ஆட்சி நடை பெறும் போது, அதே காசியார்கள் நீதி வழங்கிடும் முறை இருந்தது. முஸ்லிம் ஆட்சி இங்கீஷ்காரர் ஆட்சிக்குள் வந்தபோது, முன்பு நடந்த முஸ்லிம் ஆட்சிகளின் வழக்கம் போலவே, ஆங்கில நீதி பதிகள் அருகே காசியார்கள் அமர்ந்து நியாய வழக்கிலே உதவி செய்வார்கள்.

ஆங்கில நீதிபதியினுடைய கருத்துடன் காசியார் கருத்து மாறுபட்டால், அது போன்ற வழக்குகளை ஆங்கில மொழியில் பெயர்த்து சதர்ன் கோர்ட்டார் முடிவுக்கு அதை அனுப்பி விடுவார்கள். இது அப்போதிருந்த நீதிமன்ற முறைமையாகும்.

இவ்வாறு நடந்த பணிகளில் வேத நாயகம் ஓய்வு ஒழிச்சலின்றி ஈடுபட்டபோது,இந்துக்களுக்கும் - முஸ்லீம்களுக்கும் இடையிலே கருத்து வேறுபாடுகள் உருவானது. அதனால், பல வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்திலேயே அப்போது நடந்து வந்தன.

பல வழக்குகளில் நீதிபதியின் கருத்துக்கு முரணாகக் காசியார் கருத்து இருந்தது. அதனால், அவற்றை எல்லாம் ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து நீதிபதியின் ஒப்புதலுக்கு முன்வைத்தார் வேதநாயகம்.

அப்போது நீதிபதியாக இருந்தவர் மேஸ்தர் டேவிட்சன். அவர் மாறுதலாகி வேறு இடத்துக்குப் போய்விட்டார். அதனால், ஒப்புதலுக்காக வேதநாயகர் வைத்த மொழி பெயர்ப்புக்களைப் பார்வையிட அப்போது அவரால் இயலவில்லை. நிதானமாக

அவற்றைப் பார்த்துக் கையொப்பம் இட வேண்டும் என்பதற்காக, அவற்றைத் தம்முடன் எடுத்துக் கொண்டு போனார். சென்ற இடத்திலே அந்த நீதிபதி நோய்வந்து இறந்துவிட்டார்.

தங்களுக்கு அனுப்பப் பட்டிருந்த கலக வழக்குகளின் ஆவணங்களைப் பரிசோதித்து உரிய மொழி பெயர்ப்புக்களை ஏன் அனுப்பவில்லை என்று சதர்ன்கோர்ட்டார். மாவட்ட நீதி மன்றத்தினரைக் கேட்டார்கள்.

அந்த நேரத்தில் மாவட்ட நீதிபதியாக இருந்தவர் மேஸ்தர் கிரீன்வே என்பவராவார். அவர் ஒரு முன் கோபி, அவசரக்காரர். அதனால், நடந்த விவரங்களைச் சரியாக விசாரணை செய்யாமலேயே, ஆவணங்களை அனுப்பாதது வேத நாயகர் தவறு என்றும், அதற்காக அவரை வேலை நீக்கம் செய்துவிட்டோம் என்றும் பதில் எழுதிவிட்டார்.

இதற்குப் பிறகு வேத நாயகர், மேஸ்தர் டேவிட்சன் இறந்த விவரத்தையும், நடந்த மற்ற சம்பவங்களையும் விளக்கி சதர்ன் கோர்ட்டாருக்கு எழுதி! தண்டனையிலே இருந்து தன்னை விடுவித்து, மீண்டும் பணியிலே அமர உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பல மாதங்களாகியும் வேதநாயகர் வேண்டுகோள் கவனிக்கப் படாமல் போயிற்று.

வேதநாயகர் இப்போது வேலையை இழந்தார். வேதனை அவரை வாட்டிற்று; குத்திருமல் என்ற இருமல் நோய் அவரைப் பற்றித் தொல்லைப் படுத்தியது. நோயோடு போராக் கொண்டிருந்த நேரத்தில் அவரது படுக்கையிலே இருந்த சிறு பாம்பு ஒன்று அவரைத் தீண்டிவிட்டது.

ஒருநாள் அவர் வண்டியில் சவாரி போகும் போது, வண்டி எதிர் பாராமல் குடை சாய்ந்தது. இவ்வாறு ‘பட்ட காலிலே படும் கெட்ட கடியே கெடும்’ என்பதற்கேற்ப, துன்பத்தின் மேல் துன்பம் அவரைத்

தொடர்ந்து சூழந்து வேதனைப் படுத்தியது. இவற்றை எல்லாம் கர்த்தர் இயேசு பெருமான் மீது பாரத்தைப் போட்டுப் பிரார்த்தனை யோடு ஜபம் செய்து வந்தார். இதனால், அவர் 'துன்பம் தான் ஞானத்தின் பள்ளிக் கூடம், துன்பப் படாதவன் யோக்யனாக முடியாது' என்ற சித்தாந்த வாதியானார்.

'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்', 'முயற்சி திருவினை யாக்கும்', மெய்வருத்தக் கூலியையாவது கொடுக்கும் என்பதிலே திடமான நம்பிக்கை வைத்த வேதநாயகர், மீண்டும் சதர்ன் கோர்ட்டாருக்கு தனது நிலையை ஆதியோடந்தமாக விளக்கி விண்ணப்பம் செய்து கொண்டார்.

அந்த நேரத்தில்தான், மறைந்த மேஸ்தர் டேவிட்சனின் பெட்டியிலே முன்பு வேதநாயகர் கொடுத்திருந்த காணாமல் போன கலக ஆவண மொழி பெயர்ப்புக்கள் எல்லாம் கிடைத்துவிட்டன என்றும், வேத நாயகம் மீண்டும் வேலையில் சேரலாம் என்ற பணிஉத்திரவும் அவருக்கு வந்து சேர்ந்தது.

வேதநாயகர் பணி நீக்கம் செய்யப்பட்ட இடத்திலே அவருக்குப் பதிலாகப் பணியில் அமர்த்தப்பட்டவன், அவர் மீண்டும் பணியில் சேர முடியாதபடி பொய் புனைந்துரைப் பழிகளைச் சுமத்தி, வேதநாயகம் நோயாளியாகி விட்டதால் அவரால் மீண்டும் வேலைசெய்ய முடியாது என்றும் சதர்ன் கோட்டுக்குக் கடிதம் எழுதிவிட்டான்.

கலகம் செய்தவனுடைய பொய்யுரைகளை விளக்கி மீண்டும் வேதநாயகர் மேஸ்தர் சுவிண்டனுக்குப் பதில் மனு கொடுத்தார். கலகக் காரனுக்கு சுவிண்டன் மிகவும் வேண்டியவன் என்பதால், அவன் சதர்ன் கோர்ட்டாருக்கு வேத நாயகர் நோயாளியே என்று விதண்டாவாதப் பிடிவாதமாக மீண்டும் கடிதம் எழுதினான்.

வரம்பு மீறி சுவிண்டன் பிடிவாதம் காட்டுவதைக் கண்ட சதர்ன் கோர்ட்டார், அவனை எச்சரித்து, வலிய ஓய்வு கொடுத்து லண்டனுக்கு அனுப்பிவிட்டார்கள. அவன் லண்டன் போகும் வழியில் சீதபேதி கண்டு மாண்டான். அவனுக்குப் பதிலாக மேஸ்தர் பணிக்கு வந்த புதியவரான ஹாரிஸ் வேதநாயகருக்கு மீண்டும் வேலையில் சேர உத்தரவு போட்டார். அப்போது வேத நாயகர் பாடிய பாடல் இது.

ஈனத்திலே பிறந்தேன் இறையாய் வரின்,
என்றும் மது
பானத்திலே, பரி தானத்திலே, கை
பழகி, அவ
மானத்திலே மிகுந் தோர்க் கதிகாரம்
வழங்கிடுவேன்;
ஞானத்திலே சிறந்தோரை எல்லாம் தள்ளி
வை விப்பனே''

-என்று, வேதநாயகர் தனது சொந்த அனுபவத்தைத்தான் மேற்கண்டவாறு பாடினார்.

இந்தப் பாடல், பாரதியார் பாடிய 'பாரத நாடு' என்ற பாடலுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது எனலாம்.

வேலையை இழந்து விட்ட வேதநாயகர், வேதனையிலே உழன்றபோது பாடிய பாடல் இது.

''எரிகிற வீட்டிலே பிடுங்குவது லாபம்
என்று சொல்வார் அந்த வண்ணமே
பெரிய கோள் சொல்லிநம் உத்தியோகத்தைப்
பிடுங்குவதில் எண்ணமே

சரி இவர் எண்ணம் முடிக்கட்டும் - லஞ்சம்
சர்வ கொள்ளைகள் அடிக்கட்டும் - உண்மையை
துரைமகன் கண்டு பிடிக்கட்டும் - அந்தத்
துட்டரை டசன் அடிக்கட்டும் - பெண்ணே
எந்த நாளிலும் தர்மமே செயம்
ஏன் மயங்குகிறாய் பெண்ணே!

வேதநாயகர் காலத்திலே லஞ்சம் கொடுக்கும் தனிமனிதக் கேடு பாடு தலைதூக்கி இருந்தது, அடுத்துக் கெடுப்பவர், கோள் கூறுவோர், பணி மோசடி புரிவோர், மனக்கர்விகள், தான் தோன்றி அகம்பாவிகள், கொள்ளையடிப்போர் போன்றோர் இருந்தார்கள் என்பதை இப்பாடல் உணர்த்துவதோடு, தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், மீண்டும் தருமமே வெல்லும் என்ற நிலை அப்போதும் இருந்தது என்பதும் நமக்குப் புரிகிறது.

❖

# 4. மாயூரம் கோர்ட்டுக்கே எல்லா வழக்குகளும் மாறின

**கி.பி.** 1856 ஆம் ஆண்டு! முன்சிஃப் வேலை இடம் ஒனறு காலியானது. அதற்கு அறுபது பேர் மனுப்போட்டார்கள். மனு செய்தவர்களில் ஒருவர் வேதநாயகர், மற்றவர் ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர், மூன்றமவர் திவான் ரகுநாதராவ் இவர்கள் மூவரும் முக்கியமானவர்கள்.

முன்சிஃப் பணிக்கு வந்த விண்ணப்பங்கள் அறுபதையும் பரிசோதித்து தேர்வு புரியும் பணியை கும்பகோணம் மாவட்ட நீதிபதி பிச்சாம்பு என்பவரிடம் ஆங்கில ஆட்சி ஒப்படைத்தது. அந்தத் தேர்விலே அவர் மேற்கண்ட மூவரை மட்டுமே தேர்வு செய்தார். அவர்களிலே ஒருவராக, முதன்மையானராகத் தேர்வு செய்யப்பட்டார் வேதநாயகர்!

மற்ற இருவர் யார் தெரியுமா? பிற்காலத்திலே சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியாக இருந்த ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர். மற்றவர், திவான் பகதூர் ரகுநாத ராவ். இந்த ரகுநாத ராவ் என்பவர், 1885 ஆம் ஆண்டில் காங்கிரஸ் பேரியக்கத்தைப் பூனா நகரிலே தோற்றுவித்த ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்ற ஐரிஷ் நாட்டு வெள்ளையரின் நெருங்கிய நண்பர். இந்த திவான் பகதூர் ரகுநாத ராவ்தான் காங்கிரஸ் பேரியக்கம் தோற்றுவிக்கப்பட சென்னை யிலே தனது பங்களாவிலே இடம் கொடுத்து இயக்கம் ஆரம்பமாவதற்கு ஹியூம் துரைக்குப் பக்கபலமாக, வெள்ளை ஆட்சிக்கு எதிராக நின்று செயல் பட்ட அஞ்சா நெஞ்சர்.

ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயரும், டிப்டிக் கலெக்டராக இருந்த திவான் பகதூர் ரகுநாதராவும், அவர்கள் வாழ்ந்த காலத்திலே பெயரும் புகழும் பெற்றார்கள். அவ்வளவு தான். ஆனால், வேதநாயகரைப் போல பல்கலை வித்தகராக விளங்கி இறவாப் புகழ் பெற்றவர்கள் அல்லர்!

கி.பி. 1857 ஆம் ஆண்டில், தரங்கம்பாடி என்ற ஊரிலே. வேதநாயகர் முதன் முதலாக முன்சிஃப் பதவியை ஏற்றார். அப்போது, தரங்கம்பாடி நகரும், அதனைச் சூழ்ந்த கடற்கரை ஊர்களும் 200 ஆண்டுகளாக டேனிஷ்காரர்கள் ஆட்சியிலே இருந்தன. வேதநாயகர் பதவி ஏற்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்புதான், அந்தப் பகுதிகள் யாவும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின. சிறந்த வணிகக் கேந்திரமாக விளங்கிய அந்தத் தரங்கம்பாடி என்ற சிறு நகர் இன்று சீரழிந்து சிறு கிராமமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

தரங்கம்பாடி கடல் சூழ்ந்த பிரதேசப் பகுதிகளுக்கு முன்சிஃபாக நியமிக்கப்பட்ட வேதநாயகர், பிறகு மாயவரம் மாநகர் முன்சிஃபாக மாற்றப்பட்டார். வேத நாயகம் நீதிபதியாக மாயவரம் வந்து பணியாற்றிய சில மாதங்களுக்குள்ளேயே அவர் நேர்மையான நீதிபதி, திறமையான நீதிபதி, மனித சமத்துவ எண்ணம் கொண்ட நீதிபதி, ஒழுகமான நீதிபதி, என்ற புகழைப் பெற்றார். இந்தப் புகழ்கள் பெருகப் பெருக ஆங்கிலேயர்களும், பொது மக்களும் இவரிடம் மதிப்பும் மரியாதையும் வைத்துப் பழக ஆரம்பித்தார்கள் அதற்குப் பிறகு சப்-ஜட்ஜ் வேலைக்கும் இவரே தகுதியானவர் என்று ஆங்கிலேயரால் பரிந்துரை செய்யப்பட்டார்.

மாயூரம் முன்சிஃப் வேதநாயகரிடம் நியாயம் கிடைக்கின்றது என்ற உணர்ச்சி மக்களிடம் பரவியது. அதனால், மற்ற நீதிமன்றங்களிலே வழக்குத் தொடுத்திருந்த வழக்காளர்களில் பெரும் பகுதியினர், அவரவர் வழக்குகளை மாயூரம் நீதி

மன்றத்திற்கே மாற்றுமாறு, மாவட்ட நீதி மன்றத்திற்கு மனுப் போட்டபடியே இருந்தார்கள். சில வழக்குகள் அவ்வாறே விசாரணைக்கு வந்தன.

மக்கள் உணர்ச்சி இவ்வாறிருக்க, மற்றவர்கள் இந்தப் புகழைக் கண்டு பொறாமைப் பட்டார்கள். அதனால், வேதநாயகர் மீது பலருக்கு பகையும், விரோதமும் ஏற்பட்டது.

வேதநாயகரின் நீதி மன்ற வாயிலிலே மக்கள் திரண்டார்கள். வழக்கு விசாரனைகளைக் கவனிப்பார்கள். 'எப்போ வருவாரோ ஏழைக் கிரங்கிடும் நீதிபதி வேதநாயகர்' என்று பாட்டு எழுதிப் புகழும் அளவிற்கு அவர் மக்களிடம் நற்பெயர் பெற்றார்.

கி.பி. 1872 ஆம் ஆண்டு! நெல்சன் என்பவர் மாவட்ட நீதிபதியாக இருந்தார். புதிதாக வந்த நீதிபதியை வேதநாயகர் சென்று வரவேற்கவில்லை. காரணம் என்ன?

தன்னுடைய தகுதி தரங்களைப் புதிதாக வரும் மேலதிகாரிகள் அறிந்து, புரிந்த பின்பே அவரைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர் வேதநாயகர். அதனால், வந்த புதியவரை அவர் உடனே சென்று பார்க்கவில்லை.

ஆனால், வேதநாயகர் மக்கள் தொண்டு நேர்மையாக நடப்பதால் அவரது புகழ் மீது அழுக்காறு கொண்டவர்கள். வேதநாயகர் மீது கோள் கூறியதால், அந்தக் கோள் புதுநீதிபதிக் கும் வருத்தத்தை உருவாக்கியதால், முன்னறிவிப்பு ஏதுமில்லாமல் திடீரென்று மாயூரம் நீதிமன்றத்தைப் பரிசோதனை செய்ய புதியவர் வந்தார்.

அப்போது வேதநாயகர் உடல் நலமின்றி இருந்ததால், அவர் கீழ் பணிபாற்றுவோரின் பணிகளைச் சரியா-இல்லையா என்று பார்வையிட்டுச் சோதிக்க நேரமில்லை. அதனால், புதிதாக வந்த

நீதிபதி சில குறைபாடுகளைத் தேடிக் கண்டு பிடித்தார். சம்பந்தப்பட்ட பணியாட்களுடன் வேத நாயகரை மாவட்ட நீதி மன்றத்துக்கு வருமாறு அவர் கட்டளையிட்டிருந்தார்.

உடல் நலம் குன்றிய வேதநாயகர், பயணம் செய்ய முடியாத காரணத்தால், பணியாட்களை மட்டுமே மாவட்ட நீதிபதியிடம் அனுப்பி வைத்தார். இதை ஏற்காத நீதிபதி, வேதநாயகரை நேரில் வருமாறு மீண்டும் உத்தரவிட்டார்.

நோய்த் தொல்லை அதிகமாக இருப்பதாலும், பயணம் செய்யும் அளவுக்கு உடல் சீர் கெட்டிருப்பதாலும், மருத்துவர் களிடம் சான்றுச் சீட்டு வாங்கி அதை நீதிபதிக்கு அனுப்பி இருந்தார்.

அதனால், மேலும் கோபமடைந்த நீதிபதி, வேதநாயகத்தைப் பணியை விட்டு நீக்குமாறு உயர்நீதி மன்றத்திற்கு சிபாரிசு செய்தார். அதற்கேற்ப உத்திரவும் வந்தது.

அந்த உத்தரவைப் பெறமறுத்த வேதநாயகர், அதற்கான ஆதாரங்களைக் காட்டி உயர்நீதி மன்றத்துக்கு மனுச்செய்தார். உயர் நீதிமன்ற அதிகாரிகள், வேதநாயகம் மேலதிகாரிகளுக்குக் கீழ்ப் படியாததே பெருங்குற்றம் என்ற காரணத்தைக் காட்டி, 'வேலையிலே இருந்து ஓய்வு பெறுக' என்று வற்புறுத்தவே, வேதநாயகரும் தனது உடல் நலம் காரணமாகச் சரியென்று ஒப்புக் கொண்டார்.

ஆனால், புதிய நீதிபதி நெல்சன், ஓய்வூதியமும் வழங்கக் கூடாது என்று உயர்நீதிமன்றத்திடம் போராடினார், ஆனால் நெல்சன் எண்ணங்களைப் புறக்கணித்து, மாதம் நூறுரூபாய் ஓய்வூதியம் பெற உதவிசெய்தது உயர் நீதி மன்றம்.

அப்போது உத்தியோகஸ்தர்களைப் பற்றி வேதநாயகம் பிள்ளை கூறிய கருத்து என்ன தெரியுமா?

உலகிலே தங்களுக்குரிய வீடுகளை விற்பவர்களை பொருள்களை விற்பவர்களைக் கண்டிருக்கிறோம். அவற்றை அவர்கள் வறுமையால் விற்கிறார்கள். அல்லது, வேறு காரணங்களால் விற்கிறார்கள். ஆனால், பொன்போலப் போற்றி வளர்த்த சரீரத்தை விலை கூறுபவர் யார்? அவர்தான் உத்தியோகத்தார்!'

'ஒரு சாண் வயிறு காரணமாக எண்சாண் உடலை ஆளவந்தார்க்கு நாமும் அடிமைப் படுத்தினோமே. அந்த அடிமை முறி கிழிந்தது; நாமும் பணியிலே இருந்து விடுதலை பெற்றோம்; அதனால் சிறை நீங்கினோம்' என்று வேதநாயகர் தனது முன்சிஃப் வேலையை விட்டு விலகியபோது, விளக்கம் கூறி மகிழ்ந்தார்.

இதே கருத்தை அவர் பாமாலையாக்கிய போது, கீழ்க் கண்டவாறு பாடுகிறார்;

> "வீடு நிலங்கள் பொருளை விற்பார் இந்த
> மதினியில் நீடும் எண் சாண் மெய்யை ஓர் சாண்
> உதரம் நிமித்தம் விற்று நாடும் அரசர்க் கடிமை
> என்றே முன்பு நாம் கொடுத்த ஏடு கிழிபட்ட
> தன்றோ உத்தியோகம் இழந்ததுவே. தடை
> நீங்கின உத்தியோகத்தைக் கைவிட்ட தன்மை
> யினால், சிறை நீங்கினம் பலதீயர்க் குள்ளாகிச்
> சிறுமையுறும் குறை நீங்கினம்; துட்டர் கூட்டமும்
> நீங்கினம்; கூடுந்துன்பப் பொறை நீங்கினம்;
> நங்கறை நீங்கினம்; மகிழ்பூண் நெஞ்சமே.

பணியிலே இருந்து ஓய்வு பெற்றதால், வேதநாயகம் மிகவும் மகிழ்ச்சி பெற்றார். பணிச் சாலை கடும்பாலை; அதிலே அகப்படுபவர்கள் கரும்பைப் போலப் பிழியப்படுகிறார்கள். ஆதலின், 'போதும், போதும் உத்தியோகக் கனமே' என்று

ஒதுங்கிவிட்டார். அந்த எக்களிப்பை அவர் திரிபுடை தாளத்திலே அமைத்துப் புன்னாகவராளியிலே இசையாகப் பாடினார். அவற்றிலே சில வரிகள்:

"போதும் போதும் உத்தியோக கனமே - இதில்
ஏது சுகம் நமக்கு மனமே.
எந்தநேரமும் ஓயாவேலை - இதில்
என்ன பெற்றோம் முத்து மாலை;
அந்த உத்தியோகமும் ஆலை - அதில்
அகப்பட்ட நாம் கரும்பு போலே - போதும்

பணிசெய்து கொண்டிருந்த நேரத்திலும், அவர் மனம் ஓய்வை நாடித் தவித்தது. உலக மோசடிகளையும், பொய் புரட்டுக்களையும் ஆராய்ந்து சலித்த அவர் மனம் அமைதியைத் தேடியது. ஆதலின் ஏங்குகிறார் அவர்.

"அப்பா இதென்ன அதிகாரம் - ஐயோ
எப்போதும் பக்திசெய்ய இல்லையே நேரம்

-என்கிறார்! ஏனென்றால்,

"சுப்பையரோ அபத்த மூட்டை - அந்தச்
சுந்தரையர் வழக்கிலே தொள்ளாயிரம் ஓட்டை;
அப்பையர் கற்பிப்பார் பொய்ச் சீட்டை - அந்த
அனந்தையர் கட்டுவார் ஆகாசக் கோட்டை
அண்டப் புரட்டன் அந்த வாதி - அகி
லாண்டப் புரட்டன் அப்பா அவர் பிரதிவாதி;
சண்டைப் பிரசண்டன் நியாயவாதி - நாளும்
சாஸ்திரப் புளுகன் கட்சிக்காரன் எனும் வியாதி.

ஆதலின்:

போதும் போதும் உத்தியோக கனமே - இதில்

ஏதுசுகம் நமக்கு மனமே!

-என்ற கேள்விகளைக் கேட்கிறார் வேதநாயகர் அடுக்கடுக்காக! மேலும், அவர் கேட்கும் கேள்விகளைப் பாருங்களேன்:

'இந்த வழக்குக் கெல்லாம் நாம் தானா! கோர்ட்டில்

வந்தவன் எல்லாம் நமக்கெசமானா?

நந்தன் வலியச் சண்டை பிடித்தானாம் - அந்த

நாகனைத் திட்டி அவன் அடித்தானாம்.

அண்ணன் தம்பிகளை வெறுத்தானாம் - அவர்க்கு

ஆஸ்திபாகங் கொடாமல் மறுத்தானாம்

கண்ணன் வயலைப் பொன்னன் அறுத்தானாம் - கடைக்

காரன் கேட்ட சரக்கை நிறுத்தானாம்

ககனப்பூ வந்திமகன் கொய்தானாம் - அதைக்

கண்டு குருடன் அம்பால் எய்தானாம்.

செகமிசை ஊமையனும் வைதானாம் - அதைச்

செவிடன் கேட்டு நகை செய்தானாம்.

வேதநாயகம் கூறும் வழக்குகள் எப்படிப்பட்டன பார்த்தீர்களா? அவை பொய்யும் புனை சுருட்டுமே. கட்சிக்காரர் எப்படிப் பட்டவர்? அண்டப் புரட்டர்; ஆகாசப் புரட்டர்; சாட்சிகளோ மனச்சான்றில்லாதவர். அதனால், என்ன வேண்டுகிறார் தெரியுமா வேதநாயகம்?

"நானே பொது நீதி தானே செலுத்திட

நல்வரம் அருள் கோனே!

வரும் வழக்கர் மனத்தை
வன் சொற்களால் கெடாமல்
மற்றைக் கீழ் உத்தியோகஸ்தர்
வம்புக் கிடங் கொடாமல்
வரும்படியால் வழக்கு
ஆராய்ச்சியில் பின்னிடாமல்
அப்பன் பாட்டன் சொன்னாலும்
அறநெறி கைவிடாமல்
தரும் தேவதை ஞாய
தலந்தனில் நடிக்க
தப்பு சாட்சிகள் கிடு
கிடெனவே துடிக்க
இருமையகல அநீதியே
ஓட்டம் பிடிக்க
இலஞ்சம் வாங்கிகள்
வெட்கத்தால் உயிர்மடிக்க
நானே பொதுநீதி - தானே செலுத்திட
நல்வரம் அருள்கோனே.

-என்று, வேதநாயகர், நீதிமன்றத்தில் - தான் கண்ட சமுதாய விரோதச் சாபக் கேடுகளை மனம் வெதும்பிச் சாடினார். நீதி மன்றங்களிலே இன்று நடைபெறும் அலங்கோலங்கள், அவலக்கேடுகள், அவமானங்கள், அநீதிகள், வேதநாயகர் காலத்தைவிட ஆயிரம் மடங்குகள் அதிகமாகவே நடந்து பொங்கி வழிகின்றன. இருப்பினும், அன்று நடந்ததைக் கண்டே வேதநாயகர் மனம் அரிசி போட்ட உலையைப்போல - கொதித்து

பொங்கி விட்டார் என்றால், இன்றைய நிலையைக் காணும் அவலம் அவருக்கு ஏற்பட்டிக்குமானால் தற்கொலையே செய்து கொள்வாரோ என்னமோ!

வேதநாயகர் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு! இது போலவே கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் 'மிருச்சகடிகம்' என்ற நூலில் வரும் மன்னன் சூத்திரகன் என்பவனும் கீழ்க் கண்டவாறு, வேதநாயகர் போலவே பேசுகிறான். இதோ அவனுடைய அறம் சார்ந்த பேச்சு:

'ஆ', நீதிபதிகள், வழக்கு நிலையின் வயப்பட்டு, அதன் சான்று முதலியன எவ்வாறுளவோ, அவ்வாறே வழக்குகளை முடிக்க வேண்டும். தமது அறிவை மாத்திரமே கடைப்பிடித்து, வழக்கின் இயல்புகளைப் பகுத்தறிதல் நீதிபதிகளுக்கு அரிதாகின்றது.

வழக்குரைப் போர், வழக்கின் தன்மையை மறைத்துக் கூறுவார்கள். எல்லோரும் தம்மைக் குற்றமற்றவர் என்றும், காரணம் இல்லாமலே பிறர் கெடுதிகளைச் செய்கின்றனர் என்றும், அதனால், தாங்கள் செய்யும் குற்றங்களை மறைத்தே சொல்லு கின்றனர்.

வாதிகள், பிரதிவாதிகள் இருதரத்தாரும், அவரவர் குற்றங்களை மறைத்து, பிறருடைய தவறுகளை வெளியே நிரூபணமாக்க அவர்கள் செய்யும் ஆரவாரங்களால் உண்மை வெளியே வராமல், பிறரால் உணர இயலாமல் போகின்றது.

ஒழுக்கம் உடையார் எனினும், சாட்சியாய் வருபவர், பார்த்தவற்றைக் மறைத்துப் பார்க்காதவற்றை ஏறுமாறாகக் கூறுகின்றார்கள். தமது கட்சியின் தவறுகளை வெளியே பகிரங்கமாகக் கூறமாட்டார்கள். அதனால், அறங்காண்பவருக்குப் பழிப்பு எளிது; புகழ்ச்சி அரிது.

நீதி பதிகளாகப் பணியாற்றுபவர்களுக்கு அற நூல்கள், பொருள் நூல்கள், பற்றிய நுட்ப அறிவு அவசியம் தெரிந்திருக்க வேண்டும்.

அவர்களுக்குக் கோபம் வரக்கூடாது. வருமானால், அது நியாயத்தின் அறிவைத் தடைப்படுத்தும்.

வஞ்சகர் மனதை ஊடுருவிப் பார்க்கும் ஆற்றல் நீதிபதிகளுக்கு நிச்சயமாக இருக்கவேண்டும். என்ன உண்மைகளை நீதிபதிகள் அறிகின்றார்களோ, அதை எவருக்கும் அஞ்சாது, தயை, தாட்சண்யம் பாராது, தயங்காது வெளியிடும் மன உரம் வேண்டும் வாதிகள் எப்படிப் பட்டவர்கள், பிரதிவாதிகள் எத்தகையவர்கள், அவரவர்களது வரலாறுகள் என்னென்ன என்பவற்றைப் பற்றியெல்லாம் எண்ணாமல், நினையாமல், வழக்கின் தன்மை என்ன என்பது ஒன்றையே, அதற்குரிய சாட்சிகள், சான்றுகள் முதலியவைகளால் ஆராய்ந்து முடிவு செய்வது நீதிபதிகளின் கடமையாகும்.

உண்மையாக நடந்த ஒரு சம்பவத்தை அல்லது நிகழ்ச்சியை எடுத்துக் கூறும் திராணியோ, தெம்போ, பலமோ, வலிவோ இல்லாதவரை தாமே அந்த உண்மைகளை உணர்ந்து பாதுகாத்தல் அவர்பொறுப்பு. வஞ்சகத்தை வெளிப்படுத்தித் தக்கவாறு தண்டனை விதிக்க நீதிபதிகள் தயங்கக் கூடாது.

அறம் சார்ந்த நெறிகளிலே இருந்து தவறக் கூடாது. பண ஆசை அல்லது பொருளாசை அவர்களுக்கு இருக்கக் கூடாது. நண்பர்கள், சுற்றத்தார்கள், பகைவர்கள், விரோதிகள், ஆகியவர்களது நிலைக்கேற்றவாறு நடுநிலை வகிக்கும் தகுதிபெற்றவராக அவர் இருக்க வேண்டும். குறிப்பாக, இந்தப் பண்புடைமையிலே அவர்கள் வைரம் பாய்ந்த மனம் பெற்றிருத்தல் வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, நீதிபதியிடம், கடவுள் பக்தி கனிந்திருத்தல் வேண்டும். அதனால், அறத்தைப் பின் பற்றுவதில் மன உறுதியும், மறத்தை ஒழிப்பதிலே துணிவும் உண்டாகும்.

'மிருகச்சடியம்' என்ற நூலில், சூத்திரகன் வகுத்த இந்த நீதி இலக்கணத்துக்கு வேதநாயகர் இலக்கிய வடிவமாய் நின்றார்.

இவ்வாறு வேதநாயகர், தனது முன்சிஃப் பதவியை நிர்வகித்த காலம் முதல், அவர் கட்டாய ஓய்வுப் பணி நீக்கம் பெற்ற காலம்வரை, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற எண்ணத்தோடு, எவரும், யாரும் புண்படா தவாறு மக்கட் சேவையாக நீதித்துறையை அவர் பயன்படுத்தினார்.

❖

# 5. நீதிபதிகளில் பலரகம்!

**வே**தநாயகர் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார்; முன்சிஃபாகவும், பல்வேறு நீதிபதிகளின் கீழ் பணியாற்றியவர். அதனால், சென்றதலை முறையிலே நீதிபதிகள் எப்படி இருந்தார்கள்? எவ்வாறு தீர்ப்பளித்தார்கள்? என்ற விவரங்களை வேதநாயகரே விளக்கியிருக்கிறார்.

"நியாயாதிபதிகளில் சிலர் நீதிமன்றத்துக்குப் போகின்ற நேரம் ஒரே தன்மையில் இருக்காது. ஒரு நாள், மாலையிலும், மறுநாள் நடுப்பகலிலும், வேறோர் நாள் மாலையிலும் செல்வது அவர்கள் வழக்கம்.

கட்சிக்காரர்கள் அதனால் எந்த நேரத்தில் தாங்கள் நீதிமன்றத்திற்குப் போவது என்று புரியாமல், தெரியாமல் அவதிப்பட்டார்கள். நேற்று காலையிலே நீதிபதி வந்ததால், இன்றும் காலையிலே அவர் வருவார் என்று வழக்காளி காத்திருந்தால், அவரோ கட்சிக்காரர் இல்லாத நேரத்திலே தோன்றி, கட்சிக்காரர் ஆஜராகவில்லை என்று வழக்கைத் தள்ளி வந்தார். ஆஜராகுகிறவர்கள் வழக்கையோ விசாரிப்பதில்லை.

நீதிபதிகளில் சிலர், வழக்குகளை விசாரிக்கும் கஷ்டங்கள் காரணமாக, அதற்குப் பல தோடங்களைக் கற்பித்து, சருவசங்காரம் செய்து வந்தார்கள் வேறு சிலர், வழக்கு விசாரணைக்கு ஆதாரமான சட்ட நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ளாமல், வழக்குரைஞர்கள் வாய்ப் பிறப்பை நம்பித் தீர்ப்புச் செய்வதும்,

வழக்குரைஞர்கள் நியாயத்தை நிரூபிக்கவில்லை என்று அநியாயமாய்த் தீர்ப்புச் செய்வதுமாய் இருந்தார்கள்.

மற்றும் சிலர் அட்டாவதானம் செய்வது போல, பல வியாச்சியங்களை ஒரே காலத்தில் விசாரிக்கத் தொடங்கி, எதையும் முடிக்காமல், அரையும் குறையுமாய்த் தீர்த்து வந்தார்கள்.

மேலும் அவர்கள், விசாரணைக் கெடுவை ஒத்தி வைத்து, காலதாமதம் செய்து, கட்சிக்காரரை மனத்துண்டிறுத்தி வருத்தி வந்தார்கள். 'குட்டிச் சுவரிலே தேள் கொட்ட தண்ணீரி பானையிலே நெறி கட்டினது போல', நியாயம் ஒரு பக்கம் இருக்க, வேறொரு பக்கத்திலே நீதிபதிகள் .இருந்து கொண்டு, அதற்கனுகூலமாகச் சாட்சிகளை அதட்டி, உருட்டி வாக்கு மூலம் வாங்கி, எக்கச் சக்கமாய்த் தீர்ப்பு அளித்து வந்தார்கள்.

தீர்க்க தரிசிகள் போல் சிலர், வழக்காளிகளைப் பார்த்த மாத்திரத்திலே தப்பான எண்ணங் கொண்டு அதற்குத்தக்கப்படி சாதக பாதகஞ் செய்து வந்தார்கள். செப்பிடு வித்தைக்காரர் செப்பையும் பந்தையும் ஒரு கணத்திலே மாற்றுவது போல, சில நீதிபதிகள் ஒருவருடைய அனுபவ சுதந்திரங்களை அநியாயம் செய்து வந்தார்கள்.

சென்ற தலைமுறையிலே நீதிபதிகள் போன்ற உயர் அதிகாரிகள் உத்தியோகம் புரிந்த ஒழுங்கை வேதநாயகம் பிள்ளை விவரிக்கின்றார். இவர் பணியாற்றிய காலத்திலே நீதிபதிகள் எவ்வளவு முறைகேடர்களாக நடந்தார்கள் என்பதை முன்பு பார்த்தோம். இவர்களே அல்லாமல், நீதி மன்ற அதிகாரிகள் எப்படி நடந்தார்கள்?

இலஞ்சமும் ஊழலும் அவர்கள் இடையே எவ்வாறு நிரம்பி மலிந்து கிடந்தன? வழக்கறிஞர்கள் நியாயத்தை வாதித்தார்களா? அவர்கள் ஏன் ஆங்கிலத்திலே வாதிக்க வேண்டும்?

## *அதிகாரிகளின் அதிகார தர்பார்!*

உத்தியோகத்தார், பொது மக்கள் ஊழியர். அதிகாரிகள் அல்லர்! சேவகர்களே அன்றி, எசமானர்கள் அல்லர் என்று இப்போது நாம் கூறுகின்றோம், பேசுகின்றோம். ஊழல் ஒழிக, லஞ்சம் ஒழிக என்று ஊருக்கு ஊர் இன்று மேடை போட்டுக் கூவுகின்றோம். ஆனால், அக்கிரமங்கள், அதிகாரக் கொடுமைகள் நம் கண்முன்னே நடக்கின்றன. அதைத் தடுக்க நாம் முற்படு வதில்லை.

அநியாயம் இழைக்கப்பட்ட போதும் அதை நாம் தட்டிக் கேட்பதில்லை. நாம் சுதந்திரர்; நம்மைப் போன்றவரல்லர் வேத நாயகம் பிள்ளை, அதிகாரதர்பார் நடந்த அக்காலத்திலே, தயவு தாட்சணியம் இல்லாமல் ஆட்சியை எதிர்த்து எழுதியவர் இவர் ஒருவர்தான்.

இந்தியாவில் 1885 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை அப்போது தோன்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது மட்டுமல்ல; நெறி தவறிய நீதிபதிகளை நையாண்டி செய்தும், கண்டித்தும் எழுதியும் எச்சரிக்கை செய்தவர் நமது வேத நாயம் பிள்ளை ஒருவரே தான்.

வரம்பு மீறிய அதிகாரிகளைக் கேலிசெய்து, பரிகாசத்துக் குள்ளாக்கினார். குத்தலாகக் கூறி அவர்கள் நேர்மையைத் தூண்டிட முற்பட்டார், உத்தியோகத்தர்களைக் குறித்து இவர் எழுதிய கேலி, கிண்டல், பரிகாசங்கள் தமிழிலே மிக உயர்ந்த அங்கதங்கள்.

ஆனால், தற்போது இவற்றை யாரும் அறியார். இன்றைய சூழ்நிலையிலே இவற்றை வெளியிடுவதும், விளம்பரப் படுத்துவதும், மிகவும் அவசியமே. இவற்றைப் படிப்பவர் வேதநாயகம் பிள்ளையின் களங்கமற்ற உத்தியோக வாழ்வைப் போற்றாமல் இருக்க மாட்டார்கள்.

உண்மை, ஒழுக்கம், நேர்மை முதலிய அவர் குண நலங்களைப் புகழாமல் இருக்க மாட்டார்கள். அதனால், நேர்மையற்ற நீதிபதிகளுக்கு அக்கிரம அதிகாரிகளுக்கு அநியாய வாதிகளுக்கு, நியாயம் நேர்மைகளுக்கு நிலைக்களனான வேதநாயகம் பிள்ளை கூறிய அறிவுரைகளைத் தொகுத்துச் சுருக்கி, முடிந்தவரை அவரது மொழியிலே, வழங்குகின்றோம்.

"அற்பனுக்கு ஐசுவரியம் வந்தால், அர்த்த ராத்திரியிற் குடை பிடிப்பான்" என்பது பழமொழி அவனுக்கு அதிகாரம் கிடைத்தவுடனே தன்னுடைய முன்னைய நிலையை அறவே மறந்து தன்னை ஒரு அவதார புருஷன் போல எண்ணிக் கொள்வான். வித்தையிலும், புத்தியிலும், தனத்திலும், குலத்திலும் தனக்குச் சமானமானவர்கள் ஒருவரும் இல்லை என்று இறுமாந்திருப்பான்.

அவன் இருக்கிற இடத்திலே ஈ பறக்கக் கூடாது; எறும்பு ஊரக் கூடாது; குருவி கத்தக் கூடாது; ஒருவரும் பேசக் கூடாது; எப்போதும் நிசப்தமாய் இருக்க வேண்டும்; அவனுடைய வீட்டுக்கு எதிரே ஒருவரும் சோடு போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது; அங்க வஸ்திரம் போடக்கூடாது; கைவீசிக் கொண்டு நடக்கக் கூடாது; தாம்பூலம் தரிக்கக் கூடாது; சிங்கத்தின் குகையிலே ஓரத்திலே போகிறது போல, இவன் வீட்டுக் கெதிரே செல்லுகிறவர்களும் நடுங்கிக் கொண்டு நிசப்தமாகப் போக வேண்டும்.

அவன் வெளியே புறப்பட்டால் உட்கார்ந்திருக்கிறவர்கள் எல்லாரும் எழுந்துவிட வேண்டும். நடக்கிறவர்கள் எல்லாரும் நின்று விட வேண்டும், சகலரும் பூமியிலே விழுந்து சாட்டாங்கத் தண்டஞ் செய்ய வேண்டும், அப்படிச் செய்யாதவர்களுக்கு ஆக்கினைகளும், அபராதங்களும் கிடைக்கும்.

அவனைக் கண்டவுடனே சோடு போட்டுக் கொண்டிருப்பவர்கள் அவைகளைக் கழற்றுகிற வேகத்தைப் பார்த்தால், அவனை அடிப்பதற்காகவே கழற்றுவதாகத் தோன்றும். ஆனால், அவர்கள் மரியாதைக்காகச் சோடுகளைக் கழற்றுகிறார்களே. அன்றி அடிப்பதற்கல்ல!

அவன் தெருவிலே நடந்து போகும் போது, தெரு முழுவதும் தனக்கே சொந்தம் போல அடைத்துக் கொண்டு கால் ஒரு பக்கம்; கை ஒரு பக்கம்; வேட்டி ஒரு பக்கமாக விறைத்துக் கொண்டு நடப்பான். அவன் நடக்கும்போது அவனுடைய சோடு அவன் கால்களிலே படீர் படீர் என்று அடித்துக் கொண்டு போகும். அவனை மட்டும் எல்லோரும் வணங்கவேண்டுமே தவிர, அவன் ஒருவரையும் வணங்குகிறதில்லை. இறுமாப்புடன் அவன் ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு நடக்கிறதே அல்லாது, பூமியைப் பார்த்து நடக்கிறதில்லை.

அதிகாரத் தானத்திலே அவன் இருக்கும் போதும், மக்கள் எல்லாரும் கைகட்டிக் கொண்டும், வேட்டிகளைத் தூக்கிக் கட்டிக் கொண்டும், தூரத்திலே நிற்க வேண்டுமே அல்லாது அவன் சமீபத்திலே ஒருவரும் நெருங்கக் கூடாது. கண்ணாலே ஒருவரையும் அவன் ஏறெடுத்துப் பார்க்கிறதில்லை. அவனுடைய வாயிலே வசவும் திட்டும் புறப்படுமே அல்லாது நல்ல வார்த்தைகள் வருவதில்லை. பேய்க்கு கள் வார்த்தது போல, அவனுடைய முகத்திலே எப்போதும் கோபம் கூத்தாடிக் கொண்டிருக்கும். பொறுமையாக அவன் ஒரு காரியத்தையும் விசாரிப்பதில்லை. அவனை யார் அதிகமாக வணங்கி முகத் துதி செய்கிறார்களோ, அவர்கள் பட்சம் தீர்ப்புக் கூறுகிறதேயன்றி, உண்மையைக் கண்டுபிடித்து அவன் தீர்மானிக்கிறதில்லை.

இவனுக்கு இந்த மமதை ஏன்? அகம்பாவம் எதற்கு? மனிதன் தன்னைத் தான் அறிவானானால், அவன் ஒரு நாளும் கருவப் பட மாட்டான்; இறுமாந்திரான்.

நம்முடைய தேகத்தின் அசுத்தங்களையும். ஆசாபாசங் களையும், சித்த விகாரங்களையும், நமக்குள் உண்டாகிற வியாதிகளையும் நாம் யோசிப் போமானால் வெட்கப்பட்டு நாம் தலை குனிய வேண்டியதே அல்லாமல் கருவப் படுவதற்கு என்ன இடம் இருக்கிறது?

அசுத்தத்திலே பிறந்து அசுத்தத்திலே வளர்ந்து, அசுத்தத்திலே இறந்து போகிறோம். இரத்தமும், மாமிசமும், எலும்பும், நரம்பும் கூடிய நம்முடைய தேகம் அசுத்தமே அன்றி வேறல்ல; ஏன் இந்த அகம் பாவம்? கண்ணிலே பீளை, காதிலே குறும்பி, மூக்கிலே சளி, வாயிலே எச்சில் - இப்படித் தேகம் முழுவதும் துர் நாற்றம்.

நம்முடைய வாழ்வும் தாழ்வும், ஆண்டவன் கையில் இருக்கின்றனவே அல்லாமல் - நம்முடைய இச்சையிலே என்ன இருக்கிறது? அடுத்த நிமிடம் இன்னது வரும் என்பது நமக்குத் தெரியுமா? ஆஸ்திகளை நினைத்து கருவப் படுவோமானால் அவை அநித்தியம். பிறக்கும் போது ஒன்றும் கொண்டு வந்ததில்லை. எத்தனை நாள் இவை நம்மோடு கூடியிருக்கும் என்பதும் நிச்சயமில்லை.

கல்வியைப் பற்றி இறுமாப்பு அடைவோமானால், அது, பிறர்போதித்ததே அன்றி, நம்மோடு கூடப்பிறந்தது அல்லவே!... எவன் தன்னைத் தானே உயர்த்திக் கொள்கிறானோ, அவன் தாழ்த்தப் படுவான். எவன் தன்னைத் தானே தாழ்த்துகிறானோ, அவன் உயர்த்தப்படுவான்.

மேற்குலம் என்று பெருமை பேசுவதும், ஏழைகள் என்று பிறரை இகழ்வதும் கூடாது; அது பாவம்; குணமும் புத்தியும் சிரேட்டமே.

தவிர, சாதி பேதங்களும், அந்தஸ்துகளும் மனிதர்களுடைய கற்பனைகளே. பிறந்தபோதோ எல்லாரும் சமானம்; மானிடர் அனைவரும் சகோதரரே. எண்ணிக்கை இல்லாத அநேகருடைய தேகப் பிரயாசையால் நமக்குச் சகல பாக்கியங்களும் கிடைக்கின்றன. அவர்களை நாம் பெரிய உபகாரியாகவே கருதவேண்டும். அவர்கள் உழைப்பின்றேல் உலக வாழ்வில்லை.

யாருக்கும் அகம்பாவம் கூடாது. அதுவும் அதிகாரிகளுக்கு அது அறவே கூடாது. ஏனென்றால், மக்களுடைய நன்மைக்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இருக்கிறார்கள். மக்களுடைய சம்பளங்களையே அவர்கள் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். எனவே, அவர்கள் மக்களுக்கு ஊழியக்காரர்களே அல்லாமல் எசமானர்கள் அல்லர். இப்படி நினைக்காமல், மக்களைத் தங்களுக்கு அடிமைகள் என்று எண்ணுகிற அதிகாரிகள் அக்கிரமக் காரர்களே ஆவர்.

# 6. இலஞ்சத்தை ஒழிக்க அரசுக்கு யோசனைகள்

எந்த ஆட்சியோ அது முடியரசோ அல்லது குடியரசோ, அது எந்த அரசு ஆனாலும், அது பொதுவுடைமையோ அல்லது தனியுடைமையோ எதுவானாலும் சரி, அரசியலை நிர்வாகம் செய்பவர் அதிகாரிகளே.

'அரசு மாறும் - அரசியல் கொள்கை மாறும். ஆனால், அதிகாரிகள் மாற மாட்டார்கள். இதைத்தான் அதிகாரவர்க்கம் BUREAUCRACY என்பர் அரசியல் ஞானிகள்.

சன நாயக ஆட்சியிலே சட்ட சபைக்குத்தான் முதலிடம். அது இயற்றும் சட்டங்களை நடத்தி வைக்கும் பொறுப்பு அறமன்றகளையும் JUDICIARY செயற் குழுவையும் EXECUTIVE யும் சேர்ந்தது.

நமது வாழ்க்கையை வரையறை செய்துவிருப்பு வெறுப்புக் களைக் கட்டுப்படுத்தி, உரிமைகளைப் பாதுகாத்து, நம்மை ஆள்வது சட்டங்களே ஆதாவது RULE OF LAW என்பதை எல்லோருமே அறிவார்கள். சட்ட சபையிலே பிறந்த சட்டங்களைப் போலவே, அவ்வப்போது அதிகாரிகள் பிறப்பிக்கும் விதிகளையும் அதாவது RULE OF REGULATIONS களையும் மதித்து நடப்பது தவிர்க்க முடியாததாகிறது. சிற்சில சமயங்களில் இவர்களே நீதி வழங்குபவராகவும் இருப்பது அவசியமாகிறது.

எனவே, ஆட்சி முறையில் அதிகாரிகளுக்கு அளிக்கப் பட்டிருக்கிற முதன்மையையும், முக்கியத்துவத்தையும் நாம் குறைக்க முடியாது,குறைக்கவும் கூடாது. இவர்கள் பொதுவூழியர் எனப்படுவர்.

இந்தப் பொதுநல ஊழியம் அதாவது PUBLIC SERVICE என்பது போரூழியம் அதாவது MILITARY SERVICE என்றும், அமைதியூழியம் CIVIL SERVICE என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

ஒவ்வொன்றிலும் எத்தனை எத்தனையோ கிளைகள், கொப்புகள், விளார்கள் என்று எண்ணற்றவை உள்ளன. இவ்வாறு, பலவகைப்பட்ட அரசியல் ஊழியர்கள், அரசுப் பணியாளர் அல்லது துரைத்தனத்தார் எனப்படுவர்.

நல்லாட்சிக்கு இவர்கள் நடத்தையிலே நாணயம் வேண்டும். ஒழுக்கத்திலே உண்மை ஓம்பப்பட வேண்டும். எண்ணத்திலும் செயலிலும் நேர்மை, நியாயம் வேண்டும். அரசியலின் எஃகச் சட்டம் இவர்கள் தானே!

ஒரு நாட்டின் முதுகெலும்பும் இவர்களே. ஆதலால், தொண்டர் தம் பெருமை சொல்ல ஒண்ணாதது, என்றது இந்தப் பொதுநல ஊழியர்களுக்கே சரியாகப் பொருந்தக் கூடியது.

இந்த ஊழியத் தாபனம் இந்த நாட்டிலே உருவானது சென்ற நூற்றாண்டிலே தான். அதனால், இதற்கு நூற்றாண்டுக் கால வளர்ச்சி உண்டு. இந்தத் தாபனம் தனது கடமையில் சிறிதளவு தவறுமானால் கூட, பொறுப்பை உணராது போனாலும், எத்தகைய அக்கிரமக் கேடுகள் விளையும் என்பதை இதன் ஆரம்பக் காலத்திலேயே வேதநாயகம் உணர்ந்தார் அது செழிந்தோங்கி வளர்ந்து மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று விரும்பினார்

ஆகையால், தமது அறிவுரைகளால் வேதநாயர் அதனை வளர்க்க முயன்றார். உத்தியோகத்தர் - அதிகாரிகள் அல்லர்; அவர்கள் ஊழியர்; அவர்களுக்கு அடக்கம் அவசியம்; என்றார் அதிகார மமதையைப் போலவே லஞ்சப் பழக்கத்தையும் வேத நாயகர் வெறுத்தார். அந்த வெறுப்பின் எதிரொலியினாலே வெளிவந்த பாட்டு இது.

"வாங்குவீர் பரிதானம் - உமைவிட்டு

நீங்குமோ அவமானம்"

-என்று, அதை வன்மையாகக் கண்டித்து,வேதநாயகர் இகழ்ந்தார். அதற்குரிய அவரது வாதம் என்ன என்று நீங்கள் கேட்கக் கூடும். அதனால், அவரது வார்த்தைகளிலேயே அவர் எழுதிய தமிழ் நடையிலேயே விபரத்தைப் படியுங்கள்.

## *ஒழுக்கமா? திறமையா?*

கடவுளைப் போல அசரனுக்குச் சருவலோக சஞ்சாரமும் சருவ சக்தியும் இல்லை. ஆதலின், உத்தியோகத்தர் மூலமாகவே அவன், அரசாங்கத்தை நடத்த வேண்டி இருக்கிறது. உத்தியோகத்தர்கள் ராசப் பிரதிநிதிகள்; அவர்கள் மிகவும் மேலானவர்களாய் இருக்க வேண்டும். திறமையும், நல்லொழுக்கமும் உள்ளவர்களையே தேடி, அவர்களுக்குத் தகுந்த உத்தியோகங்களைக் கொடுக்க வேண்டும். வேலைபார்க்கும் திறமையிலே அதிமேதாவியாய் இருந்தாலும், ஒழுக்கக் கேடன் ஆயின், சிறு பதவியும் அவனுக்குக் கொடுக்கக் கூடாது. யோக்யர்களையே தேடிப், பதவிகளிலே அமர்த்தினால், உலகிலே தகுதி அதிகரிக்கும்.

'யோக்யதையைக் குறித்த யாதொரு பரீட்சையையும் செய்யாமல், கல்வியிலே யார் தேர்ந்து வருகிறார்களோ அவர்களுக்கே உத்தியோகம் கொடுக்கப்படுகிறது. கல்விப்

பரீட்சையுடன் ஒழுக்கப் பரீட்சையும் செய்யாமல் யாருக்கும் உத்தியோகம் கொடுக்கக் கூடாது.

'ஆங்கிலப் பாடசாலைகளிலே கடவுள் பக்தி,நல்லொழுக்கம் முதலியவை கற்பிக்கப்படுவதில்லை. லௌகிக சம்பந்தமான சில காரியங்களே கற்பிக்கப்படுகின்றன. ஆதலின், மாணவர்கள், உலகாயதர்களாயும், நாத்திகர்களாயும் வளர்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோகம் ஆனவுடன் பணமே தெய்வம் என்று நினைத்து, அதைச் சம்பாதிப்பதற்காக சகல அக்கிரமங்களையும் செய்கிறார்கள்.

'அறுக்கமாட்டாதவன் இடுப்பிலே ஐம்பத்தெட்டு அரிவாள்' என்பது பழமொழி. ஒரு வேலை கூடப் பார்க்க சக்தி இல்லாதவருக்கு, ரெவின்யூ வேலை, சிவில் விவகார வேலை,மாஜிஸ்டிரேட் வேலை முதலிய பல கொடுக்கப் படுகின்றன. பல சரக்குக் கடைக்காரருக்குப் பயித்தியம் பிடித்தது போல் இவர்கள், ஒரு வேலையையாவது சரியாய்ப் பார்க்காமல், எல்லா வேலைகளையும் குழப்பிக் கொண்டு காலம் போக்குகிறார்கள்.

மேலும், அவரவர் யோக்யதைக்குத் தகுந்த உத்தியோகம் இன்றி, பதவிகள் வழங்கப் படுகின்றன. குறைந்த வேலையுள்ள வர்களுக்கு மிகுந்த சம்பளமும், அதிக வேலையுள்ளவர்களுக்குக் குறைந்த சம்பளமும் கொடுக்கப்படுகின்றன. ஒரு வேலையும் இல்லாமலே சிலருக்கு வகை தொகை இன்றிச் சம்பளங்கள் தரப்படுகின்றன.

## *வேலியே பயிரை மேய்ந்தால்...!*

அதிகாரிகள் பரிதானத்தை விரும்பாதபடி, அவர்களுக்குப் போதுமான சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. அப்படியிருந்தும் அவர்கள் ஒவ்வொரு வழக்கிலும் உபய வாதிகளிடமும்.

கைலஞ்சம் வாங்குகிறார்கள். அதைச் சீரணம் செய்ய, இருதிறத்தாருக்கும் சிறிது சாதகமும், சிறிது பாதகமும் செய்கிறார்கள். சாதகம் செய்யக் கூடாத நிலையிலே இனிவரும் வழக்குக்கு அச்சாரமாகவும் வைத்துக் கொள்ளுகிறார்கள். அன்றியும், அவர்களுக்கு வேண்டிய துணியை சவளி வியாபாரிகள் தருகிறார்கள். தானிய தவசங்களை நிலச் சுவான்கள் கொடுக்கிறார்கள். உப்பு முதல் கற்பூரம் வரை அவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்றன.

'கள்ளர் அமாவாசையிலே மட்டும் திருடப் போகிறார். சில அதிகாரிகள் அல்லும் பகலும் கொள்ளை அடிக்கிறார்கள். இவர்கள் அடிக்கும் கொள்ளைக்குக் கள்ளர் கொள்ளை உறை போடக் காணுமா?'

'கள்ளர்கள் அகப்பட்டு, இவர்கள் முன் விசாரணைக்கு வரும்போது, 'குயவனுக்குப் பல நாள் வேலை; தடிகாரனுக்கு ஒரு நாள் வேலை' என்பது போல, பலநாள் அவர் திருடிச் சேர்த்த பொருளை ஒரு நாளில் இவர்கள் தட்டிப் பறித்துக் கொள்கிறார்கள்.'

'திருடரிடத்திலும் திருடுகிற திருடர் எத்தகைய திருடராய் இருக்கவேண்டும்? பசுவுக்குப் புலியும், கிளிக்குப் பூனையும் காவல் வைத்தது போல, மக்களுக்குப் பாதுகாவலாக இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் - என்கிறார் வேதநாயகர்.

'சில அதிகாரிகள், லஞ்சம் வாங்கினால் பெயர் கெட்டுப் போகும் என்றஞ்சி, தங்கள் வீடுகளிலே நடக்கிற விசேட தினங்களில் சகல பொருள்களையும் பற்றிக் கொள்கிறார்கள். கலியாணங்களும், ருது சாந்திகளும், உபநயனங்களும் சிரார்த்தங்களும் அவர்கள் வீடுகளிலே அடிக்கடி வரும்.

'கல்லுளிச் சித்தன் போனவழி, காடு மேடெல்லாம் தவிடு பொடி' சில பெரிய அதிகாரிகள் அவர்களுடைய அதிகார

எல்லைக்குள் ஒரூரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போகும் போது, அக்கம் பக்கங்களிலே உள்ள ஆடு, மாடு முதலிய மிருகங்கள், கோழி, கொக்கு முதலிய பட்சிகள், பட்சணமாய் விடுகின்றன. நூறு புலிகள் புறப்பட்டாலும், அத்தனை உயிர்களை அவ்வளவு விரைவிலே அவை தின்னா.

நவதானியங்களும், வைக்கோல் புல் விறகுகளும் - பல கிராமங்களில் இருந்து சுமை சுமையாய் வந்து குவியும். பெரிய துரைக்குப் பயன்பட்டு, எஞ்சிய வற்றைச் சில்லரைத் தேவதைகள் பங்கிட்டுக் கொள்வார்கள்.

'அதிகாரி வீட்டுக் கோழி முட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைக்கும்' என்பது பழமொழி. ஒரு அதிகாரிக்கு யார்மீது துவேஷம் இருக்கிறதோ, அவர் கெடுவது என்னமோ நிச்சயம். வழக்கமாய் லஞ்சம் வாங்குகிற அதிகாரிக்கு எவன் லஞ்சம் கொடுக்கவில்லையோ அவன் சன்ம சத்துரு. அவனைக் கழுத்துறுக்க அதிகாரி சமயந்தேடுகிற படியால், லஞ்சங் கொடுத்து அவன் தயவைச் சம்பாதிக்க வழக்காளி உடன்படுகின்றான்.

இலஞ்சம் வாங்குபவர்க்கும் - கொடுப்பவர்க்கும் தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறது. இலஞ்சம் வாங்குபவர்க்கு, சருவானு கூலமான சட்டம் இதைவிட வேறொன்றிருக்க முடியுமா? அதனால், லஞ்சம் பிராது கொண்டு வர யாரும் துணிகிறதில்லை; துணிந்தாலும், அதிகாரிகளுக்கு விரோதமாய்ச் சாட்சிகள் அகப்படா.

இலஞ்சம் ருசு வாகாவிட்டால், பிராது செய்தவன் தண்டிக்கப் படுவதும் அன்றி, அதிகாரிகள் பகைக்கும் பாத்திரம் ஆகின்றான். இவ்வாறு இலஞ்சம் வாங்குபவர்களுக்குப் பல சாதகங்கள் இருக்கின்றபடியால், அச்சமின்றி அவர்கள் கொள்ளை அடிக்கிறார்கள்.

இலஞ்சம் கொடுப்பவரைத் தண்டிப்பது என்ற விதியை நாம் அனுசரிக்கக் கூடாது. நமது அரசியலாருக்கு இந்த அறிவு சமீப காலத்திலேதான் வந்துள்ளது. ஒருவன் இலஞ்சம் வாங்குகிறான் என்றாவது, வேறு தீயச் செயல்களைப் புரிகின்றான் என்றாவது, பலருக்கும் பகிரங்கமாய்த் தெரிந்தால், அதைப் பற்றி விசாரணை இன்றி, அவன் மீது புகார் வராமல் இருந்தாலும் கூட, அவனை உடனே விலக்கிவிட வேண்டும்.

யோக்கியமான உத்தியோகத்தனை நன்கு மதித்து, நடத்தல் வேண்டும். மூப்பு நோய் முதலியவற்றால், வேலை பார்க்க இயலாவிடின், அவர்களுக்கு உபகாரச் சம்பளத்துடன் ஓய்வு கொடுக்க வேண்டும். அகால மரணம் அடைந்தால், அவர் குடும்பப் பராமரிப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும். பிற்காலக் குடும்ப வாழ்வைக் கருதியே பலரும் இலஞ்சத்தைக் கையாளுகிற படியால், அரசாங்கம் தமது குடும்பத்தைப் பாதுகாக்கும் என்ற நிச்சயமிருந்தால், பலரும் இலஞ்சம் வாங்காமல் பரிசுத்தராய் இருப்பர்''. என்று, வேதநாயகர் கூறுகிறார். அதை வலியுறுத்தி அவர் எழுதியுள்ள பாடல் ஒன்றில்:

''ஏதுக்கு வாங்குகிறிர் இலஞ்சம் - உமக்கு
இதைவிட வேறுண்டோ பஞ்சம்
வாதுக்கு வீணே வழக்குரை பேசி -
வாங்குகிறீர்; என்ன பிழைப்பு அது? சீசி
ஏதுக்கு வாங்குகிறீர் லஞ்சம்?

இப்படி லஞ்சத்தை ஒழிக்க வேதநாயகம் பிள்ளை பாடியுள்ள பாடல்கள் பல உள்ளன. அவற்றிலே ஒரு பாடல் இது;

இராகம் : பியாகடை - சாப்பு
ஆர்வேணுமோ அவர் வாங்கட்டும்

நீ - லஞ்ச

ஆசை வையாதே - நெஞ்சே.

சம்பளம் இருக்கப்பின் மேல் வருமானம்

தனைநாடி ஏன் அதன்மேல் நித்திய தியானம்?

அம்புவி மிசை விளைந்திடும் அவமானம்;

அதைவிட எடுக்கலாமே உபதானம்.

அஞ்சிடும் பல

பஞ்சையோர்ளையே - நிதம் துன்

பஞ் செய்து

மிஞ்சவே அவர்

லஞ்சமேதர

வஞ்சமே புரி

பஞ்சபாதகர் -

ஆர்வேணுமோ - அவர் வாங்கட்டும்

நீ - லஞ்ச

ஆசை வையாதே - நெஞ்சமே!

-என்று, பல பாடல்களை மனம் உருகி, வேதனைப்பட்டு வேதநாயகர் பாடியிருக்கின்றார்.

# 7. பணத்திற்காக வழக்காடுபவன் நல்ல வழக்கறிஞனல்ல

உலகத்திலே உள்ள ஒவ்வொரு நாடுகளிலும், வணிகம், வர்த்தகம், கொடுக்கல் வாங்கல் பணத் தொடர்புகள், ஒருவருக்கும் - மற்றவர்களுக்கும் உள்ள உடன்பாடுகள், உரிமைகள், சொத்து விவகாரங்கள், ஒப்பந்தங்கள் ஆகியவற்றைப் பற்றி எண்ணற்ற சட்ட திட்ட ஒழுங்கும் விதிகளும் ஒழுங்கீனங்களும், நீதிகளும் அநீதிகளும் மக்கள் வாழ்க்கையிலே குறுக்கிடுகின்றன.

அந்த மனித இடர்ப்பாடுகளை ஒவ்வொரு மனிதனும் அறிந்து நீதிமன்றங்களிலே வழக்குகளைத் தொகுத்து வாதாட முடியாது - இயலாது. எனவே, சட்டம் படித்த, தெரிந்த தெரியாத பாமரர்களுக்கு, உதவியாக, வாதாடிட எல்லா நாடுகளிலும் வழக்கறிஞர்கள் தோன்றியுள்ளார்கள்.

வழக்குரைஞர்கள், துன்பமடைந்த பாமர மக்களுக்கு, படிப்பறிவில்லாத ஏழைகளுக்கு பாதுகாவலர்கள்; சொத்து சுகம் இழந்தவர்களுக்கு உதவி புரிபவர்கள். எனவே, அப்படிப்பட்ட வழக்குரைஞர்கள் சகல கலா பண்டிதர்களாக பல்கலை வித்தகர் களாக, பல்துறை விற்பன்னர்களாக, வழக்கு சம்பந்தமான சகல சட்ட திட்டங்களையும், சாஸ்திர சரித்திரங்களையும், நாட்டு நடப்புக்களையும் நன்றாகத் தெரிந்தவர்களாக, எல்லாம் புரிந்தவர்களாக, நன்றாக வாதாடிடும் வல்லமையாளர்களாகவும், நாவன்மையோடு, யூக, வியூகங்கள் தெரிந்த நுட்பமான

சிந்தனையாளர்களாகவும், சமய சந்தர்ப்பப் பேச்சகளுக்குப் பதில் பேசும் சாதுர்ய முடையவர்காளவும், பன் மொழிப் புலமை யாளர்களாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் வழக்குகளுக்குள்ளே ஊடுருவிப் பார்க்கும் சட்ட, சம்பிரதாய, சமுதாய, அரசியல், பொருளாதார ஞானக் கண்களைப் பெற்றவர்களாகத் திகழ முடியும். அப்படிப்பட்ட வழக்குரைஞர்கள் தான் வழக்கறிஞர்களாக வரமுடியும், அவர்களை நம்பி வழக்குத் தொடுத்தவர்களுக்கு நம்பிக்கையைத் தரும்.

'ஒரு வழக்கை வக்கீல் ஏற்பதற்கு முன்னம் அதை அவர் நன்றாய்ப் பரிசோதித்து, நியாய வழக்காகத் தோன்றினால் மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும். அநியாய வழக்குகளை அங்கீகரிக்கக் கூடாது.'

'ஒருவன் கொலைகாரன் என்று தெரிந்த பிறகு, அவன் கொலை புரியவில்லை என்று வக்கீல் வாதிப்பது தெய்வ சம்மதாகுமா? அவர் மனச் சாட்சிக்குத் தான் அது பொருந்துமா?'

'ஒருவன் திருடன் என்று தன்மனசுக்குத் தெரிந்திருக்க, அவன் திருடவே இல்லையென்று சலஞ்சாதிப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம்?'

'பொய்ப் பத்திரம் என்று தெளிவாய்த் தெரிந்த ஒன்றை, உண்மை என்று நிலை நாட்டினால், அதைச் சிருட்டித்தவனுக்கும். வக்கீலுக்கும் என்ன பேதம் இருக்கிறது?'

'வழக்காளி மனதறியப் பொய்யாதரவை உண்டு பண்ணினான். அதை மெய்யென்று வக்கீலும் சாதித்தால், இருவரும் குற்றம் புரிந்தவர்களே'

'சந்தேக வழக்குகளை வக்கீல் ஏற்று அதை நடத்தத் தடை இல்லை; ஏனென்றால் உண்மையைக் கண்டுபிடிப்பது கோர்ட்டா

ருடைய கடமை, அன்றியும், ஒரு வழக்கு பொய் என்று நிலை பெறுகிற வரையிலும், அதனை மெய் என்றே கருதுவதுதான் இயல்பு.'

'ஆனால் சிலர், வழக்கின் தன்மையை யோசியாமல், வந்த வழக்கு எந்த வழக்கானாலும், உடனே அதை ஏற்றுத் தங்களது மனச் சான்றுக்கு மாறாகக் கறுப்பை வெள்ளை என்றும், வெள்ளையைக் கறுப்பென்றும் வாதிக்கிறார்கள். இவர்களுக்கு நியாய வாதிகள் என்ற பெயர் பொருந்துமா?'

'ஒரு வழக்கை ஏற்கும் போது, அதன் உண்மை தெரியாமலிருந்து, பிறகு எப்போது தெரிந்தாலும் - அப்போது அதனைத் தள்ளிவிட வேண்டும். அதன் பின்பு, எதிர்க் கட்சியை ஏற்றுக் கொள்வது முறை அல்ல. பொய் வழக்காடி, நட்டப்படாத படி; கட்சிக்காரனுக்குப் புத்தி போதிப்பதும், வழக்குகளை சமாதானப் படுத்தி வைப்பது வழக்கறிஞர் கடமை.

'தீய வக்கீல், கட்சிக்காரனைக் கண்டதும், 'உன்னுடைய அதிட்டந்தான், உன்னை என்னிடத்திலே கொண்டுவந்து விட்டது. என்னிடத்திலே எப்போது வந்தாயோ அப்போதை உன்னுடைய காரியம் எல்லாம் அனுகூலந்தான்.' 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். எதிரியைத் தலை காட்டாதபடி மடக்குகிறேன். அவன் 'லா' LAW மேலே போனால், நான் "ஈக்குட்டி" மேலே போவேன். அறநூலை அவன் ஆதாரங் காட்டினால், ஆங்கில லாவைக் கொண்டு வெல்லுவேன்; பிரெஞ்சு லாவை அவன் பிரயோகித்தால், செர்மன் லாவை நான் விடுவேன். செர்மன் லா வால் அவன் என்னை அடித்தால், ரோமன் லா வால் நான் அடிப்பேன்." என்று, மெய்யாகவே போருக்குப் புறப்படுபவன் போல, வீர சல்லாபங் கூறுகிறார். இவ்வாறு; ஒரு வழக்கறிஞன் ஒரு கட்சிக்காரனை ஏமாற்றுவது தருமமா?"

'வியாச்சியத் தன்மையையும் தமது பிரயாசையையும், கட்சிக்காரன் தகுதியையும் யோசித்து நியாயமான ஃபீசை வக்கீல் பெறவேண்டுமே அன்றி அதிகம் கேட்பது முறை அல்ல. கட்சிக் காரன் தோற்றால் அவன் கொடுத்த; பீசுகளும், செய்த செலவுகளும் வீண்'.

'வென்றாலோ, கிரமமான செலவு மட்டும் அவனுக்கு எதிரியினால் கிடைக்குமே அன்றி, அதிகமாகக் கொடுத்த ஃபீசு கிடைக்காது. வழிச் செல்வு, படிச் செலவு, வாய்தா தோறும் ஃபீசு, - இப்படி வழக்கு விசாரணையாகிற ஒவ்வொரு கட்டத்திலும் வக்கீலுக்குப் புதிது புதிதாகக் காணிக்கை கொடுத்து, கட்சிக்காரன் பிச்சைக்காரன் ஆகின்றான். துன்பப்படுகிறவர்களுக்குத் துணை புரிவது எல்லாருக்கும் கடமை அல்லவா?'

'உதவிக்கு மாறாக, அட்டைபோல அவர்களை உறிஞ்சுகிறார் களாம் சில வழக்கறிஞர் - சில தேவதைகள் அடிக்கடி பலிகேட்பது போல; இவர்கள் ஃபீசு கேட்கிறார்களாம். இது தருமந்தானா?' -என்று. மாயூரம் முன்சிஃபாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற வேத நாயகம் பிள்ளை கேட்கிறார்.

## *அக்கிரமம்! அக்கிரமம்!!*

'சிலர், பல சில்லாக்களிலே வழக்குகளை வாங்கிப் பூமியை வலம் வருகிறார்கள். காலையிலே காசி; மத்தியானம் மதுரை; அந்தியிலே அயோத்தி, ஆசையே சிறகாகப் பட்சி போலப் பறந்து திரிகிறார்கள். 'இந்த விசுவ சஞ்சாரிகளிடம் வியாச்சியங்களைக் கொடுப்பதைக் காட்டிலும் சகல தஸ்தா வேசுகளையும் அக்கினிக்குத் தத்தம் செய்து விடுவது நல்லது.'

'ஒரு கோர்ட்டு அல்லது ஊரை விட்டு மற்றொரு கோர்ட்டு அல்லது ஊருக்குப் போகிற வக்கீல் தனக்காக வேறொரு வக்கீலை

ஆஜராகும்படி நியமித்துப் போவது வழக்கம். இது யாரால், எக்காலத்தில் - ஏற்பட்டது என்பது ஒருவருக்கும் தெரியாது.'

'வழக்கைத் தானே நடத்துவதாகக் கட்சிக் காரனிடம் ஒப்புக் கொண்டு, உடன்படிக்கைக்கு மாறாக அந்த வக்கீல் வேறொருவரை எப்படி நியமிக்கக் கூடும்?' 'நியமனம் பெற்ற வக்கீலுக்கோ வழக்கை நடத்த மனமில்லாததால், நேரம் இல்லாததால், விவரம் தெரியாததால், அனேக வழக்குகள் அதோகதி ஆகின்றன.'

'ஒருவருக்காக மற்றவர் ஆஜராகிய வழக்கம், அக்கிரமத்திலே பிறந்தது. அக்கிரமத்திலே வளர்ந்து, அக்கிரமத்திலே நிலை பெற்றிருக்கிறது.'

'வக்கீல் தனக்குள்ள சாவகாசத்தையும், சக்தியையும் அறிந்து மிதமாக வியாச்சியங்களை ஏற்கவேண்டுமே அன்றி, பொருளா சையால் பல ஊர்களிலும் பல கோர்ட்டுகளிலும் அளவற்ற வழக்குகளை ஏற்று, எதையும் கவனிக்க நேரமின்றி அவதிப் படக் கூடாது.'

ஏற்றுக் கொண்ட வழக்குகளின் சாராமிசங்களையும், சகல சங்கதிகளையும் கவனித்து அதற்குரிய சட்டங்களையும், சரித்திரங்களையும் மேற்கோர்ட்டார் சித்தாந்தங்களையும், எதிர்க் கட்சியின் பலக் குறைவையும் எடுத்துக் காட்டி, சபைக் கூச்சமின்றி, வாசக தாட்டியாகவும், சமயரஞ்சித மாகவும் வாதிக்க வேண்டும்.'

'நடந்த காரியங்களை விவாதித்து விவரிக்க வேண்டுமே அன்றி, புதிய சங்கதிகளைச் சிருட்டிப்பது, கட்சிக்காரனுக்குச் சாட்சித் திட்டம் செய்து கொடுப்பது அறவே கூடாது!'

## *இது என்ன வாதமோ!*

'சில வக்கீல்கள் எதை நியாயம் என்று ஒரு வழக்கில் வாதிக்கிறார்களோ, அதையே அநியாயம் என்று வேறொன்றில்

வாதிக்கிறார்கள்', 'பிள்ளை மைனரானபோது சொத்துக்களைத் தகப்பன் விரயஞ் செய்யக் கூடாது என்று வாதிக்கிறார்; அவரே, அன்றே, அதே கோர்ட்டில் விசாரனையாகும் வேறொரு வழக்கில் மைனர்க்குரிய சொத்துக்களைத் தகப்பன் விரயஞ்செய்தால், அதை எக்காலத்தும் பிள்ளை ஆட்சேபிக்கக் கூடாது' என்கிறார்'

'இவ்வாறு, சமயத்துக்குத் தகுந்த வாறு வழக்குக்கு வழக்கு முன்பின் முரணாக வக்கீல் செய்யும் வாதம் - துர்வாதம் அல்லவா? வியாச்சியரீதிக்குத் தக்கபடி வெவ்வேறு விதமாக வாதிப்பது சிரமமே - என்றாலும். ஒரே வகை வழக்குகளில் விரோதமாக வாதிப்பது விபரீதம் அல்லவா?'

## தமிழிலே வாதித்தால் தவறு என்ன?

'தமிழகக் கோர்ட்டுகளிலே தமிழ் வக்கீல் தமிழில் வாதிக்காமல், ஆங்கிலத்திலே வாதிக்கிறார்கள். தேச மொழியும் தமிழ்; கோர்ட்டிலே வழங்குகின்ற மொழியும் தமிழ்; நியாயாதிபதியும் தமிழர்; வாதிக்கிற வக்கீலும் தமிழர்; கட்சிக்காரர் தமிழர்.'

'எல்லாம் தமிழ் மயமாயிருக்க, யாருக்குப் பிரீதியாக அவர்கள் ஆங்கிலத்தில் வாதிக்கிறார்களோ தெரியவில்லை. நியாயாதிபதி அல்லது வக்கீல் ஆங்கிலராய் இருந்தால், ஆங்கிலத்திலே வாதிப்பது நியாயம். தமிழ் நியாயாதிபதி முன் தமிழ் வக்கீல் ஆங்கிலத்திலே வாதிப்பது ஆச்சரியமல்லவா?'

'ஆங்கில அதிகாரிகள் கூட தேச மொழியிலே பரீட்சையில் தேறவேண்டும் என்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்க, தமிழ் வக்கீல்கள் தாய் மொழியைத் தள்ளி விட்டு அந்நிய மொழியிலே வாதிப்பது அசந்தர்ப்பம் அல்லவா?'

'தமிழ் நன்றாகத் தங்களுக்குப் பேசவராது என்று கௌரவம் போலச் சொல்லிக் கொள்கிறார்கள். இதனினும் இழிவு வேறொன்று மில்லை.'

'சட்ட நூல்கள் ஆங்கிலத்திலே அமைந்து கிடப்பதாலும், சட்ட நுணுக்கங்களுக்குரிய சரியான பதங்கள் தமிழிலே, இல்லாமை யாலும், தாங்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதாகச் சிலர் சொல்லுகிறார்கள். அது அறியாமையே; உண்மை அல்ல.'

'தமிழ் நூல்களைத் தக்கபடி ஆராய்ந்தால், பதங்கள் அகப்படாமற்போகா. இரண்டொரு குழுக்குறிகளுக்குத் தமிழ்ச்சொற்கள் இல்லையென்றால், அவற்றை மட்டும் ஆங்கிலத்திலே வழங்கினால், அவர்களை யார் கோபிக்கப் போகிறார்கள்?'

'வக்கீல்கள் ஆங்கிலத்திலே வாதிப்பது அக்கிரமம் என்று, சில தமிழ் நியாயாதிபதிகளுக்குத் தெரிந்திருந்தும் - அதைக் கண்டித்தால், தங்களுக்கு ஆங்கிலந்தெரியாதென்று மற்றவர்கள் நினைப்பார்களே என்று ஆங்கில வாதத்துக்கு இடங்கொடுக் கிறார்கள். நடவடிக்கைகளையும் அவர்கள் ஆங்கிலத்திலே நடத்துகிறார்கள்.'

'சில சமயங்களிலே நியாயாதிபதியும் - வக்கீலும் ஆங்கிலத்தை நன்றாகப் படியாதவர்கள் ஆனால், ஒருவர் சொல்லுவது ஒருவருக்குத் தெரியாமல் சண்டையிட்டுச் சங்கடப் படுகிறார்கள். கோர்ட்டுகள் நாடகசாலையாகத் தோன்றுகின்றன.'

'ஒவ்வொரு வாக்கிலும் உண்மையைக் கண்டு பிடித்து, நீதி வழங்குவது கோர்ட்டார் கடமை; தாய்மொழியிலே கோர்ட்டு நடவடிக்கைகள் நடந்தால் மட்டும் உண்மை வெளியாகுமே அன்றி, மக்களுக்குப் புரியாத மொழியிலே நடந்தால், எப்படி உண்மை வெளியாகும்?

'தமிழ் நியாயாதிபதிகள் எல்லா நடவடிக்கைகளையும் ஆங்கிலத்திலே நடத்தும் படி சட்டம் இல்லை. தீர்ப்பை மட்டும் ஆங்கிலத்திலே எழுதலாம். அப்படியிருக்கத் தமிழ நியாயாதி

பதிகளும், வக்கீல்களும் தாங்கள் பயின்ற ஆங்கிலம் மற்நது போகமலிருக்க, அதை வழங்கி, நியாய பரிபாலனத்தைக் குளறுபடி செய்வது ஒழுங்கா? விசாரணைகள், தீர்ப்புகள், அபராதங்கள், ஆக்கினைகளை, அனைவரும் அறிவது நல்லதல்லவா?'

'விவகாரங்களைக் கேட்டு - அதனால், விவேகம் அடைவதற்காகக் கோர்ட்டு வாசல்களிலே மக்கள் கூடுகிறார்கள். ஆனால், அவர்களுக்குப் புரியாத மொழியிலே விவகாரம் நடப்பதால், குருடன் கூத்துப் பார்க்கப் போன கதையாய் முடிகிறது'

சுருங்கச் சொன்னபல், தமிழ் நியாயாதிபதி முன் ஆங்கிலத்திலே வாதிக்கிற தமிழ் வக்கீல்கள், தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் அவமதிக்கிறார்கள்.

❖

# 8. தமிழ் இலக்கிய மும்மூர்த்திகள்!

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை நூற்றுக் கணக்காக அல்ல; ஆயிரக் கணக்காகவுமல்ல; ஏறக்குறைய இலட்சங்களுக்கும் மேற்பட்ட 22 புராணநூல்களையும், 42 பிரபந்தங்களையும், ஆறுகாப்பியங்களையும், எண்ணிலடங்கா தனிப்பாடல் பாக்களையும் பாடிய மாபெரும் கவிராட்சசன்; தனது மூளையிலே முத்தமிழ்ச் சொற்களைக் குடிபுக விட்டவர்! அவரை மாபெரும் கவிதைப் பெருங்கடல் என்று கூறுவர் தமிழறிந்த சான்றோர்.

அத்தகைய கவிதைப் பெருவேந்தர் கி.பி.1852 ஆம் ஆண்டு ஆனிமாத வாக்கில், மாயூரம் வேதநாயகம் பிள்ளையைப் பார்க்கச் சென்றிருந்தார். அப்போது வேதநாயகர் செய்தித் தாளைக் கூர்ந்து படித்துக் கொண்டிருந்தார்.

மகாவித்துவான் பிள்ளை வருவதைக் கண்ட வேதநாயகர், அவரை வரவேற்று, பத்திரிக்கையிலே நான் இப்போது வாசித்துக் கொண்டிருக்கும் செய்தி தங்களைப் பற்றியதுதான் என்று கூறி, அதைப் படித்தும் காட்டினார். அதாவது;

'தமிழுக்குத் தற்போது தூண்களாக விளங்குபவர் இருவர்; ஒருவர் வசனம் வரைவதிலே வல்லவர்; மற்றவர் செய்யுள் புனைவதிலே சிறந்தவர். முன்னவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், பின்னவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

ஆறுமுக நாவலர் சிதம்பரம் நகரிலே பாடசாலை நிறுவி, தமிழை வளர்த்து வருகிறார். மீனாட்சி சுந்தரம் பிள்ளை நடமாடும் புத்தகசாலையாய்த் திரிந்து; தமது செலவிலே அனைவர்க்கும் தமிழை அறிவுறுத்திக் கொண்டிருக்கிறார்.

இவ்விருவருடன் மாயவரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளையையும் எண்ணி, இவர்களைத் தமிழின் 'மும்மூர்த்திகள்' என்று சொல்லலாம்.

ஆறுமுக நாவலர் ஒரு பெரும் புலவர்; தமிழ் வசனத்தை அவர் வளர்த்தார்; மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒரு வித்துவான்; அதுவும் மகா வித்துவான்; குன்றுகளைப் போல பல்லாயிரம் கவிதைகளை ஒவ்வொரு பெயரிலே பாடிக் குவித்துக் காட்டியவர். ஆனால், வேதநாயகம் பிள்ளை ஒரு பல்கலை விற்பன்னர்; நீதி பதியாக நின்று அறமயமான தீர்ப்புக்களை வழக்கிய நேர்மையான பண்பாளர், சிறந்த கவிஞர், அரிய பண்டிதர்; பெரிய புலவர்; சிறந்த கவைவாணர்; உரைநடையிலே தமிழ் உலகுக்கு நாவல் என்ற புதினத்தை முதன் முதலாக எழுதி வழங்கியவர், இவரது உரைகள் தமிழ் உலகுக்கு வழிகாட்டி, இவருடைய கவித்திறத்தைப் பார்க்க வேண்டுமா? இதோ, மகாவித்துவான். மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் கவியாற்றலை வேதநாயகர் வியந்து பாடும் பாடல்

''வித்தகமார் மீனாட்சி சுந்தரவேளை! ஒரு நூல்
விளம்பும் என்னைப்
புத்தமுதார் நின் வாக்கால் துதித்தனை: நீ பாடியது
இப் பொருள் நூல் ஒன்றோ
எத்தனையோ கோவைகள் மற் றெத்தனையே புராணம்
இன்னும் எண்ணில் நூல்கள்
அத்தனையும் இத்தனை என்று எத்தனைநா இருந்தாலும்
அறையப் போமோ?

ஒருநூல் என்று பாடலின் முதல் வரியிலே வேதநாயகர் குறிப்பிட்டது, 1859 ஆம் ஆண்டில் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை எழுதிய 'நீதி நூல்' என்ற அற்புதத் தமிழ் நூலை ஆகும்.

## மகாவித்வானுடன் வேதநாயகர்!

திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதி மன்றத்திலே மொழி பெயர்ப் பாளராக வேதநாயகம் பிள்ளை பணியாற்றிய போது, மலைக் கோட்டை கட்டளைத் தம்பிரான் ஒருவர். தருமபுர ஆதினத் தலைவரால் நியமிக்கப்பட்டார்; அவர் தனது மேலிடத்துக்குக் கீழ்ப் படிந்து நடக்காமல், ஆதினத்து நிர்வாகத்துக்கு விரோதமாக நடந்து வந்தார். அதனால், ஆதினம் அவர்மீது வழக்குத் தொடுத்திட ஆவன செய்துவந்தது.

இந்த வழக்கை நடத்தும் பொறுப்பை ஆதினம் மகா வித்வானிடம் ஒப்படைத்தது. திருச்சிதாயுமானவர் கோயிலிலே தருமபுரம் ஆதீனத்துக்குள்ள உரிமையை வலியுறுத்தி விவகாரங் களை ஆங்கிலத்திலே எழுதி, அதை நீதி மன்றத்தாரிடம் கொடுக்க வேண்டும்.

அந்த நேரத்திலே அந்த வழக்கு விவரங்களை எல்லாம் ஆங்கிலத்திலே எழுத, வேத நாயகம் பிள்ளையை விட்டு விட்டால் வேறுயாரும் தகுதியானவர் இல்லை. அதன் காரணமாக, மகாவித்துவான், வேதநாயகம் பிள்ளையின் உதவியை நாடிச் செல்ல வேண்டிய நிலையேற்பட்டது.

அதே நேரத்தில், ஆதினத்தின் எதிர்க்கட்சியினரும், அதே எண்ணத்துடன் வேதநாயகம் பிள்ளை வீட்டருகே திரளாகத் திரண்டிருந்தார்கள். இதனைக் கண்ட மகாவித்துவான், வேறோர் இடத்திலே இருந்து, தாம் வேதநாயகரைக் காணவந்த

விவகாரத்தை ஒரு கவிதையின் மூலம் வேத நாயகருக்குத் தெரிவித்தார்.

'கடவுள் காரியம் சம்பந்தப்பட்ட எனது கட்சியே நியாயமானது. எதிர்க் கட்சியார் அநியாயக் காரர். வேதநாயகமோ மெய்யே உருவானவர்; கார்மேகம் கைம்மாறு கருதுவதில்லை,' என்ற கருத்தமைந்த மகாவித்துவான் எழுதிய அந்தக் கவிதையைப் படியுங்கள்.

**''மையேறுங் கண்ணி யொருபாகன் காரியம்**
**மற்றிதுதான்**
**பொய்யே அல: முகிற் கேதுகைம் மாறு:**
**பொறையினொடு**
**மெய்யே உருக்கொள் புகழ் வேதநாயக**
**வித்தகன் தன்**
**கையே! உன்னைப் புகழ்வேன்; புகல்வேறிலை**
**கண்டு கொள்ளே**

-என்று, மகாவித்வான் எழுதிய கவிதையை வேதநாயகர் படித்ததும் உடல் சிலிர்த்து, மகாவித்வானை வரவேற்று, எதிர்க் கட்சியார் வேண்டுகோளைப் புறக்கணித்தார். தனக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மகாவித்வான் பணியை நிறைவேற்றி முடித்து, பிறகு நீதி மன்றத்திலே வழக்குத் தொடுக்கப் பட்டு, தருமையாதீனத் தலைமை சார்பிலே நியாயப்படி உரிமையை நிலை நாட்டிட மகாவித்வானுக்குப் பேருதவியாக நின்றார்.

இதனால், வேதநாயகர் மீது மகாவித்வானுக்கும், மகாவித்வான் மேல் வேதநாயகருக்கும், இவ்விரண்டு பேர்கள் மீது தருமை யாதீனத் தலைவரான மகா சந்நிதானத்துக்கும் இடையே நெருக்கமான நட்பு வளர்ந்தோங்கியது. பொன்னும் பொருளும்

விரும்புகிறவர் அல்லரே வேதநாயகர். ஆதலின், வேதநாயர் பெற்றுள்ள பெரும்புகழை வியந்து, மகாவித்வான் 438 பாடல்களால் ஐந்திணைக் கோவை என்ற ஒரு கோவை நூலை, 1853 ஆம் ஆண்டில் எழுதினார். இந்தக் கோவை பிற்காலத்தில் குளத்தூர்க் கோவை என்று பெயர்பெற்றது. அக்கோவையிலே ஒரு கனி இது - சுவைக்க!

**''எறியுங் கலிதன் தலைசாய்த்திடத் தமிழின் அருமை**
**அறியும் புருட மணிவேத நாயகம் அண் ணல்வெற்பில்**
**செறியும் படிநம் இருபேரையும் இன்று சேர்த்த தெய்வம்**
**முறியும் படிஇடை யேசெய்யு மோசற்று முன்னலையே.''**

-புருஷருள் மணி போன்றவர் வேதநாயகர்; தமிழருமை அறிந்தவர்; எங்கள் நட்பிலே இடையூறு இல்லை; எங்களைச் சேர்த்த தெய்வம் இனிப் பிரிக்காது; இன்று போலவே என்றும் இருப்போம்.'' என்று மகாவித்துவான் வேத நாயகர் நட்பைப் பெற்று எக்களித்துப் பாடியுள்ளார். இப்பாடல் அகப்பொருள் துறையிலே தெய்வத் திறம் பேசல் என்ற இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

கி.பி. 1857 ஆம் ஆண்டில் தரங்கம் பாடியிலே முன்சிஃப் பதவி ஏற்ற வேதநாயகர், பிறகு சீர்காழிக்கு மாற்றப்பட்டார். அப்போது, மகாவித்துவானை தன்னுடன் தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டார். அப்போதுதான் வேதநாயகர் நீதி நூல் என்ற ஒரு திரட்டை வெளியிட்டார். அந்த நூல் முழுவதையும் படித்த மகாவித்துவான் மகிழ்ச்சி பெற்று அந்நூலுக்கோர் சிறப்புப் பாயிரம் தந்தார்.

அப்போது சீகாழிப் பிரமுகர்கள் ஒன்று கூடி வேதநாயகரைச் சந்தித்து, சீகாழி சிவபெருமான மீது ஒரு காழிக்கோவை பாடும் படிகேட்டுக் கொண்டார்கள் ஏனென்றால், வேதநாயகர் மீது

பாடப்பட்ட குளத்தூர் கோவையைப் படித்து ரசித்துச் சுவைத்த இலக்கிய ருசி. அதனால், மகாவித்துவானிடம் நேரிற் கேட்க அச்சப்பட்டு வேதநாயகம் மூலமாக வேண்டு கோள் விடுத்தார்கள்.

வேத நாயகம் பிள்ளையும், சீகாழி பக்தர்களும் கேட்டுக் கொண்டதற்கு ஏற்றவாறு மகாவித்துவான், நாளொன்றுக்கு பத்துப், பதினைந்து பாடல்கள் வீதம் பாடி, வேதநாயகரிடம் அதைப் பாடிக் காட்டி சீர்காழிக் கோவை என்ற நூலை பாடி முடித்தார். இந்த நூல், சீர்காழி சிவன் கோயில் தெற்குப் பிரகாரத்திலுள்ள வலம்புரி மண்டபத்திலே முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை தலைமையில் அரங்கேறியது.

அரங்கேற்றத்தில் வழக்கம் போல அழுக்காறுகள் உருண்டு திரண்டு வம்படி வழக்காடின. எவ்வளவோ சமாதனம் கூறியும் வம்பர்கள் வாயடங்க வில்லை. இவர்களின் விதண்டாவாத பொறாமை வினாக்களைக் கண்டு வேதநாயகர் மனம் நொந்து முடிந்தவரை அமைதிப் படுத்த அரும்பாடு பட்டும் முடியாமல் போகவே, தனது சேவகர்களை ஏவி அந்தத் தமிழ் அகம்பாவி களை வெளியேற்றினார்.

அதற்குப் பிறகு சீகாழி சிவபெருமானைப் பார்த்து வேத நாயகர் ஒரு கேள்வி கேட்டார். என்ன கேள்வி அது என்கிறீர்களா? இதோ அது!

''விதி எதிரில் அரிமுதலோர் புகல் புகலி ஈசரே!
விண்ணோர் மண்ணோர்
துதிபொதுபல் பாமாலை பெற்றிருப்பீர்; மீனாட்சி
சுந்தரப் பேர்
மதிமுதியன் கோவையைப் போல் பெற்றீர் சொல்!
இக்காழி வைப்பின் நீதி

அதிபதி நாம் என அறிவீர்; நம் முன்னம் சத்தியமா
அறைகுவீரே.

சீர்காழி ஈசரே! விண்ணோரும் மண்ணோரும் போற்றித் துதிக்கும் பல விதமான பாமாலைகளை நீர் சூடியிருப்பீர்! ஆனால், எமது மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் உமக்குப் பாடிச் சூட்டிய சீர்காழிக் கோவையைப் போல ஒன்றையாவது பெற்றிருப்பீர் களா? சொல்லுங்கள்!

இந்த சீர்காழிப் பகுதிக்குரிய நீதிபதியான நான் உம்மைக் கேட்கிறேன். நம்முன் உண்மையைக் கூறும்; சத்தியமாகச் சாற்றும்; என்று, மகேசனார் முன்பு நீதிமன்ற நீதி வழக்கு விசாரணை செய்வது போல, மீனாட்சி சுந்தரத்தின் காழிக் கோவை போலப் பெற்றதுண்டா? என்று, ஈசனாரையே கேள்வி கேட்கும் அருமை, பெருமையைப் படித்து தமிழ்த் தும்பிகள் பரவசமாகப் பறக்கின்றன.

வேத நாயகர் முக்கண் பெருமானையே கேட்ட கேள்வி, அன்று சிவபெருமானை நோக்கி நக்கீரனார் கேட்ட கேள்வியினை மீனாட்சி சுந்தரனாருக்கு நினைவுறுத்தியது. அதனால், தம்மீது வேதநாயகர் வைத்துள்ள தனி அன்பைக் கண்டு ஆச்சரியப்பட்டு,

"நாட்டுக்கு நல்ல குளத்தூர் வேதநாயக நன் நாமமாலே!
வீட்டுக்கு வாயிலெனும் காழிக் கோவை எனைவிள்ம்பச்
செய்தே
ஏட்டுக்கும் அடங்காத துதிகவிகள் சொற்றனை; நின்
இயற்பாட்டுள்
பாட்டுக்கு நான் செய்த தொன்றோ பல் செய்தாலும்
பற்றா அன்றே.

வேதநாயகம் பிள்ளையின் கவியாற்றலைக் கண்ட மகாவித்துவான் அவரது தமிழ்ப் பண்பை, பாடறிந்து ஒழுகும் அறிவுக் கூர்மையைப் புகழ்ந்து கொண்டாடிப் போற்றி மகிழ்ந்தார். அதே நேரத்திலே காழிக் கோவை நூலும் வேதநாயகர் தலைமையிலே அரங்கேறியது. நூலரங்கத்திலே கூடியிருந்த சேவார்த்திகளும், தமிழ்ச் சான்றோர்களும், நிலச்சுவான் தாரர்களும், பிரபுக்களும் மகாவித்துவான் பெருமானாருக்குப் பொன்னாடைகளைப் போர்த்தி, பரிசுகள் பல வழங்கிப் பாராட்டிப் போற்றினார்கள்.

## *பண்டார சந்நிதிகள் சைவாதீனங்கள்!*

முன்சிஃப் வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் சென்னை மாகாணத்தில் பெரிய, சிறிய இந்து சமய அறநிலையங்கள், அனைத்தையும் சேர்த்து 28,260 கோயில் மடங்கள் இருந்தன. சொந்தமாக இருந்த நிலங்கள் மட்டும் 8 லட் ஏக்கர்; அவற்றின் ஆண்டு வருவாய் 32 கோடி ரூபாயாகும்.

இந்த ஆதினங்களில் பெரியது திருவாவடு துறை சைவமட ஆதினமாகும். இம் மடத்தின் தலைவருக்கு மகா சந்நிதானம் அல்லது பண்டார சந்நிதிகள் என்று பெயர். இவர்கள் கயிலாய பரம்பரையிலே, நந்திதேவர் மரபிலே வந்தவர்கள் என்று கூறுவது மரபு. இவர்கள் மெய்கண்டான் சந்தான வழியிலே வந்தவர்கள் ஆவர்.

மெய்கண்டார் என்றால் யார்? அவர் கண்ட மெய் யாது? கட்வுள் ஒருவர் உண்டு. அவரால் அருள் செய்யப்படும் உயிர்கள் உண்டு. அந்த உயிர்களைப் பற்றி பாசம் என்ற நோயும் உண்டு. அதனைத் தீர்க்க இறைவன் உயிர்களுக்கு உடம்பையும் அதற்குரிய அமைப்பையும் தந்துள்ளார். அதனால், மக்கள் உலக சுக போகங்களையும் அனுபவிக்கிறார்கள்.

இச்சித்தாந்தத்தை குருமரபிலே பெற்று, தமிழிலே விளக்கிய அருட்குரவர் மெய்கண்டதேசிகர் என்பவர். அவர் கி.பி. 1225 ஆம் ஆண்டிலே பிறந்தார். அவர் வழியிலே வருபவரைத்தான் மெய்கண்ட சந்நிதானம் என்பர். சுத்தாத்துவிதம் இவர்கள் கொள்கை. அதைப் பரப்புவதற்கு இவர்கள் தமிழகத்தில் மடங்களைத் தாபித்தார்கள். கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலே சற்று முன் பின்னாக இந்த மடாலயங்கள் நிறுவப்பட்டன. அவற்றிலே ஒன்றுதான் திருவாவடுதுறை; மற்றது தருமபுரம். இந்த மடங்களிலே தவ வேடமும், சிவவேடமும் பூண்ட துறவிகள் தங்கி, ஒழுக்கம் போதித்து வந்தார்கள்.

## ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் - யார்?

திருவாவடுதுறை ஆதினத்தின் ஆதித் தலைவர் நமச்சிவாய மூர்த்திகள். இவர் மெய்கண்டார் வழியிலே வந்த ஏழாவது குரு சந்நிதானமாவார். 16 ஆம் பட்டத்திலே 1869 ஆம் ஆண்டு முதல் எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர். குறவஞ்சி என்ற நூலின் ஆசிரியரான திரிவட ராசப்பன் கவிராயர் மரபிலே வந்த தமிழ்ப் புலமையாளராவார். தமிழார்வமும், தமிழ்ப் பற்றும் அவரது குடும்பவழி வந்த உணர்ச்சியாகும்.

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் வடமொழியிலும் இசையிலும் ஞானப்புலமை பெற்றவர். சித்தாந்த சாஸ்திரங்களிலே தேர்ச்சிபெற்றவர். கவிஞர்களையும், கலைவாணர்களையும் அவரவர் அருமை புரிந்து பெருமைப் படுத்துபவர்.

இந்த நேரத்திலேதான், வேத நாயகம் பிள்ளை மாயூரத்திலே முன்சிஃப்பாக பதவி பெற்றார். அவரின் ஒழுக்க மேம்பாடு, புலமைப் பொலிவு, தமிழார்வஞானம் நீதிபரிபாலனத்திறனால் மக்களிடம் அவர் பெற்ற செல்வாக்கு, ஆங்கிலப் புலமையின்

ஆழம், அனைத்தையும் கேள்விப்பட்ட பண்டார சந்நிதி, வேதநாயகம் பிள்ளையை நேரடியாகப் பார்த்து அளவளாவ விரும்பினார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, மாயவரம் சென்று வேதநாயகரைப் பார்த்துப்பண்டார சந்நிதியின் விருப்பத்தை வெளியிட்டார். முன்சிஃப்பைக் குறித்து தேசிகள் எவ்வளவு விவரமாக் கேள்விப்பட்டாரோ, அதே அளவுக்கு தேசிகரைப் பற்றி வேதநாயகரும் கேள்விப் பட்டிருந்ததால், அவரைப் பார்க்க முன்சிஃப் விரும்பினார். ஆனால், நீதி மன்றப் பணிகளது பளுகாரணமாக உடனடியாக அவரிடம் சென்று காண முடியாத நெருக்கடி நிலை இருந்தது. அதனால் முன்சிஃப், தனது வர இயலாமையைக் குறித்து செய்யுள் ஒன்றை எழுதி தேசிகருக்கு அனுப்பிவைத்தார் அப் பாடல் இது:

''விதியிருந்த பதியெனும் சுப்பிரமணிய தேசிக!
மெய்ஞ்ஞானக் குன்றே!
துதியிருந்த நின்புலவன் சொல்வழியே பல்வழியும்
தோன்றும்; நீ என்
மதியிருந்தாலி; பிரிந்திடவும் மனம் பொருந்தாய் என
இருந்தேன் வான்கோ முத்திப்
பதியிருந்தாய் எனவந்த மாபுலவன் பொய்சொலவும்
படித்தான் மாதோ

வேதநாயகரின் மேற்கண்ட செய்யுளுக்குரிய கருத்து இது; ''திருவாவடு துறை வாழ் தேசிக! மெய்ஞ்ஞான மலையே! யாவரும் புகழும் தங்கள் புலவராகிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை சொல்வதைக் கொண்டு, எல்லாம் தெரிந்து கொள்ளுங்கள். புலவர் என்னிடம் ஒரு பொய்யைச் சொன்னார். என்ன என்று அதைத் தெரிவித்து விடுகிறேன்.

எப்போதும் என்னுள்ளத்திலே தாங்கள் குடிகொண்டிருக்கிறீர்கள். என்னை விட்டுப் பிரியச் சற்றும் தாங்கள் சம்மதிக்க மாட்டீர்கள் என்று நான் துணிவுடனிருக்க, என்பால் வந்த மகாவித்துவானோ: தாங்கள் திருவாவடு துறையிலே இருப்பதாகச் சொல்லுகிறார். இது பொய்தானே! அவரோ மாபெரும் புலவர்; அவர் பொய் சொல்லவும் படித்தார் போலும்!

-என்று, வேதநாயகம் பிள்ளை, மகா சந்நிதானம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு ஒரு செய்யுள் எழுதி தனது 'அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்'' என்ற தமிழ் நேயப் பாசத்தை தெரிவித்துக் கொண்டார். செய்யுளைப் படித்த தேசிகர், வேத நாயகம் பிள்ளை கிறித்துவரானாலும், மத, இன, சாதி, பேதம் கடந்த மனித நேய ஞானி என்பதை உணர்ந்து மகிழ்ச்சி பெற்றார்.

'மகாவித்துவான் பொய் சொல்லவும் படித்தார் போலும்' என்ற செய்தி அடங்கிய செய்யுளைக் கண்ட திருவவடுதுறை பண்டார சந்நிதானம், மிகவும் மகிழ்ந்தார். அவரைக்காண வேண்டுமென்று முன்பிருந்த ஆசை அவருக்கு மேலும் அதிகமாயிற்று. அதனால், தானே நேரில் சென்று வேதநாயகரைக் காணவேண்டும் என்று தேசிகர் விரும்பினார்.

அதற்கேற்ப அப்போது துலா மாதம் சூரிய கிரகணம் வந்தது. காவிரியில் மக்கள் அன்று நீராடுவது பழக்கம். அதற்கேற்ப, சந்நிதானம் மாயூரம் வர இருப்பதாகவும், துறவி ஒருவர், இல்லறவாசிகள் இல்லம் செல்வது தகாது என்றும, எனவே, நேரில் வந்து தன்னைச் சந்திக்குமாறும் வேகநாயகருக்கு தேசிகர் செய்தி அனுப்பினார்.

அதைப் பெற்ற வேதநாயகர், அதற்கு ஒரு பதிலையும் கவிதை வடிவில் அனுப்பினார். அதில்; ''புலவன்தான் பொய் சொன்னான்: இப்போது தேசிகர் சொல்வதோ- அதைவிட மிகவும் விசித்திரமாக இருக்கிறது: என்மனையகத்து எங்கே பார்த்தாலும் தாங்களே

வீற்றிருக்க, பிறர்மனை புகாப் பெருந்துறவு பூண்டாய் என்பது முழுப் பொய்தானே'' என்ற கருத்தடங்கிய கவிதையை அவர் எழுதியனுப்பினார். அக் கவிதை இது:

''இல்வாழ்வை நீத்துஅற மேற்கொண்ட நீ, பிறர்
இல்லிடத்து
செல்வாழ்வு சற்றும் விரும்பாய் என்பர்; இது, சித்திரமே!
புல்வாழ்வுடைய என்வீடெங்கும் நீபரி பூரணனாய்
நல்வாழ்வுற்றாய்: சுப்பிரமணி யானந்த நற்றவனே!''

- என்ற கவிதை இது. கற்றவர் சிரோன் மணியே! மாசற்ற மணி அல்லவா தேசிகர், அவரைத் தினந்தினம் தரிசிக்கத் தங்கள் கண் செய்த தவம் யாது? அவர் சொல் கேட்கத் தங்கள் காது செய்த தவம் யாது? அவருடன் உரையாடத் தங்கள் 'நா' தான் என்ன தவம் செய்ததோ? நான் அறியச் சொல்லுங்கள்; என் காது குளிரச் சொல்லுங்கள்''

-என்ற கருத்தில், அவர் எழுதிய கவிதை இது

''கற்றவர்சி ரோமணியாம் மீனாட்சி சுந்தரமா கலைவல்
லோய்! மா
சற்றவன்சுப் பிரமணிய தேசிகனைத் தினங்காண
அவன்சொல் கேட்க
மற்றவனோ டுரைகூறப் பெற்றநின்கண் காதுநா மண்ணிற்
செய்த
நற்றவம் யாது? அறிவே என்கண்காது நா அறிய
நவிலுவாயே'

மகாவித்துவானிடம் மேற்கண்ட கேள்வியைக் கேட்டதுமட்டு மல்ல; வேதநாயகர் நமது நெஞ்சுக்கு அறிவுறுத்தியது இது. அன்று சூரிய கிரகணம் அல்லவா?

'அமாவாசையும் கிரகணமும் சேர்ந்து வந்தால் இருள் அதிகமாம். அது எங்கும் பரவும் என்று மனமே! நீ அஞ்ச வேண்டுவதில்லை. சுப்பிரமணிய தேசிகனாகிய ஞான சூரியன், இங்கே உதிப்பதால், அதன் முன் இருள் எம்மாத்திரம்? என்ற கருத்துப்பட;

**"குகுவும் கிரணமும் கூடலால் கங்குல்**
**மிகுமென்று உளமே வெருவல் - நகுதுறைச்**
**செப்பாய மாசுப்பி ரமணிய தேசிகனாம்**
**அப்பரிதி ஈங்குதித்த லால்**

எழுதிய கவிதையையும், தமக்கு தேசிகரிடம் உள்ள பெருமதிப்பையும் தெரிவித்து, விருத்தமும் வெண்பாவும் பாடித், தேசிகர் நீராடும் இடத்திற்கே வருவதாகத் தகவல் அனுப்பினார் வேதநாயகர்.

கடிதத்தைக் கண்ட தேசிகரும் வேதநாயகர் எப்போது வருவார். எப்படி அவரை வரவேற்கலாம் என்று துடித்துக் கொண்டிருந்தார்.

ஞானச் செல்வரை நேரிடையாகப் பார்க்கப் போகிறோம் என்ற துடிப்பாசையுடன் வேத நாயகரும். மகாவித்வானுடன் நீராடும் துறைக்கு வந்தார்.

ஞான தேசிகர், கலைவிற்பன்னர், கவிமகான் ஆகிய மூவர் சந்திப்பிலே ஒருவருக்கு ஒருவர் வழங்கிய உபசாரங்கள்; ஞான உரையாடலிலே பளபளத்த நவரத்தின மணிக் கருத்துக்கள்: எத்தனையோ! அவற்றிலே ஒன்று.

ஒரு விருத்தப்பா மூலமாக வேதநாயகர் தேசிகரைக் கேள்வி கேட்கும் நோக்கில் எழுதுகிறார். என்ன அது? "சுப்பிரமணிய தேசிக! மாதவத்தராகிய தாங்கள் எங்கே? ஆதவனாகிய - சூரியன் எங்கே? சூரியன் உவர்க்கடலில் மூழ்குகின்றான்; கீழ்த்திசையிலே

தோன்றுகின்றான்; சுடுகின்றான்; அடுத்தோரை மதி, சந்திரனை அழிக்கின்றான்; அத்தமிக்கின்றான் - ஆனால், ஞான பானுவாகிய தாங்களோ மேல் திசையிலே தோன்றுகின்றீர்கள், யாவர்க்கும் நிழலாக நிற்கின்றீர்கள்; அடைந்தவர் மதியை அறிவை விரிவாக்குகின்றீர்கள்; ஞானக் கடலிலே மூழ்குகின்றீர்கள். அத்தமனம் என்பது எந்நாளும் தங்களுக்கு இல்லை.

வேதநாயகரின் பாடலுக்கு திருவாவடுதுறை ஆதீனம் ஒரு வெண்பாவிலே விடை கூறிய பாடல் இது;

**"இந்துவினை நோக்கும் எழிற்கை ரவம் ஏக தந்துவினை**
**நோக்கும் சமயிமனம் - முந்துலகில்**
**நன்றமையும் நீதிநல வேத நாயகமால்**
**உன்றனையே நோக்கும் உளம்"**

குமுத மலர் சந்திரனையே நோக்கும், சமய குரவர் மனம் ஞான நூலையே நோக்கும்; அதுபோல வேத நாயக! தங்களையேபற்றி நிற்கிறது எமது மனம் என்ற பொருளுடைய வெண்பாதான் மேலே உள்ளது.

-கேள்வியும் - பதிலுமான இந்த இருவர் கவிதைகளையும் கேட்டுக்கொண்டிருந்த மகாவித்துவான் சும்மா இருப்பாரா? இருவருடைய பாக்களையும் ஊடுருவி எது எத்தகையது என்பதை ஆய்வு காண்கிறார். முதன்மை வாய்ந்த தேசிக முனிவரே, குளத்தூர் வேத நாயகம் ஒரு கார்மேகம், அது பொழியும் கவிமழை முன்பு பாடவல்ல பாவாணர் பாவினங்களே தலைதூக்கா; தங்கள் புகழ்முன் ஏனையோர் புகழ் எம்மாத்திரம்? அதுபோல

"குடு புகக்மலி திருவா வடுதுறைச் சுப்பிரமணிய
குரவர் ஏறே!
பீடு மலிவ்ளங் குளந்தை வேதநாயக மேகம்
பெய்யும் பாமுன்

பாடுதிறலாளர் பா, உயிர்முன் குற்றியலுகரம்
படும்பா டெய்தும்
நீடுதிறல் நின்புகழ்முன் ஏனையோர் புகழ்போலாம்
நிகழ்த்தல் என்னே!''

இவ்வாறு, ஏற்றத் தாழ்வின்றி, மகாவித்துவான் இருவரையும் இரு கண்ணாகப் போற்றிக் கொண்டாடினார். உயிர்முன் குற்றியலுகரம் படும்பாடெய்தும் என்ற எடுத்துக் காட்டு இருவர் நட்பையும் எண்ணிப் பார்த்து மகிழ வேண்டியதாகும்.

நாடு + அழகிது = நாடழகிது என்பதிலேயான நாடு என்ற சொல்லிலுள்ள 'டு' என்ற உயிர்மெய் எழுத்திலே உள்ள 'உ' என்ற உகர உயிர் ஈறு உள்ள நிலைமொழி ஓடி விடுகிறது அல்லவா? அது போலக் கவிஞர்கள் ஓடுவர் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார் மகாவித்துவான்.

ஞான தேசிகர் மீண்டும் வேத நாயகரைச் சந்திக்க ஆர்வம் கொண்டார். அதற்காக பண்டார சந்நிதியார் தனது வண்டியையே அனுப்பிவைத்தார். மறுநாள் வெள்ளிக் கிழமை, மேற்கே சூலம். எனவே, சனியன்று காலையிலே திருவாவடுதுறைக்கு வருவதாக ஒரு கவிதையைத் தூது அனுப்பினார்:

''போதமுறுசுப் பிரமணிய புனித; நின்பால் வருவதற்கு
வேதவியாழன் ஆகாதாம்; வெள்ளி மேற்கே சூலமாம்
ஆதலாலே, திரவாரம் அருணோதயம் ஊர் ஆவலுடன்
சீதமலரை நாடிவரும் தேன்போல் வருவேன் திரமிதுவே.

தூது அனுப்பியதற்கு ஏற்றபடி சனிக்கிழமை காலையில், மலரை நாடும் வண்டுபோல மகா சந்நிதானத்தைச் சென்று தரிசனம் செய்தார். மழையைப் பார்க்கும் பசும்பயிர் போல, தாய் முகம்

நோக்கும் குழந்தைபோல அவரைத் தரிசிக்கக் கருதும் அடியார் தவிப்பு எம்மாத்திரம் என்கிறார்.

அதற்கு அவர் காரணம் காட்டும் போது, தேசிகர் கல்லாத கலை இல்லை; அனைத்தையும் அவர் அறிவாராம்; எனவே, அவரைப் புகழாத புலவர் இல்லை; அவர் குணக்குன்று; அவரைப் பாராட்டாத மன்னர்கள் இல்லையாம் அதை அவர் தனது கவிதையில்:

''நீர் நாடு வளத்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய நிமல்!
கேண்மோ
கார்நாடும் பைங்கூழ் போல், கதிநாடு தொண்டர்கள்
போல்கமழா நின்ற
தார்நாடும் மதுகரம்போல் தாய்நாடு சேயினைப் போல்
தயையின் மிக்க
சீர்நாடும் நின் சமுகம் நேர்நாடி வந்தனன் யான் தெரிந்து
கொள்ளே''

''நல்லார்தம் இதயமலர் தனில்வளர் சுப்பிரமணிய
நல்லோய்! நீதான்
கல்லாத நூல்இல்லை; நீ காணாத பொருள் இல்லை;
பல்கவிஞர் நின்மேல்
சொல்லா பா இல்லை! நின்றுதியாத மன்னரிலை; தூய
நின்கண்
இல்லாத குணம்இல்லை; ஆயிரநா ஆனாலும் உன்சீர்
இயம்பல் பாற்றோ

அன்றுகண் டனம்நினை; அதனினம் இனிதமைந்தது
இன்றுகண் டனம் ஆதலின், அஃது இருங்கழை நுனியே
நன்று நீபுரி நீதியின், நயந்துமே நாளும்

வென்று மேம்படு வேதநாயக விறல்வேளா.

அரியபுகழ் பெறும்வேத நாயகமா மசிபாலற்கு அமைந்த
வாக்கின்

பிரியமிகு சுவைஅறிஞர் செவியுணவு கொளுந்தோறும்
பேசேஞ் ஞான்றும்

உரியவயிற் நுணவொழித்து வள்ளுவர்தம் சொற்பொருள்
வற்புறுத்தும் என்னில்

ஏதரிய அஃது இச்சுவையது இத்தகையது என்றெடுத்து
யாம் செப்பலாமே.

நீதிபதியும், சமயக் குரவருமான இவர்கள் இரண்டு பேர்களுக்கும் மதம் வேறு வேறு. என்றாலும், தமிழர்களான இவர்கள் கலந்துரையாடுவதற்கு மதபேதம் குறுக்கே நிற்கவில்லை ஆனால், இருவரும் கலை வித்தகர்கள். இவர்கள் மகிழ்ந்து அளவளாவிய போது அக் குழுவிலே சூரிய மூர்த்தியா பிள்ளையும் மகாவித்வானும் இருந்தார்கள். இவர் துணைக் கலெக்டராக இருந்தவர். கலெக்கடர் என்றால் அந்த நாளில் கேட்கவா வேண்டும்? ஒரே சர்வாதிகாரி தர்பார்தானே. வேதநாயகருடைய விநயமான வார்த்தைகளும், பண்டார சன்னதிகளுடைய அருளுரைகளும், அவர்களுடைய உரை யாடலைக் கேட்டுப்பரவசப்படும் கலெக்டருடைய பரிவும், வேதநாயகருடைய ஆசுகவிகள், மதுரகவிகள் வித்தாரக் கவிகளைக் கண்ட மக்கள், கவிபாட வல்லார்அவர் ஒருவரே வேதநாயகம் என்று பேசினார்கள் திருவாவடுதுறை ஆதினத்தை விட்டு வேதநாயகர் மாயூரம் திரும்பினார்.

## பரிந்துரைக் கவிதைகள்

1876 ஆம் ஆண்டில் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மரணமடைந்தார். அவர் மகன் சிதம்பரம் பிள்ளை குடும்ப வறுமையிலே வாடியது; இதைக் கேள்விப்பட்ட வேதநாயகர் ஆதின தேசிகருக்கு ஐந்து பாடல்களை எழுதி அனுப்பினார்.

இந்தக் கவிகளைக் கண்ட பண்டார சந்நிதி, அவரை அழைத்துவரச் சொல்லி என்னென்ன உதவிகள் அவருக்குத் தேவையோ அவை அனைத்தையும் செய்தார். வறுமையிலே வாடிய அவரது வாழ்வு வேதநாயகரால் வளம் பெற்றது.

வீரபத்திரன் என்பவர் ஓர் ஆசிரியர். அந்த ஆசிரியருக்கு கலெக்டர் சூரிய மூர்த்தியா பிள்ளையிடம் சிபாரிசு தேவைப் பட்டது. அதனால், வேதநாயகர் கலெக்டருக்கு ஒரு பரிந்துரைக் கவிதை எழுதியனுப்பி, வேண்டிய உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். வேதநாயகர் சிபாரிசுக் கடிதக் கவிதையைக் கலெக்டர் படித்து மகிழ்ச்சியடைந்து, அவருக்குரிய உதவிகளைச் செய்தார்.

கோபால் ஐயர் என்பவருக்கு திருவாவடு துறையில் நிலம் இருந்தது. அதை வாங்கும் சக்தி ஞானதேசிகர் ஒருவருக்கு மட்டுமே இருந்ததால், பண்டார சந்நதிகளுக்கும் ஒரு பரிந்துரைக் கவி எழுதியனுப்பி கோபல் ஐயருக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டார் வேதநாயகம். அதற்கேற்ப ஆதினத்தலைவரான தேசிகர் வேதநாயகர் எழுதியதைப் படித்து வேண்டிய உதவிகளைச் செய்தார்.

# 9. மெல்லத் தமிழ் இனி சாகுமென மனம் நொந்தார்.

ஆட்டுத்தோல் இடம் கேட்டு இந்தியாவுடன் வணிகம் புரிய வந்த ஆங்கிலேயக் கிழக்கு இந்தியக் கம்பெனியார், நாடு முழுவதையும் ஆட்சி செய்யும் நிலையேற்பட்டது உலக வரலாற்றில் அதிசய சம்பவமாகும்.

ஆங்கில ஆதிக்கம் நாடெங்கும் பரவியபோது, இந்திய மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறவேண்டும் என்பதற்காக, அரபி, சமஸ்கிருத கலை நாகரீகங்களை வளர்ப்பதிலே அதிகாரிகள் அக்கறை காட்டினார்கள்.

வெள்ளையர்கள் நிருவாகம் நடைபெற வேண்டாமா? அதற்கு இந்திய அதிகாரிகள் தானே தேவை. அதனால், அவர்களுக்கு மொழிப் பயிற்சி தரவும், இந்தியர்கள் அபிமானத்தைப் பெறவும் 1780 ஆம் ஆண்டு, வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது சொந்த முயற்சியில், கல்கத்தாவில் ஒரு மதராசா ஒன்றை உருவாக்கினார். இதன் நோக்கம், அரபி, பாரசீகக் கலைகளிலே இந்தியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதாகும்.

அதற்குப் பிறகு 1791 ஆம் ஆண்டில், காரன்வாலிஸ் காலத்தில் சமஸ்கிருதக் கலையை வளர்ப்பதற்கென்று காசி மாநகரிலே ஒரு பல்கலைக் கழகம் உருவானது. 1811 ஆம் ஆண்டில் மிண்டோ பிரபுவும் சமஸ்கிருதப் பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அதனை வளர்க்க முற்பட்டார்.

இக் காலங்களிலே, கம்பெனி சர்க்காரிலே ஆங்கில மொழிப் பயிற்சி அல்லது. ஐரோப்பியக் கல்வி முறை என்ற பிரபல்யம் பெறவில்லை. அரபி, சமஸ்கிருதக் கல்வி முறைக்கே ஆட்சி ஆதரவாய் இருந்தது.

## ஆங்கில மொழி வாதம்!

இதற்குப் பிறகு, ஆட்சி பீடமான கல்கத்தாவிலே, நாகரீகக் கலப்பால் வங்காள மக்களிடையே ஓர் உணர்ச்சி ஓங்கியது. ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை அவர்கள் வற்புறுத்தினார்கள்.

இராசாராம் மோகன் ராய் என்பவரை நீங்கள் அறிவீர்கள். வங்கமொழியிலே அவர் பெரும் புலவர்; சமஸ்கிருத மொழியிலே பண்டிதர்; ஆங்கிலத்திலே பேரறிஞர்; ஆதி சீர்திருத்த வாதி. ஒருமுறை இவர் சாட்சியம் அளித்த போது, வங்காளிகள் மூன்றில் இரண்டு பங்கினர் தங்கள் குழந்தைகள் ஆங்கிலம் கற்கவே விரும்புகிறார்கள். என்றார்.

இந்தக் கால எல்லையிலே கல்வி பற்றி ஒன்றுக் கொன்று முரண்பட்ட இரண்டு கருத்துக்கள் நாட்டிலே நடமாடின. ஒன்று அரபி சமஸ்கிருதக் கல்வி ஆகிய கீழ்த் திசைக் கலை ஞானங்களை வளர்ப்பது; இந்த வைதிகக் கொள்கை ஆங்கிலேயர் ஆட்சியில் ஆதிக்கம் பெற்றது.

மற்றது, ஆங்கில மொழி அறிவிலே இந்தியரைப் பயிற்றுவிப்பது. ஆரம்பத்திலே இந்த ஆங்கிலவாதிகளுக்கு ஆட்சியிலே செல்வாக்கில்லை. அதனால், வைதீகர் கை ஓங்கி இருந்தது.

## தாய்மொழி வாதம்!

வேகமாக வளர்ந்து வந்த இந்த வாதங்கள் இடையே தாய் மொழி வாதம் ஒன்று தலை எடுத்தது. இதன் தலைவர் வில்கின்சன் WILKINSON என்பவர்.

இவர், பாமரமக்கள் இடையே கல்வியைப் பரப்புவது அரபி சமஸ்கிருத மொழிகளால் முடியாது. ஆங்கிலத்தால் கூடாது. தாய்மொழி ஒன்றின் மூலம்தான் அது நடக்க முடியும் என்ற உண்மையை, 1834 ஆம் ஆண்டின்போது வெளியிட்டார்.

பம்பாய் மாகாணத்திலே எலிபென்ஸ்டன் என்பவர் கவர்னராய் இருந்தபோது, 1821 ஆம் ஆண்டு முதல் 1827 ஆம் ஆண்டு வரை இந்தத் தாய்மொழிக கொள்கை அவரால் அமுல் நடத்தப்பட்டது.

கணிதம், இயற்கை, மருத்துவம் போன்ற நூல்கள், மராத்தி, குசராத்தி மொழிகளில் 1823 ஆம் ஆண்டு முதல் 1826 ஆம் ஆண்டுகளிலே மொழி பெயர்க்கப்பட்டு, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் தாய்மொழி மூலம் போதிக்கப் பட்டன.

## தாழ்ந்தது தாய்த் தமிழ்

அறிஞர்களுக்கு ஆங்கிலம்; பாமரர்களுக்குத் தாய் மொழி; ஆங்கில மொழி அறிவு வளர்வதால் பரவும் கலைஞானத்திலே அவரவர் தாய் மொழி தானாக வளரும். என்ற இங்கிலீஷ் காரர்கள் முடிவு சமஸ்கிருதத்திற்குப் போலவே, தமிழுக்கும் விரோத மாகவே அமுல் நடத்தப்பட்டது.

"ஆங்கிலம் ஒன்றையே கற்றார் - அதற்கு
ஆவியோடு யாக்கையும் விற்றார்.
தாங்களும் அந்நியரானார் - செல்வத்
தமிழின் தொடர்பற்றுப் போனார்."

என்ற நிலை ஏற்பட்டது.

வேதநாயகம் பிள்ளை தம் இளமையிலேயே தாமாகவே தமிழ் மொழியுடன் - இங்கிலீஷ் மொழியையும் கற்றார். அப்போது, ஆங்கிலம் அறிந்தவர் அருமை. பத்து ஆண்டுகளிலே இவர் பதவி வகித்த போது, கல்விமான்கள் தமிழைக் கைவிட்டு விட்டார்கள்.

ஆங்கிலத்திலே எழுதவும் பேசவும் தெரிந்த அளவிலேயே, அதில் தேர்ந்த புலமை அடைந்தவர்களைப் போல தங்களை மதித்துக் கொண்டார்கள். தமிழைப் படிப்பதும். தமிழில் பேசுவ்தும், பெருமைக் குறைவான செயல் என்று அவர்கள் எண்ணினார்கள்.

தாய்மொழிப் பற்றுடன், நாட்டுப் பற்றும் அவர்களிடம் அற்றுவிடவே, நமது நாட்டை இகழ்வதும், நாகரீகத்தை நகையாடுவதும், ஐரோப்பிய நாடுகளைப் புகழ்வதும் அவர்களுக்கு சோறும் நீரும் போல பயன்பட்டன. இத்தகையவர்கள் எண்ணிக்கை பெருகின. அதனால், 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்ற சூழ்நிலையை, தேசிய கவி பாரதி பாடுவதற்கு முன்பே, 'பேதை ஒருவன் கூறினான்' என்ற எண்ணம் எழுவதற்கு முன்பே; மாயூரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை தமிழின் அன்றைய நிலையை நன்கு புரிந்துக் கொண்டு மனம் நொந்து வருந்தினார். இதுபற்றி அவர் எழுதவதை மேலும் படியுங்கள்;

## தமிழ் அருமை பெருமை எங்கே?

'கணக்கில் அடங்கா கடவுள் கோயில்களும், பிரமாலயங் களும், அன்ன சத்திரங்களும், நீர் வளமும், நிலவளமும், நாகரீகமும், ஆசார நியாயங்களும் நிறைந்த இந்தத் தமிழ்நாடு, மற்றைய நாடுகளிலும் விசேடம்; அப்படியே தமிழ் மொழியும் மிகவும் மேலான மொழி என்று சகலரும் ஒப்புகிறார்கள்.!

'அகத்தியன் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய மொழிகளின் தோழமை பெற்று, சங்கப் புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட தேசம் முழுவதும் ஏக சக்ராதி பத்தியம் செலுத்தி வந்த தமிழ் அரசியை இப்போது இகழலாமா?

நம்மைப் பெற்றதும் தமிழ்; வளர்த்ததும் தமிழ்; நம்மைத் தாலாட்டித் தூங்க வைத்ததும் தமிழ், நம்முடைய மழலைச் சொல்லால், நமது தாய் தந்தையரை மகிழ்வித்ததும் தமிழ், நாம் குழந்தைப் பருவத்திலே பேச ஆரம்பித்த போது, முந்தி உச்சரித்ததும் தமிழ்; நம்முடைய அன்னையும், தந்தையும் நமக்குப் பாலோடு புகட்டினதும் தமிழ்; இப்போதும் நம்முடைய மாதா பிதாக்களும் மற்றவர்களும் பேசுகிற மொழி தமிழ்; வீட்டு மொழியும் தமிழ்: நாட்டு மொழியும் தமிழ்.

## சொந்த மொழியை நாம் கைவிடுவதா?

இத்தகைய அருமையான மொழியை விட்டு விட்டு, சமஸ்கிருதம் லத்தீன் முதலிய அந்நிய மொழிகளைப் படிக்கிறவர்கள், சுற்றத்தார்களை விட்டு விட்டு அந்நியர்களிடம் நேசம் செய்கிறவர்களுக்குச் சமானம்.

ஆபத்திலே சுற்றத்தார் உதவுவார்களே தவிர, அந்நியர் உதவார். அப்படியே எந்தக் காலத்திலும் நமக்குத் தாய் மொழி உதவுமே அல்லாமல், அந்நிய மொழி உதவுமா? லத்தீனுக்கும், சமஸ்கிருதத்திற்கும் சொந்தக் காரர் இல்லை. அவை இறந்து போன மொழிகள். தமிழ் முதலியவை சீவிக்கிற மொழி. ஒருவர் கருத்தை ஒருவருக்கு வெளியிடுவதே பல மொழிகளைப் படிப்பதன் பயன்: சமஸ்கிருதம், லத்தீன் படித்து யாரிடத்தில் பேசக் கூடும்? மேலும், அவை கடினமும் வருத்தமுமான மொழிகள்; சீக்கிரத்தில் மறந்து

போகத் தக்கவை. உரையாடலுக்கும் உலக வியாபாரங்களுக்கும் உபயோகமில்லாத அந்த மொழிகளைப் பிரயாசை எடுத்துப் படித்தும் பிரயோசனம் என்ன? அவை அழகும், அலங்காரமும் பொருந்திய மொழிகள் என்பதிலே சந்தேகமில்லை.

அவகாசம் உள்ளவர்கள் தாய் மொழியுடன் அவற்றைப் படிப்பது; அதிக விசேடந்தான். ஆனால் சொந்த மொழியை நன்றாகப் படிக்காமல், அயல் மொழிகளிலே காலம் எல்லாம் போக்குவது கூடாது.

## ஆங்கிலம் விரோதமல்ல

ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய அரசாங்க மொழிகளைப் படிக்க வேண்டாம் என்று நாம் விலக்கவில்லை. ஏனென்றால், நாம் நடத்த வேண்டிய சட்டங்களும் ஒழுங்குகளும், நியாயப் பிரமாணங் களும், அவற்றிலே இருக்கிற படியால், அவை தெரியாவிட்டால் அந்த ராசாங்கத்தை நாம் எப்படி நிர்வகிக்கக் டும்?

சன்மார்க் கங்களைப் பற்றியும், உலகத்துக்கு மிகவும் உபயோகமான பலவிஷயங்களைப் பற்றியும், அந்த ராச மொழி களிலே அநேக அருமையான கிரந்தங்கள் இருக்கிறபடியால், அவைகளைப் படிக்கப் படிக்க, அறிவு விசாலிக்கும் என்பது திண்ணமே. ஆனால், மாதா வயிறெரிய மகேசுவர பூசை செய்வதுபோல, சொந்த மொழிகளைச் சுத்தமாக விட்டு விட்டு, ராச மொழிகளை மட்டும் படிப்பது அநுசிதம் அல்லவா?

அநேகர், தங்கள் தாய் மொழியிலே கையெழுத்துக்களைக் கூடப் பிழையில்லாமல் எழுத அசக்தர்களாய் இருக்கிறார்கள். சிலர், தமிழ் தெரியாமல் இருப்பது, தங்களுக்குக் கெளரவமாகவும் கருதுகிறார்கள் - தாய்மொழி ஞானம் தங்களுக்கு எவ்வளவு குறைவாய் இருக்கிறதோ அவ்வளவு ராச மொழியில், தங்களைச்

சமர்த்தர்கள் என்று சகலரும் எண்ணுவார்கள் என்று நினைத்துத் தமிழை அலட்சியம் செய்கிறார்கள்.

தமிழ்ப் புத்தகங்களை அவர்கள் கையிலே தொடுகிறதாய் இருந்தால், பாம்பின் புற்றுக்குள்ளே கையை விடுவது போலிருக்கும். தமிழ் பேசுவது வேப்பிலைக் கஷாயங் குடிப்பது போலிருக்கும். தமிழ் வார்த்தைகளைக் கேட்பது கர்ணகடோர மாயிருக்கும். அவர்கள் தமிழ் பேசினாலும், முக்காற் பங்கு ஆங்கிலமும் காற்பங்குத் தமிழுமாகக் கலந்து பேசுகிறார்கள். அவர்களுக்குத் தேசா பிமானமும் இல்லை; மொழியபிமானமும் இல்லை

ஐரோப்பியர் தங்கள் சொந்த மொழிகளை எவ்வளவோ பெருமையாகப் போற்றி வருகிறார்கள் என்பதை இவர்களே அறிவார்கள். இவர்கள் மட்டும் தங்கள் தாய்மொழியாகிய தமிழையும் தமிழ் வித்துவான்களையும் அவமதிக்கலாமா? தமிழ் நூல்களையே பாராத இவர்கள், அவைகளுக்கு எப்படிப் பழுது சொல்லக் கூடும்? திருவள்ளுவருடைய குறளை அவர்கள் எப்போதாவது பார்த்திருப்பார்களா? கம்பனுடைய கற்பனையைக் கனவிலும் கேட்டிருப்பார்களா? நாலடியார் செய்தவர்களுடைய காலடியையாவது கண்டிருப்பார்களா? ஔவையாருடைய நீதி நூலைச் செவ்வையாக அறிவார்களா? அதிவீரராக பாண்டியனை அணுவளவும் அறிவார்களா?

ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளைப் போலத் தமிழிலே வசன காவியங்கள் இல்லாமல் இருப்பது பெருங்குறை என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். அந்தக் குறையைப் பரிகரிப்பதற்காகத் தான் எல்லோரும் ராச மொழிகளும். தமிழும் கலந்து படிக்க வேண்டு மென்று விரும்புகிறோம். தமிழைப் படிக்காமல்

ஆங்கிலம் மட்டும் படிக்கிறவர்கள் மற்ற சனங்களுடன் சேராமல், தாங்கள் ஒரு அந்நிய தேசத்தால் போல சீவிக்கிறார்கள்.

## அறியாமையும் ஒரு அந்தகாரமே!

இந்தத் தேசத்துப் பெரிய பிரபுக்கள், மிராசுதாரர்கள், முதலானவர்களுடைய அறியாமையை நினைக்கும் போது, நமக்குப் பிரபலமும் பெருமூச்சும் உண்டாகின்றன. அவர்களிலே அநேகர் சுத்த நிரட்சர குட்சிகளாய் இருக்கின்றார்கள்.

சிலர் கையெழுத்துக்களை மட்டும் கற்றுக் கொண்டிருக் கிறார்கள். சிதம்பரம் என்பதற்குச் செலம்பாம் என்றும் துரைசாமி என்பதற்கு தொறைசாமி என்றும் வைத்தியலிங்கம். என்பதற்கு வயித்துலிங்கம் என்றும் கையெழுத்து வைக்கிறார்கள். இந்த வித்துவ சிரோன் மனிகளே ஜூரிகளாகவும், முனிசிபல் மெம்பர்களாகவும், பென்சு மாஜிஸ்ரேட்டுகளாகவும், தேவாவய, தர்மாலய விசாரணைக் கர்த்தர்களாகவும், நியமிக்கப் படுகிறார்கள்.

அதிகாரத் தானங்களில் இவர்கள் பிரதிமைகளைப் போல நாற்காலிகளில் வீற்றிருக்கிறார்கள். அவர்களுடைய வேலை இன்னது என்பதை அவர்களே அறியார்கள். பிரதிமைகளுக்கும் இவர்களுக்கும் பேதம் என்னவென்றால், பிரதிமைகள் அசையாமல் இருக்கின்றன; இவர்கள் நாற்காலியில் அமர்ந்து அசைந்து கொண்டிருக்கின்றார்கள்.

தாய்மொழியில் பற்றுதல் வேண்டும், அதனை ஆர்வமுடன் ஆராய வேண்டும். ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய ராச மொழிகளைப் படிக்கிறவர்கள், தேச மொழிகளையும் தீர்க்கமாக உணர்ந்து இந்த தேசத்தைச் சூழ்ந்திருக்கிற அறியாமை என்னும் அந்தகாரம் நீங்கும்படி, வசன காவியங்கள் என்னும் ஞான தீபங்கள்ள ஏற்றுவார்கள் என்றும் நம்புகிறோம்.

தமிழ் படிக்காதவர்கள் தமிழ் நாட்டிலே வசிக்கத் தகுந்தவர் அல்லர். அவர்கள் எந்த ஊர்மொழியைப் படிக்கிறார்களோ அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடம். ஆங்கிலம் மட்டும் படிக்கிறவர்களை லண்டன் பட்டணத்துக்கு அனுப்புவோம். லத்தீனுக்கும் சமஸ்கிருதத்துக்கும் சொந்த ஊர் இல்லாத படியால் அவற்றைப் படிப்பவர்களை அநாமகரணத் தீவுக்கு அனுப்புவோம்.

# 10. வேதநாயகம் பிள்ளை நகர்மன்றத் தலைவரானார்

நீதிபதி உத்தியோகத்திலே இருந்து வேதநாயகம் பிள்ளை ஓய்வு பெற்றார். மாயவரம் நகர மன்றத்திலே அதன் தலைவராகப் பதவியேற்று அமர்ந்தார். நேர்மை தவறாத நீதிபதி என்று பெயர் பெற்றது போலவே, அவர் நகர்மன்றத் தலைவரா்கவும் பணி யாற்றிப் பெரும் புகழ் பெற்றார். மாயவரம் நகர் மன்றம் உருவான ஆரம்பகாலத்திலேயே அதன் வழிகாட்டியாய் வேத நாயகம் பிள்ளை பணியாற்றியதால் அந்த மன்றத்திற்கும், மயாவரம் நகரின் முன்னேற்றத்திற்கும் அவர் காரணமாக விளங்கினார்.

வேத நாயகம் பிள்ளை, தான் எழுதிய முதல் தமிழ் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தின் மூலமாக அவரே பேசுகிறார்; படியுங்கள்.

## நகர்மன்றத் தலைவன் பண்பு

''உலகிலே உள்ள ச்கல பதவிகளிலும் அதிகாரங்களிலும் தலைவர் பதவி எப்படி மேன்மையானதோ, அப்படியே அதைச் சார்ந்த அலுவல்களும் அபாரமாய் இருக்கின்றன். குடும்பத் தலைவன் தன் குடும்பத்துக்காக ஓயாமல் உழைக்கின்றான். ஆயிரமாயிரம் குடும்பங்களுக்குத் தலைவனாக இருக்கிற நகரப் பிதா, ஒரு கணமேனும் சும்மா இருக்கலாமா? சொற்பக் கூலி வாங்கிக் கொண்டு வேலை செய்கிறவன் அல்லும் பகலும்

உழைக்கிறான். அப்படியானால், அளவில்லாத வருமானங்களையும், ஊதியங்களையும் உரிமைகளையும் பொது மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட தலைவன், அந்த மக்களுக்காக எவ்வளவு பாடுபட வேண்டும்? ஆதலின், தலைவனுடைய நேரமும், புத்தியும், சக்தியும் சனங்களுக்குச் சொந்தமே அன்றித் தலைவனுக்குச் சொந்தம் அல்ல. சனங்களுடைய இன்ப துன்பங்களையே தன்னுடையனவாகத் தலைவன் மதிக்க வேண்டுமே அன்றித், தன்னையும் மக்களையும் வேறு வேறாகக் கருதக் கூடாது!

எப்போதும் யாவரும் காணும்படி மலர்ந்த முகத்தை உடையவன் தலைவன்; அவன் அருள் பொழிகின்ற கண்ணை உடையவன்; மக்களுடைய குறை கேட்கச் சித்தமாயிருக்கிற செவியுடையவன். வாய்மையும், இன்சொல்லும் குடிகொண்ட நாவுடையவன்.

அறமே அவதரித்தது போன்ற நற்குண நற்செய்கைகள் உடையவன்; புத்தியிலும் யுக்தியிலும், சாமர்த்தியத்திலும் யாவரினும் மேலானவன்; அப்படி இல்லாவிட்டால் அவனை யார் மதிப்பார்கள்? சூரியன் தன்னுடைய ஒளியால் எல்லாப் பொருள்களையும் பிரகாசிக்கச் செய்வது போலத், தலைவன் தன்னுடைய நடத்தையால் குடிகளுடைய குணம் திருந்தும்படிச் செய்ய வேண்டும். அதனால், அவன் மக்களுடைய மனங்களையே வாசத்தலமாகப் பெறுகிறான்; தனக்கென்று தனி மாளிகை வேண்டுவதில்லை.

தலைவனுடைய தகுதி தன்மைகளைப் பற்றி இத்தகைய கொள்கைகளைக் கொண்ட வேதநாயகம் பிள்ளையால், மாயூரத்துக்கு அமைந்த நலங்கள் பல இவருடைய ஆட்சியிலே

நகர் மன்றம், பலதுறைகளிலும் முன்னேறி வளர்ந்தது. வருமானத்துக்கு ஏற்ப செலவினங்களைச் சரிக்கட்டி, செட்டாகவும் சீராகவும் நடந்து, பொதுநலத்துக்குகந்த காரியங்களிலே கருத்தாக இருந்தார்.

## வேதநாயகம் செய்த நகர்த் தொண்டுகள்!

நடை பாதைகளையும், சாலைகளையும் அமைப்பித்து, அவைகளைச் செம்மையாகப் பேணி வந்தார். குருடர், முடவர்களும், அனாதைகளும் நகரத்திலே நடமாடிப் பிச்சை எடுக்காதபடி, அறச்சாலைகளை அமைத்தார். மருத்துவச் சாலைகளை நிறுவி, இலவச வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்தார். பள்ளிக் கூடங்களைத் தொடங்கிக் கல்வியுடன் தெய்வ பக்தி நீதி நெறிகளைக் கற்பிக்கத் திட்டம் செய்தார். பெண்கள் கல்வியிலே மிகுந்த சிரத்தை எடுத்தார். சிறுவர்க்குத் தேக பலமும் நலமும் உண்டாகும்படி சிலம்பக் கூடம் முதலிய பயிற்சி மேடைகளைத் தாபித்தார்.

மாயூரத்து நகரின் வீடுகளும், தெருக்களும் நாகரீகமாகவும், காற்று நடமாட்டமாகவும் இருக்கும்படி நடவடிக்கை எடுத்தார். இவ்வாறு தமது முதுமையிலே வேத நாயகம் நகர முதல்வராக ஓய்வின்றி உழைத்தார். அதனாலே, மக்களுடைய நன்மதிப்புக்குப் பாத்திரமானார்.

நகர மன்ற நடைமுறைகளை ஒழுங்குப் படுத்துவதிலே முன்னைய உத்தியோக அனுபவம் இவருக்குத் துணை நின்றது. பிறருடைய புகழ்ச்சிகளையும், இகழ்ச்சிகளையும் பொருட்படுத் தாது, தமக்கு நியாயமாகத் தோன்றிய காரியங்களை நேர்மை யாகவும். நிதானமாகவும் செய்து முடித்தார்.

## பூஷிப்பும்; தூஷிப்பும்!

வேதநாயகம் பிள்ளை மேலும் பிரதாப முதலியார் சரித்திரம் வாயிலாக எழுதும்போது; விசுவாமித்திரர் நினைத்தபடி அண்டங்களைப் புதிதாகச் சிருட்டிக்க ஆரம்பித்தது போலவே, நாங்களும் புதிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினோம். விசுவாமித்திரர் நினைத்தபடி முடிக்காமல் இடையிலே தங்கி விட்டார். நாங்களோ தங்காமல், எங்கள் எண்ணங்களைப் பரிபூர்த்தி செய்தோம். எங்களைத் தூஷித்தார்கள். அனுகூலம் அடைந்தவர்கள் பூஷித்தார்கள். நாங்கள் ஒன்றுக்கும் அஞ்சாமல் எங்களுக்குப் பொருத்தமாய்த் தோன்றின பிரகாரம் நடந்தோம்.

# 11. பொது வாழ்வுக்கு வேதமானார்!

வேதநாயகம் பிள்ளை கி.பி.1851 ஆம் ஆண்டில் தமது 25-ம் வயதிலே காரைக்கால் நகரைச் சார்ந்த பாப்பம்மாள் என்ற மங்கையர் திலகத்தை திருமணம் செய்து கொண்டார். சில ஆண்டுகளில் அந்த அம்மையார் மறைந்தார்.

அதற்குப் பிறகு பாப்பம்மாள் தமக்கையான ஞானாப்பூ அம்மையார் மகள் லாசர் என்பரை மணந்து கொண்டார். அவரும் சில ஆண்டுகளில் இயற்கையெய்தினார். அடுத்தடுத்து இரு மனைவியரை இயற்கைக்குப் பலி கொடுத்த வேதநாயகர், மூன்றாவதாக, புதுச்சேரியைச் சேர்ந்த மாணிக்கத்தம்மையாரை மணம் புரிந்தார். அந்த அம்மையார் மூன்று குழந்தைகளை ஈன்றளித்துவிட்டு மாண்டார்.

குழந்தைகளைப் பாதுகாக்க, வளர்க்க வேறு துணையேதும் இல்லாததாலும், பொது வாழ்க்கையிலே ஓய்வின்றி உழைத்து வரும் நிலை உருவானதாலும் நான்காவதாக புதுவை அன்னக் கண்ணம்மாளைக் கலியாணம் செய்து கொண்டார். அந்த அம்மையாரும் சில ஆண்டுகளில் மரணமடைந்தார். அதற்குப் பிறகு, அம்மாளம்மாளை மணம் செய்து கொண்டார். அந்தத் தாயும் சாவுக்கு இரையானதால், வேதநாயகம் பிள்ளையும்

குழந்தைகளும் மீளாத் துயருற்று வாழ்ந்து வந்தார்கள். மனைவியின் மரணத்தைக் கண்டு மனம் வருந்தியபோது,

"அண்ட பண்ட மெல்லம் அழியா திருக்கி நீ

பூண்ட உடையிருக்கப் பூண் இருக்க -மாண்டனையே

அன்னமே உன்னை அடித்தேனோ? வைதேனோ?

சொன்னமே ஏன்போனாய் சொல்?"

என்ற பாடலை எழுதி வேதநாயகர் மனம் உழன்றார்; ஆறாத் துயருற்றார். மனைவியர்கள் மீது மட்டுமல்ல; தாய்க்குலம் மீதே பெரிய ஈடுபாடும், பக்தியும் பாசமும் கொண்டிருந்தவர் பெண்கல்வி, பெண் மானம் போன்றவற்றுக் காகவே அவருடைய எழுத்துக்களும், பேச்சுக்களும் அமைந்து உழைத்தன.

ஒருமுறை அன்னக் கண்ணம்மையார் வேதநாயகம் பாடல் எழுதும் போது அருகே அமர்ந்திருந்து பருகப்பால் ஆற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் நீதி நூல் பாடல் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார்.

அப்பாடல் முதல்வரியை அவர் எழுதும் போது:

'மாதரை நம்பாதே மனமே

மாதரை நம்பாதே' -என்று எழுதினார். அப்போது அவருக்குப் பருகப் பால் கொடுத்துக் கொண்டிருந்த அம்மையார், 'என்னங்க் ஐயா இது, என்னைக் கூட நீங்கள் நம்பமாட்டீர்களா?' என்றார்!

"என்ன அன்னம் இப்படிக் கூறுகிறாய்" என்று வேதநாயகம் கேட்டார்! 'மாதரை நம்பாதே என்று எழுதி இருக்கிறீர்களே, அது என்னையும் சேர்த்துத் தானே, ஐயா' என்று பணிவுடன் கேட்டார்.

அப்படி ஒரு எண்ணத்தை உருவாக்குகின்றதோ இந்த வரி?' என்று கேட்டுவிட்டு, மறுபடியும் அந்தச் சொற்கள் இடையே 'விலை' என்ற வார்த்தையைப் போட்டு,

'மாதரை நம்பாதே மனமே - விலை
மாதரை நம்பாதே'

-என்று, சொல் மாற்றிப் போட்டு அப் பாடலை முடித்தபோது 'அன்னம்' அளவிலா மகிழ்ச்சி பெற்றார். வேதநாயகர் பெண்களின் முன்னேற்றத்துக்கும் சமுதாயச் சமத்துவத்துக்கும் பல பாடல்களை எழுதினார்.

இவ்வாறு ஐந்து மனைவிகளை ஒன்றன் பின் ஒன்றாக இழந்து, மூன்று குழந்தைகளுடன் வேதநாயகனாரின் காலம் ஓடிக் கொண்டே இருந்தது.

வேத நாயகர். ஒருமுறை பாடல் எழுதியபோது,

'வாழ்வை நம்பாதே மனமே
வாழ்வை நம்பாதே
தாழ்விலாத நமது சுவாமி
தாளைத்தோடு; பாடு! பூம் (வாழ்வை)
தேகம் மாமிச மூட்டை - பல
செந்துவுக்கும் நல்ல வேட்டை - அதில்
ஓகோ அனந்தம் ஓட்டை - உயிர்
ஓடிட எத்தனை பாட்டை
இன்றைக் காளுவார் நாடு - நாளை
எடுப்பார் கையிலே ஓடு - உடல்

ஒன்றுக்கும் உதவாத கூடு - இதை

உற்றுப் பார்த்தால் வெட்கக் கேடு

இந்த உலகத்திற் பிறந்தார் - முன்னம்

எத்தனையோ பேர்கள் இறந்தார் - பெற்ற

தந்தை தாய் பாட்டாரும் பிறந்தார் - நாலு

தாரங்கள் போய் நம்மை மறந்தார்.

-என்று, அவர் நிலையாமையைப் பற்றி எழுதினார்! அவர் மனம் நொந்தது மரணத்துக்காக அல்ல - இறையருள் இன்னும் கிடைக்கவில்லையே என்று ஏங்கி வருந்தினார் வேதநாயகம் பிள்ளை.

வாழ்நாள் முழுவதும் வேதநாயகம் பிள்ளை, உண்மை, ஒழுக்கம், நீதி, அறம், கற்பு, பாசம், பண்பு, அன்பு இவைகளைப்பற்றியே சிந்தித்துக் காலம் கழித்தார். அரிய அரிய செயல்களைச் செய்த பெரியர்களிலே ஒருவராகவே வாழ்ந்தார்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையினையே கொண்டிருந்தார்.

மனித நேயத்தோடும் பரஸ்பர சகோதர பாசத்தோடும், மன நிறைவோடும் உலகமெங்கும் ஒத்துவாழும் வாழ்வே சமாதான வாழ்வு என்று எண்ணினார்.

கடவுள் வழிபாடு என்பது மக்களுக்கு தனது கடமைகளைச செய்வது ஒன்றே என்றார்.

வாய்மையைத் தழுவி வாழ்வதே வாழ்க்கை என்று நம்பி மக்கள் தொண்டாற்ற வேண்டும் என்பதற்கு இலக்கணமாய் வாழ்ந்தார்.

துன்பமும், இன்பமும் பிறர் நமக்கு வழங்குவதல்ல; நமக்கு நாமே தேடிக் கொள்ளும் செயல்களின் எதிரொலியே அவை என்றார்.

வேதநாயகர், இறுதிக் காலத்தில் நீரிழிவு நோயால் அவதிப்பட்டார். மருந்துகள் அவர் மரணத்தை வெல்லவில்லை. இதனைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட அவர், தனது நண்பர்களான, டிப்டிக் கலெக்டர் ஒய். கிருஷ்ணாராவ், ஓய்வு பெற்ற தாசில்தார் ஏ. சுவாமி அய்யர், மாயவரம் மாவட்ட நீதிபதி, துணைப்பதிவாளர், ஷெரிஸ்தார், நன்னிலம் நகர் காவல் துறை ஆய்வாளர், நீதிமன்ற சட்ட ஆலோசனைக் குழு கே. லட்சுமண ஐயர், டி. துரைசாமி பிள்ளை, சமஸ்கிருத பண்டிதர் திருவேங்கடாச் சாரியார், வழக்கறிஞர் சக்கரபாணி ஐயங்கார், எழுத்தர், ஆர். வெங்கட சுப்பையர், சமஸ்கிருத ஸ்லோக வித்தகர் கிருஷ்ணாராவ், வழக்கறிஞர் நண்பர் எ. பொன்னுசாமி பிள்ளை, அகோர சாஸ்திரியார், மாயவரம் சுப்பண்ணா ராவ், மிராசுதார் கோதண்டராம ஐயர் ஆகியோர்களுக்கு தனது முடிவை உணர்த்திக் கடிதங்களை எழுதினார்.

கடிதங்கள் கிடைக்கப் பெற்ற அனைவரும், அவர் மரணத்துக்கு நான்கு நாட்களுக்கு முன்பே வந்து சேர்ந்து ஆற்றமுடியாத மனிதநேய சோகத்தோடு திரண்டிருந்தார்கள்.

கூடியிருந்த தனது நட்புக் குழுவினருடன் இரவு பத்துமணி வரை பேசிக் கொண்டிருந்தார் வேதநாயகம் பிள்ளை. பிறகு, நண்பர்களை எல்லாம் சிறிது நேரம் வெளியே இருக்குமாறு கண்ணீர்த் துளிகளுடன் கேட்டுக் கொண்டார்.

கிறித்துவக் குருமார்கள் வந்தார்கள். அவர்களிடம் தமது ஆத்ம காரியங்களை முடித்துக் கொண்டார். சாவின் அவதிகள் ஏதும்

நேராமல், மரண வஸ்த்தை அவரை அண்டாமல், 21.7.1889 அன்றிரவு பதினோரு மணிக்கு வேதநாயகர் மரணமானார்!

மாயூரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை மாண்டார் என்பதைக் கேட்ட அப்பகுதி மக்கள் பெருங் கூட்டமாய் கூடி தங்களது கண்ணீரைச் சிந்தினார்கள்.

கற்றோர் எல்லாம் கல்விக் களஞ்சியம் மறைந்து விட்டதே என்று கலங்கினார்கள். பாவலர்கள் எல்லாம் பாவாணர் போய் விட்டாரே என்று பதறினார்கள். ஆவிபிரிந்தது போல தமிழ் அறிஞர்கள் ஆழாத்துயரில் மிதந்தார்கள். வாழ்வை இழந்து விட்டோமே என்று வறியவர்கள் வாயிலடித்துக் கொண்டு அழுதார்கள்! நீதியின் நாயகம் செத்துவிட்டதே என்று நீதி பெற்றவர்கள் புலம்பினார்கள்! தமிழ்போயிற்றே, என்று தமிழ்நாடே கலங்கிவிட்டது; ஒழுக்க சீலர் ஆவி ஓய்ந்து விட்டதே என்று பொதுமக்கள் துடித்து மயானம்வரை சென்று கண்ணீரில் மிதந்தார்கள்.

வையகத்திலே வாழ்வாங்கு வாழ்ந்த தமிழ்ப் புலமை, பொது வாழ்க்கைக்கு ஒரு வேதநாயகமாய் விளங்கிய ஒழுக்கம், நீதி, நேர்மை, தியாகம் கொண்ட வேதநாயகம் மறைந்தார்.

தமிழ் மொழி வளர்ச்சி கருதி அவர் எழுதிய நூல்களும், சமுக சீர்த்திருத்தத்திலே இவர் செய்த தீவிரத் தொண்டுகளும், கவிதை உலகுக்கு இவர் எழுதிய நீதி நூல், சர்வ சமயக் கீர்த்தனை நூல்களும், முன்சிஃப் பணியாற்றியபோது நீதித் துறை வளர்ச்சிக்காக எழுதிய மொழி பெயர்ப்பு நூல்களும், கடவுள் பெருமையையும், மக்கள் நன்மையையும் பெருக்கு வதற்கான வழிகளிலே ஓய்வின்றி உழைத்த உழைப்புக்களும், ஒரு வழக்கறிஞர் எப்படித் தனது பணியிலே ஈடுபட வேண்டும் என்ற இலக்கண மனச்சாட்சிகளும், அதிகாரி என்பவன் யார்? அவன்

பொது மக்களிடம் பழகவேண்டிய பண்புகளையும், லஞ்சம் ஒழிப்பை எவ்வாறு செய்யவேண்டுமென்ற வழிமுறைகளையும் உலகுக்குப் போதித்த ஓர் உத்தமப் பொதுப்பணிச் சீலர் மறைந்து விட்டார் என்று ஆட்சித் துறை ஊழியர்களும் ஆற்றமுடியாத வேதனைப் பட்டார்கள்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, செயற்கரிய செய்து, வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் தெய்வ மரணம் பெற்றார் என்று இன்றும் சான்றோர் உலகம் பேசுகின்றது.

❖

# 12. வேதநாயகரின் சாதனைகள்!

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையிலே எழுந்த இயக்கங்களின் மேன்மையான கொள்கைகளை எல்லாம் நன்றாக ஆராய்ந்து, தெளிந்து! பழங்காலப் பெருமைகளைக் கை கழுவாமல், எதிர்காலப் போக்கை மன சிம்மாசனத்திலே அமர்த்தி நிகழ்காலத்திலே தமிழ் மக்களுக்கு வழிகாட்டியவர் மாயூரம் முன்சிஃப் வேதநாயகம் பிள்ளை.

நீண்ட நெடுங்காலமாக உறக்கத்திலே ஊஞ்சலாடிக் கொண்டிருந்த தமிழ்ப் பெருமக்கள் இதயத்திலே முதன் முதலாகத் தேசபக்திக் கனலை மூட்டியவர் வேதநாயகம் பிள்ளை.

தமிழ்ச் சான்றோர்களின் நீதிகளையும், அவர்களது மாண்புகளையும், அவர்கள் செய்த தொண்டுகளையும் தனது பேச்சால் எழுத்தால், செயலால் நம்மைச் சிந்திக்க வைத்தவர் வேதநாயகம்! அவற்றின் அடிப்படையிலே காலத்துக்கு ஏற்றவாறு நமது சமூக அமைப்பை மாற்றிப் புது மாதிரிகளுக்கும் பொருந்தச் செய்து, உலகிலே புகழ்வாய்ந்த சன சமூகங்களிலே தமிழர் சமுதாயமும் ஒன்றாகக் காட்சியளிக்குமாறு செய்து உதவியர் வேதநாயகம்.

ஒரு காலத்திலே உயர்ந்த நிலையிலே இருந்த தமிழ்நாடு, அவர் காலத்திலே பல்துறைகளிலும் தாழ்ந்து வருவதை அறிந்து,

மீண்டும் அதை மீட்டுவர, மக்களுடைய அறிவாற்றலைத் தூண்டிவிட்டவர் வேதநாயகம்.

சமூக பலத்தைப் பெருக்கி, அறிவியல் தொழிலியல், வணிகவியல், நாகரிகங்களை வளர்த்து, உண்மை, நேர்மை பொதுநல உணர்ச்சி போன்ற பண்பாடுகளின் துணையோடு, காலத்துக்கு ஏற்றவாறு இணக்கத்துடன் செய்து முடிக்கவேண்டும் என்று தமிழ் மக்களுக்குப் போதனை செய்தவர் வேதநாயகர்.

வேதநாயகர் காலத்தில் முஸ்லிம்களிடமிருந்தும் நாயக்கர் களிடமிருந்தும் வெள்ளையர் கைக்கு ஆட்சி மாறியதால், அப்போது குழப்பமும், கொந்தளிப்புமாய் இருந்தது.

சமயத் துறையில் மூட வைராக்கியம், குருட்டு நம்பிக்கை, சாதிக் கட்டுப் பாடுகள், ஆசார அனுஷ்டானங்கள் மக்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருந்தன.

பலதார மணம், குழந்தைத் திருமணம், உடன் கட்டையேறல் போன்ற நரக வேதனைகள் கொடுமைப்படுத்தின - சமுதாயத்தில் பெண்கள் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டார்கள்! பெண் உரிமை, பெண் கல்வி என்ற பேச்சுக்கே அப்போது இடமில்லை. நல்லொழுக்கம் காண்பதே அரிதாக இருந்தது. இந்த இருளைக் கிழித்து வரும் வெண்ணிலாவாக விளங்கினார் வேதநாயகர்.

பெண்கள் கல்வி இல்லாமையால், அறியாமை இருளில் ஆழ்ந்திருந்தார்கள். அவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியத்தை, அவசரத்தை பல பாக்களால், கதையால், கட்டுரையால், தீர்ப்புக்களால், தீர்மானங்களால் வலியுறுத்தியவர் வேதநாயகம்!

அதற்காக அவர் ''பெண்கல்வி'' என்று ஒரு புத்தகமே எழுதினார். அடிமைகளைப் போல பெண்கள் நடத்தப்படும் அநீதியை அதனுள் பலமாகக் கண்டித்தார். அதற்காகப் பெண்மானம் என்ற வேறு ஒரு நூலையே எழுதினார். ஆண்களிடம் பெண்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும், பெண்கள் ஆண்களிடம் நடக்க வேண்டிய ஒழுங்குகளையும் அவரது, நூல்கள் நேர்மையோடு பேசுகின்றன.

மனைவி அடிமையாகவும், கணவன் எசமானாகவும் இருக்கிற எந்தச் சாதியும் முன்னேறாது என்பதை ஆணித் தரமாகக் கூறியவர்.

பெண்கள் வேலை வீட்டுக்குள்ளே. வாசல் கடப்பது பத்தினித் தன்மைக்குப் பாதகம்; வாசலைத் தூர்த்து மெழுகி, அடுப்பூதி வருவதுதான் பெண்கள் பழக்கம் என்பதை எதிர்த்து; ஆண் - பெண் ஒருவருடன் ஒருவர் கலந்து பழகவும், துணை நிற்கவும் உழைப்பதே அவசியம் என்று அதற்காக மூன்று நூல்களை 1869 முதல் 1870க்குள் எழுதியவர் வேதநாயகம் பிள்ளை.

கி.பி 1858 ஆம் ஆண்டில் 'நீதி நூல்' என்ற புத்தகத்தை எழுதிய வேதநாயகர், அதை 1859-ல் வெளியிட்டார். இந்த நூலை அவர் காலத்தில் வாழ்ந்த 56 பெரும் புலவர்கள். பாராட்டி, பாயிரம்பாடி போற்றினார்கள் என்றால் இந்த நூல் என்ன சாமான்யமானதா?

இந்த நீதி நூல், நாமறிந்தவரையில் 44 அதிகாரங்களை உடையது. 400 செய்யுட்கள் கொண்டது. இதற்கு மேல் 200 பாடல்கள் இத்துடன் சேர்க்கப்பட்டு மொத்தம் 600 பாடல்களைக் கொண்ட ஒரு திரட்டுநூலாக கி.பி. 1860 ஆம் ஆண்டில் மீண்டும் வெளியிடப்பட்டது.

சித்தாந்த சங்கிரகம் என்ற பெயரில் கி.பி. 1805 ஆம் ஆண்டில் முதல் 1861 ஆம் ஆண்டு முடிய ஆங்கில மொழியிலே அச்சடிக்கப்

பட்டிருந்த சதர்ன்கோர்ட் தீர்ப்புகளை எல்லாம் ஒன்று திரட்டி, அதை அப்படியே தமிழிலே மொழி பெயர்த்து, 1862 ஆம் ஆண்டில் சட்ட நூலாக வெளியிட்ட பெருமை வேதநாயகரையே சேரும். இப்படி சட்ட நுணுக்கங்களைப் பற்றி தமிழிலே அமைந்த முதல் நூல் இது அதன் கர்த்தா வேதநாயகம் பிள்ளையே!

வேதநாயகர் ஒரு மெய்க்கிறித்தவர், அவர் இறை தத்துவத்தை ஒன்றே தெய்வம் என்ற கொள்கையில் ஏற்றவர். அதனால், 'திருவருள்மாலை', திருவருள் அந்தாதி; தேவமாதா அந்தாதி எனும் நூல்களை கி.பி. 1873 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டார்.

தமிழ் நாவல் உலகின் தந்தை என்று போற்றும் வகையில் பிரதாப முதலியார் சரித்திரம், சுகுண சுந்தரி போன்ற நாவல்களை, கல்கி கிருஷ்ண மூர்த்தி, சாண்டில்யன் போன்றவர்கள் பிறப்பதற்கு முன்பே 1876 - 1885 ஆம் ஆண்டுகளில் முதன் முதலாகத் தமிழ்மொழியில் எழுதி வெளியிட்ட செயற்கரிய செய்த பெரியராக இன்றும் விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

'உலகிலே ஒவ்வொன்றாக நாளடைவிலே வெளிவருகின்ற இரகசியங்களின் சின்னங்கள், வெகு காலத்துக்கு முன்னமே காணப்பட்டன' என்று பேனா மன்னன் வால்டேர் கூறுகின்றார்.

சிறுகதை, நாவல் போன்ற இலக்கிய வகைகள் சமீப காலத்திலே தோன்றியவை என்பது சிலரது நம்பிக்கை. ஏறக்குறைய 3500 ஆண்டுகளுக்கு முன்பிருந்த தொல்காப்பியருக்கு முன்னமேயே, தற்போதைய இலக்கிய வகைகள் எல்லாம் இருந்திருந்தன என்று கூறினால், நம்பமாட்டார்கள்.

தொல்காப்பியர் பெருமான், தொல்காப்பியம் எழுதிய காலத்திலேயே வழங்கிய இலக்கிய நூல் வகைகளையும், வளத்தையும் அவர் கூறும் போது நமக்கு பேராச்சரியமாக இருக்கின்றது. இதோ அவர்:

''பாட்டிடை வைத்தடுறிப் பினானும்
பா இன்றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம் மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரைவகை நடையே நான்கென மொழிக''

-என்று விளக்குகிறார். தொல்காப்பிய சூத்திரத்தைத் தோற்றுவித்தப் பண்டைய இலக்கியங்கள் தற்போது நமக்குக் கிடைக்கவில்லை. காலச் சுழலிலே அவை கரைந்தன; மறைந்தன!

ஈசாப் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் போன்றவை புனைந்துரைக்கப்பட்ட கட்டுக் கதைகள். ஆங்கிலத்திலே 'ரொமான்ஸ்' என்றால் கற்பிதக் கதை. இவற்றைப் பொருளொடு புணராப் பொய்ம் மொழி என்பர் தொல்காப்பியர். குத்தல், புகழ்வது போலப் பழித்தல், சுடச் சுட பதிலுக்குப் பதில் போன்ற கேலிப் பரிகாசங்கள் தழுவி, நகைச் சுவை, நையாண்டி மலிந்த வாழ்க்கைச் சித்திரங்கள் முற்காலத்தில் எழுதப்பட்டன.

இவற்றைத் தொல்காப்பியர், 'பொருளொடு புணர்ந்த நகைமொழி என்கிறார். ஆனால், மிகப் பழங்காலத்திலே வழங்கிய இந்த இலக்கிய வகைகள் தற்போது கிடைக்கவில்லை. கிடைத்திருப்பன தனிப்பாடல்களே. இவை பல்வேறு காலங்களிலே பாடப்பெற்றன; பல்வேறு சந்தர்ப்பங்களிலே பாடப்பட்டன. இவற்றின் தொகுதியே சங்க நூல்கள். பழங்காலக் கவிப் பண்பை அறிதற்குச் சங்ககால நூல்களே முக்கியமான கருவி. ஆனால், பழங்கால வசன நடையை அறிவிக்க வல்ல நகை மொழிகளும். பொய்ம் மொழிகளும் கிடைக்காமற்போனது நமது துரதிர்ஷ்டமே.

சங்க காலத்துக்குப் பின் வந்த தமிழ்ப் புலவர்கள் தனிப்பாடல்களைத் தவிர்த்துக் காவியங்களைப் பாடினார்கள். காவியங்களைப் பின்பற்றிப் புராண இலக்கியம் எழுந்தது. ஐரோப்பியரான வீரமா முனிவரும், முஸ்லிம் மதம் சார்ந்த உமறுப் புலவரும் இயற்றிய தேம்பாவணி, சீராப்புராணங்களே. புராணங்களைத் தழுவி அந்தாதி, கலம்பகம் போன்ற பிரபந்தங்கள் எழுந்தன. 'உரைவகை நடையே நான்கென மொழிப்' என்ற பழைய வசன நூல்களின் வாசனை கூட இப்போது இல்லை.

உரையாசிரியர்கள் பழைய நூல்களுக்கு எழுதிய குறிப்புரை விளக்கவுரைகளே, தற்போது நமக்குக் கிடைத்திருக்கும் ஆதிவசன நடைகள்.

## முதல் வசன நடை நூல் வித்தகர் வேதநாயகர்!

மக்கள் வாழ்வு, மனவுணர்ச்சி, குண விசேடங்களை முற்றும் தழுவி, வாழ்க்கையின் சாயலாய் அமைந்த வசன நூல்களை முதன் முதலில் தமிழில் எழுதியவர் வேதநாயகம் பிள்ளையே.

இவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரமும், சுகுண சுந்தரியும் கற்பிதக் கதைகளே. இவற்றை இவர் உருவாக்குவதற்கு முன்னமே, தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரக் கதையை எழுதினார். பின்னர், வினோத ரச மஞ்சரி என்ற வசன நடை நூல் வெளியாயிற்று. இது ஒரு கட்டுரைத் தொகுதி. இதை எழுதியவர் அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் ஆவார்.

பிரதாப முதலியார் சரித்திரத்தைப் பின்பற்றி, ராஜமையர் 'கமலாம்பாள்' என்ற நூலை எழுதினார். பிறகு, 'பத்மாவதி' என்ற நூலை மாதவையர் படைத்தார். அதற்குப் பிறகு வந்த சில நூல்கள் காற்றிலே பறந்த பஞ்சு போலாகிவிட்டன. இவை பலவும் மொழி பெயர்ப்பு நூல்களே இந்தி, மராடம், வங்கம் அனைய

வடமொழிகளில் அமைந்த குப்பைக் கூளங்கள் கூடத் தமிழிலே பெயர்க்கப்பட்டு விட்டன. தானாக, சொந்த முயற்சி அறிவிலே சமைந்த நவீனங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

## *நவீனம் என்றால் என்ன?*

கவிதையைப் போல; பார்த்ததும் எழுவதல்ல நாவல். உணர்ச்சி பொங்கிய ஆவேசத்திலே உருவாகுவதுமல்ல; நாவலை எங்கே ஆரம்பிப்பது? எப்படி நடத்துவது? எப்படி முடிப்பது என்பதைப் பற்றியதே அதன் வெற்றி.

முதன்மையான நாவலிலே மூன்று முக்கிய பண்புகளைப் பார்க்கலாம். கதையின் அமைப்பு, மனதைக் கவர்கின்ற பரபரப்பான சம்பவங்களும், நெருக்கடியான நிலைமைகளும் நிரம்பியதாய்க் கதை அமைய வேண்டும். கதையின் நிகழ்ச்சிகள் விறுவிறு என்று நடந்து, மேலும் என்ன என்ற ஆவலைத் தூண்ட வேண்டும். நாவலிலே இயங்கும் பாத்திரங்கள் நம்மைப் போன்ற மானிடரே.

நமது கனவுகளை, லட்சியங்களை, உணர்ச்சிகளை பாத்திரங்கள் எதிரொலிக்க வேண்டும். பாத்திரங்களின் நடை, உடை, பேச்சு ஒவ்வொரு சிறு விவரமும் - செய்தியும் வாழ்க்கையைப் பிரதி பலிக்கவேண்டும். நல்ல நாவலிலே அழகு, இனிமை, எளிமை வாய்ந்த பெருமித இலக்கிய நடையைக் காணலாம்.

வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் இந்தப் பண்புகளை திட்ட வட்டமாக எதிரொலிக்கும் ஒரு சாதனையைக் காணலாம்.

இதன் நடை உயிர் உடையது, கதை ஓட்டம் உடையது, கதைப் பாத்திரங்களோ நம்முடன் தினந்தோறும் வந்து வந்து பேசும்

பழக்கமானவர்கள். நிகழ்ச்சிகளும் நம் கண்முன்னே நடப்பது போலவே இருக்கின்றன.

எனவே, பிரதாபமுதலியார் சரித்திரம், 'சுகுண சுந்தரி' இந்த இருவர்களுடைய கதைப் பேச்சும், செயலும் நம்மிடயே கலந்து விடுகின்றன போல காட்சிதருகின்றன. ஆதலால், இந்த கற்பிதக் கதைகள் நாவுக்கு நயம், செவிக்குத்தேன்; மனதுக்கு மகிழ்ச்சி; அறிவுக்கு வளர்ச்சி, பொழுது போக்கிற்கு ஒரு புரட்சி.

பிரதாபமுதலியார் சரித்திரம் ஒரு ரொமான்ஸ் கதைதான். என்றாலும், வீரம், காதல் பயம், பொறாமை முதலிய மானிட உணர்ச்சிகளின் எதிரொலியாய் தென்படுகின்றது. ஒன்றுக்கு ஒன்று ஒவ்வாது முரண்பட்ட மானிட இயல்புகளின் போராட்டமாய் கதை நகர்கிறது.

வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டதுதான் நாவல்! ஆனால், அது வாழ்க்கையைத் திருத்துவதற்கும் உதவுகிறது. அது, பிரசாரக் கருவியாய் எழுதப்படுவதல்ல; சமூகம், அரசியல் பிரச்சனைக்ளை விளக்க அல்லது தீர்க்க எழுதப்படுவதல்ல அது. என்றாலும், சீர்திருத்தங்களுக்கு அனுகூலமான மனப்பான்மையை அது உண்டு பண்ணுகிறது.

சமூக ஊழல்களைப் பரிகாசம் செய்ய அது ஏற்பட்டதல்ல; என்றாலும், குற்றங் குறைகளை அது நையாண்டி செய்கிறது. ஒழுக்கத்தை ஓம்புவதோ போதிப்பதோ அதன் கடமையல்ல; செய்திகளைச் சித்தரிக்க வேண்டுமே அன்றி, சரியா தப்பா என்று எடை போடக் கூடாது. என்றாலும், ஆசிரியனுடைய செய்தி றனால், சம்பவங்கள் இணைப்பால் அது போதித்து விடுகிறது.

ஆசிரியனுடைய அனுதாபங்களும், கருத்துக்களும், உணர்ச்சி களும் எப்படியும் இடம் பெற்று, வாசகர்களின் மனத்தைக் கிளறி விடுகிறது.

நவீனம் அல்லது நாவல் என்பது தத்துவ நூலல்ல; எனினும், மெய்ப் பொருள் அறிவு அதிலே இடம் பெறாமல் இல்லை. பிரதாப முதலியார் சரித்திரம் தமிழருடைய வாழ்க்கைச் சித்திரம்;

## *பிரதாப முதலியார் சரித்திரம்!*

பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நவீனத்தில், வேதநாயகம் பிள்ளை சமுதாயத்தில் கண்டத்தையும் கேட்டதையுமே வைத்துக் கதை பின்னியுள்ளார். தமது கதைக்கென்று அவர் தேர்வு செய்த சம்பவங்கள், அழகும் சுவையும் கூடியன. உயிரோட்டமுடையது; உறுதியான உண்மைகளை உரைப்பது; உள்ளத்தைக் கிளறி, உணர்ச்சியைத் தூய்மை செய்கிறது.

கதையைக் கையாளும் முறையிலே, மக்கள் இடையே காணப்படும் முரண்பாடுகள், பூசல்கள், எதிர்ப்புக்களை சமரசப் படுத்தி, அவற்றினூடு மறைந்து கிடக்கும் இசைவை வெளிக் கொணர்ந்து விளக்குகிறார் வேதநாயகர்.

தற்போதைய தமிழ் எழுத்தாளர் சிலர் தங்களைச் சூழ்ந்துள்ள காட்சி நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பார்த்து, அல்லது தாம்கண்ட கேட்டவற்றைத் தம் நினைவிலே இருந்து தேர்வு செய்து, தொகுத்து, தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்களைக் கதையிலே மறைக்கு எழுதுகிறார்கள்.

வேறுசில எழுத்தாளர்கள், வாழ்க்கையிலே காணப்படும் அனைத்தையும் நல்லது கெட்டது, பெரியது சிறியது எதுவும் -மிச்ச மின்றி பட்டப் பிடிப்பாக எழுதுகிறார்கள்.

இன்னும் சிலர், ஆபாசங்களை, அவலட்சணங்களை அளவுகடந்து மிகைப்படுத்திச் சித்தரிக்கின்றார்கள். மேலும் சிலர், கோபம், பொறாமை, காமம் போன்ற கீழ்த்தர உணர்ச்சிகளைத்

தூண்டி, அல்லது திடுக்கிடும் சம்பவங்கதைத் திணித்து, எழுதுகிறார்கள்.

ஆனால், வேதநாயகம் பிள்ளை கனிந்த அவருடைய கற்பனையிலும், முதிர்ந்த அனுபவத்திலும், தெளிந்த புலமையிலும் உருவாக்கிய பிரதாப முதலியார் சரித்திரம் வாழ்க்கையை எடுத்துக் காட்டி, நாம் வாழ்வதற்கு உதவுகிறது. வாழ்க்கைச் சிக்கல்களை அலசி, அவற்றைத் தீர்த்து வைக்கிறது. அனாயாசமாக அறிவூட்டி, இதயத்தை எளிதிலே நெகிழ வைத்து, ஆன்ம வளர்ச்சிக்கு உதவுவதிலே பிரதாப முதலியார் சரித்திரத்திற்கு இணையாக வேறு நூலைக் கூற முடியாது.

இவ்வளவு அரிய சாதனைகளை வேதநாயகம் பிள்ளை தமது புதினத்திலே செய்து காட்டி அந்த நூலை வரைந்துள்ளார்.

## சுகுண சுந்தரி

வேதநாயகம் பிள்ளை தமிழில் எழுதிய இ ;ண்டாவது நாவல் இது. இந்நூல் 1887 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூலும் முதல் நூலைப் போல ராஜாராணி மரபிலேயே எழுதப்பட்ட நூலாகும்.

வேதநாயகரின் முதல் கற்பனைக் கதையான பிரதாப முதலியார் சரித்திரம் எனு'ம் நூலில் ஏறக்குறைய ஆயிரம் பழமொழிகள் இடம்பெற்றுள்ளதைப் போல சுகுண சுந்தரியில் அவ்வளவு இடம் பெறவில்லை.

சுகுண சுந்தரி என்ற புதினத்தில் பால்ய விவாகக் கொடுமை, ஏன் பெண்கல்வி வேண்டும் ஆன்மிக அறிவுரைகள் போன்ற சமுதாய முற்போக்குக் கருத்துக்களை அப்போதே சிந்தித்ததற்கு அடையாளமாக வேதநாயகர் வீர-உலா வருகிறார்.

## சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்

தமிழ் நாடு வளர்த்த கலைகளிலே இசை என்பது தலை சிறந்த ஒன்று. இது மிகவும் சிறந்த, மேன்மையான கலை என்பது மட்டுமல்ல; கல்லையும் கனியவைக்கும் சக்தி பெற்றது. இதனைச் சங்கீதம் என்பர் சிலர், கவின் கலை என்பர் பலர்! தமிழர் இதனை யாழோர் மறை என்பர்! வேறுசிலர் கந்தருவ வேதம் என்றும் கூறுவார்கள்.

பாடல், இசை, நாட்டியம் என்ற மூன்றும் சேர்ந்ததே சங்கீதம். இப்போது நாட்டியம் தனி சாதியாக்கப்பட்டு விட்டது. பாடலும் இசைக்கருவிகளும் இணைந்ததே இப்போது சங்கீதம் எனப்படுகிறது.

தமிழ்நாட்டுப் பாணர்கள், விறலியர்கள் மன்னர்களை, மிராசுகளை, ஜமீன்களை, குறுநில அரசர்களை, செல்வர்களை நாடிச் சென்றே பாடல்பாடி, யாழிசை இசைத்து பரிசுகளைப் பெறுவார்கள். தமிழ் மக்கள் இடையே இசை ஞானம் சங்ககாலத்தில் மேம்பட்டிருந்தது.

ஆனால், இசைக்கென்றும், நாடக, நாட்டியத்திற்குமாக அமைந்துள்ள சிலம்பு நூலில் கூறப்படும் இசைவகை, அதன் வளம், விரிவுகள், பிரிவுகளைப் பார்க்கும்போது நாம் வியப்படைகின்றோம். பழந்தமிழ்ப் பண்கள், உருக்கள், திறங்கள், உருமாறி, பெயர்மாறி, பிறகாலத்தில் அது கருநாடக சங்கீதமாக மாற்றப்பட்டு விட்டது. தமிழ் இசைப் பெருமை தரை மட்டமாய் தேய்க்கப்பட்டு விட்டது.

கருநாடக சங்கீதத்திலே சாகித்தியங்களை வகுத்துப் புகழ் பெற்றவர்கள் சியாமா சாஸ்திரி, தியாகையர், முத்துசாமி தீட்சதர். இவர்கள் 18 - 19 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் இசைத்துறை

தர்பார் நடத்தியவர்கள் இவர்களுடைய பாடல்கள் தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளிலே பிறந்தவை. ஆனால் இவர்கள் வாழ்ந்தது தமிழ் நாட்டிலே! தஞ்சை மாவட்டம் தான் இந்த மும்மூர்த்திகளின் சங்கீதப் பண்ணையாக இருந்து வந்தது.

## தமிழிலே இசைப் பாடல்

தமிழ் மொழியிலே பிறந்த இசைப் பாடல்கள் எல்லாம் புராணக் கதைகளைப் பற்றியே எழுந்தன; இதிகாசக் கதைகளையே இசைத்தன. எடுத்துக் காட்டாக இராம நாடகம், கந்த புராணம் கீர்த்தனைகளைக் கூறலாம். கோபாலகிருஷ்ண பாரதியார் கூட நந்தனார் கதையில் சில மாற்றங்கள் செய்து நந்தனார் கீர்த்தனைகளை இயற்றினார்! அதற்காகப் படாத துன்பங்களையும் அனுபவித்தார்.

தியாகையர் போன்றவர்கள் முயற்சிகளால் தமிழ் புறக் கணிக்கப் பட்டு, சங்கீதத்துக்குரிய மொழி தெலுங்கே என்று பசிரங்கமாகப் பிரகடனமானது. தியாகையர் தனது பாடல்களைத் தெலுங்கு மொழியிலே எழுதினார். அப்பாடல்கள் தெருத்தெருவாகவும், பெருமையோடும் பாடப்பட்டது.

வேதநாயகம் பிள்ளை கொதித்து எழுந்தார்! காரணம், அவர் தமிழர்! அதனால், தனது தாய் மொழியிலே இசைப் பாடல்களை நூற்றுக் கணக்காக எழுதினார். சமயச் சார்பின்றி எவர் மனமும் புண்படாமல் பண்பட்ட உள்ளத்தோடு, பொதுவாகச் சமுதாயம் முழுமைக்குமாக, சாகித்தியங்களை வேதநாயகம் பிள்ளை எழுதினார்.

தியாகையர் தனது தெலுங்குக் கீர்த்தனைகளால் இராம பக்தியை வளர்த்தார்.; கோபால கிருஷ்ண பாரதியார் தனது பாக்களால் சிவ பக்தியைப் பரப்பினார். அதே நேரத்தில்,

கிறித்தவரான வேதநாயகம் பிள்ளை தமிழில் பாடிய சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள் என்ற பாடலை கோபால கிருஷ்ண பாரதியார் மதிப்பும் மரியாதையும் காட்டி, சமயக் காழ்ப்பின்றி அரங்கேற்றி னார்! அவர்போகும் தெருக்களிலே, பிரபுக்கள் முன்னிலையிலே திருவிழாக் காலங்களிலே பாடி வளர்த்தார்.

வேத நாயகம் பிள்ளை நீதிபதி மட்டுமல்ல; தமிழிலே நூற்றுக் கணக்கான அரிய உருப்படிகளை இயற்றினார். ராக பாவம் சனரஞ்சகமாக விளையாடிடும் இவருடைய உருப்படிகளிலே அபூர்வ ராகங்களும் காணப்படுகின்றன். ஒரே ராகத்தில் இவர் இயற்றிய பல பாடல்களையும் பார்த்தால், அவை ஒவ்வொன்றும் தனித்தனி அமைப்புடன் திகழ்வதைக் காணமுடிகின்றது.

இசை வளத்துடன் கூடிய இவை, மனத்தைக் கவரும் வர்ணமெட்டுக்களில் அமைந்துள்ளன. இவருடைய பல்லவி அமைப்பே அருமையானது என்பர் பாடல்களைப் பாடுவோர். சரணங்கள் பல்லவியைத் தழுவி நிற்கும். அவை இசைக்கிசைந்த கமகங்கள், தாளக்கட்டுக்கள் உள்ளவை. இவருடைய உருப்படிகள் இசை கனிந்து சொற்சுவை பொருட் சுவை பொதிந்து, பொருத்தமான தாதுக்களிலே அமைந்து, நாக்குக்கு எளியன வாகவும், செவிக்கு இனியனவாகவும் பரவசப்படுத்துவன.

## உருப்படிகள் என்றால் என்ன?

இசைஞர்கள் பாடிவரும் பாடல்களை உருப்படிகள் என்பார்கள். இசையுடன் கூடித் தாளத்திலே அமைந்த சாகித்தியம் உருப்படியாகும். உருப்படிகளை இயற்றியவர்களை 'வாக்கேயகாரர்' என்பர். இவர்களை மக்கள் இசைப் புலவர் என்று அழைப்பார்கள். வேதநாயகம்பிள்ளை சிறந்த இசைப் பலவர் ஆவார்.

சங்கீதத்திலே வழங்கும் உருப்படிகளை மூன்று பிரிவாக வகுக்கலாம். ஒன்று, வாய்ப் பாடலுக்கு அமைந்தவை; மற்றது கருவியிலே வாசிப்பதற்குத் தகுந்தவை; ஏனையது நாட்டியத்துக்கு ஏற்றவை. இவற்றுள் வேதநாயகத்தின் இசைப்பாடல்கள் பாடுதற்கமைந்தவை. இவை இசையை முதன்மையாகக் கொண்டவை அல்ல; நாட்டியத்துக்குத் தக்கவை அல்ல. சமுதாயத்திலே நல்லொழுக்கம், நல்லுணர்ச்சிகளை இசைப் பாடல்கள் மூலம் பரப்புவதே வேதநாயகம் பிள்ளையின் குறிக்கோள்.

## *பாட்டும் கீர்த்தனையும்!*

உருப்படிகளிலே எளிமையானது கீதம். ராகத்தின் களையையும் சஞ்சாரக் கிரமங்களையும் கீதம் நன்கு விளக்கும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற உறுப்புகள் கீதத்திலே இல்லை. சங்கதிகள் அதிலே வராது. தாதுக்கள் எளிய நடையிலே அமைந்திருக்கும்.

## *கீதம் என்றால் என்ன?*

கீதம் இருவகைப் படும். சாமானிய கீதம் ஒன்று; இதன் சாகித்தியம் கடவுள் வணக்கமாக அமைந்திருக்கும்; ஏனையது, இலக்கண கீதம். எந்த ராகத்தில் கீதம் அமைகிறதோ, அந்த ராகத்தின் இலக்கணத்தை இதன் சாகித்தியம் விளக்கும்.

கீதம் என்பது பாடல், ஆனால், சங்கீதத்திலே கீதம் என்பது மேலே சொன்ன பண்புகளையுடைய பாடலை மட்டும் குறிக்கும். கீதங்களை இயற்றியவர் புரந்தரதாசர், கோவிந்த தீட்சிதர், வேங்கடமகி போன்றவர்கள்.

கன்னடம், தெலுங்கு, வடமொழிகளிலே மேற்கண்டவர்கள் கீதங்களை எழுதினார்கள். ஆனால், வேதநாயகம் பிள்ளை எழுதிய

கீதம் கீதங்களுக்கே வேராக விளங்கியது. இவருடைய பாடல்கள் சிலவற்றிலே கீதங்களின் வளர்ச்சியைப் பார்க்கிறோம்.

## *சருவசமையக் கீர்த்தனைகள்*

வேதநாயகம் பிள்ளையின் கீர்த்தனைகள், இயல் தமிழுக்குரிய இலக்கண அமைதிகளுடன், இசையமைதியும் பொருந்தி, சன்மார்க்கத்தை வளர்ப்பன; பாடுபவரையும் கேட்பவரையும் பரவசப்படுத்துபவன. அதனால் அக்காலத்திலே எங்கெங்கு விழாக்கள் நடக்குமோ, அங்கங்கே இவருடைய கீர்த்தனைகளைப் பாடும்படி சபையோர் விரும்பினர்; பாடுதற்கு இசைவாணரும் ஆசைப்பட்டார்கள். சங்கீத சாகித்திய வித்துவான்கள் அவற்றை ஆச்சரியப்பட்டுப் போற்றினார்கள்.

உத்தியோகத்தர்களும், வழக்குரைஞர்களும் சங்கீத ஞானம் உள்ளவர்களும் தாமே மனப்பாடம் செய்து ஆர்வம் ததும்ப அவற்றைப் பாடுபவரர்கள். அவரவர் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுத்துப் பாடவைப்பார்கள்.

இத்தகைய பணிகளால் கீர்த்தனைகளின் எளிய நடை, இனிய இசைப் பெருக்கு, தொடர்ந்த பொருட்சிறப்பு முதலிய அழகிய அமைப்புகளாலும் அவை, தமிழகம் முழுவதும் அந்தக் காலத்திலே பெருகி வழங்கின.

அப்போது நடந்து கொண்டிருந்த தாது வருடத்திலே கொடிய பஞ்சம் வந்தது. வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கஞ்சித் தொட்டிகளை அமைப்பித்து, வேதநாயகம் நாள் தோறும் கஞ்சி வார்க்கச் செய்தார். அதனால், பல ஏழைகள் உயிர் பிழைத்தார்கள்.

வேதநாயகம் பிள்ளையின் சாதனையைக் கண்ட கோபால கிருஷ்ண பாரதியார் என்ற மேதை, 'நீயே புருஷமேரு' என்று தொடங்கும் கீர்த்தனையைப் பாடி மக்களையும் மகிழச் செய்தார்.

அதே நேரத்தில் பஞ்சத்தைப் பற்றி வேதநாயகம் பிள்ளை பாடிய இசைப் பாடல் அக் காலத்தில் தன்னிகரற்று விளங்கியது; மக்கள் ஆதரவு பெருகியது. கோபால கிருஷ்ண பாரதியாரும் இந்தப் பஞ்சப் பாடலை மக்களிடம் இசையமைதியோடு பாடி மகிழ்வித்தார். அப்பாடல் இது;

திசிரசாதி - மத்திய தாளம்.

இராகம் : உசேனி

பல்லவி

பஞ்சம் தீர் ஐயா! உனை அன்றித்
தஞ்சம் ஆர் ஐயா (-பஞ்சம்தீர்)

அனுபல்லவி

வஞ்சக மேகம் உலோபர்கள் போல
மண்ணில் மழை பொழி - யாமையினாலே

சஞ்சல மாகித் தளர்ந்தோம் மேன்மேலே
சாமி! கதி உன்தன் தாமரைக் காலே (-பஞ்சம் தீர்)

சரணம்

எட்டு நாள் பத்துநாள் பட்டினியோடே
இடையிலே கந்தை இருக்கையில் ஓடே
ஒட்டி உலர்ந்த உடல் என்புக் கூடே
ஒரு கோடிபேர்கள் வசிப்பது நாடே

ஊரும் இல்லாமல், - குடிக்கத் தண்
நீரும் இல்லாமல், - அன்னம் எனும்
பேரும் இல்லாமல், - பசி தீர்க்க

ஆரும் இல்லாமல்

பாரில் அனேகர் பரதேசி ஆனாரே

ஊரில் அனேகர் உயிர்மாண்டு போனாரே!

-பஞ்சம்தீர் ஐயா

இந்தப் பாடல் தாது வருஷப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனத்தைரியத்தைக் கொடுத்தது. பஞ்சத்தை எதிர்த்துப் பணம் திரட்டிடும் ஊக்கத்தை ஊட்டியது; பஞ்சத்தை எதிர்த்து வேதநாயகம் பிள்ளையின் பாடலை பஞ்ச எதிர்ப்புப் பரணியாக, பாடியபடியே அவர்கள் ஊர் தோறும் வலம் வந்து கஞ்சித் தொட்டிகளைக் கண்காணித்தார்கள்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் இவ்வளவு சாதனைகளும் தமிழ் மக்களுக்கு பெரும் விழிப்பை விளைவித்தன. எண்ணிலடங்கா செயல்களை ஒழுக்கத்தின் சீலத்திலே, அறத்தின் அடிப்படையிலே, மனிதநேய சகோதரத்துவ மாண்பிலே; தாய் மொழிக்காக தளராமல் பணிகளிலே அவர் ஈடுபட்டு; ஓயாத உழைப்பிலே ஓடாய் தேய்ந்து இறுதியிலே தனக்கென எந்தச் சுகபோகத்தையும் நாடாமல், நாட்டுக்காக, மொழிக்காக தமிழர்களுக்காக செயற்கரிய செயல்களைச் செய்து மறைந்த மாவீரர் மாயூரம் முன்ஃசிப் வேதநாயகம் பிள்ளையை எந்தத் தமிழனும் மறக்கமாட்டான்! வாழ்க வேத நாயகர் திருப்பெயரும், திருத்தொண்டும்!

❖ ❖ ❖